பொது நூலகம்
கோண்டாவில்
...வார் பிரதேச சபை

விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 007 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 17, வியாழக்கிழமை 03.12.2015

29°c - 29°c
மழைக்கான சாத்தியம் உண்டு

**பெரு வெள்ளத்தில் மிதக்கிறது தமிழகம்**



பக்கம் 15

# இலங்கை மீது வெளிநாடுகள் பெரும் மதிப்பு

## நாடாளுமன்றில் மங்கள பெருமிதம்

கொழும்பு, டிசெம்பர் 3
சர்வதேசத்தின் நன்மதிப்பை நாம் பெற்றுள்ளோம். ஜெனிவாவில் எமக்கு ஆதரவு வலுத்தன. சர்வதேச விசாரணை கைவிடப்பட்டுள்ளது. முழு உலகமும் எம்மை நோக்கி நேசக்கரம் நீட்டுகின்றன. குறுகிய காலப் பகுதியில் நாம் புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கியுள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
அத்துடன், 2016 இல் நாடாளுமன்றை அரசமைப்புச் சபையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
மகிந்த ஆட்சியால் 10 வருடங்களில் செய்துமுடிக்க முடியாத பல விடயங்களை நாம் 100 நாள்களில் செய்து முடித் தோம். முன்னர் வெள்ளை வான் கலாசாரம் கோலோச்சி இருந்தது. ஊடக சுதந்திரம் இருக்கவில்லை. ஆனால், இன்று ஊடக சுதந்திரம் பேணப்படுகின்றது. எனினும், சில இணையத்தளங்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை மிகவும் கீழ்த்தரமாக விமர்சிக்கின்றன. திட்டமிட்ட அடிப்படையில் செய்திகள் தயாரிக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்படுகின்றன. இவ்வாறு செய்யப்படுகின்றது என்பதற்காக எவரும் நான்காம் மாடிக்கு அழைக்கப்படு பக். 24



> “இன்று ஊடக சுதந்திரம் பேணப் படுகின்றது. எனினும், சில இணையத் தளங்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை மிகவும் கீழ்த் தரமாக விமர்சிக்கின்றன. இவ்வாறு செய்யப்படுகின்றது என்பதற் காக எவரும் நான்காம் மாடிக்கு அழைக் கப்படுவதில்லை.”

## கோத்தாவின் உத்தரவில் தடுப்பில் கைதிகள்

கொழும்பு, டிசெ.3
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவுக்கு அமைய, பூசா தடுப்பு முகாமில் 4 பேர் கடும் பாதுகாப்புடன் மிகச் சிறிய இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அவர்கள் கடும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். பக். 25

### முச்சந்தி முரளி



கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத் தானுங்கோ....

## கிளிநொச்சியில் எலிக் காய்ச்சல் அபாயம்

கிளிநொச்சி, செப். 3
கிளிநொச்சி மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பதாகவும், இதனால் விவசாயிகளை அவதானமாகச் செயற்படுமாறும் கிளி நொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மருத்துவர் ஜெயராசா தெரிவித்துள்ளார்.
காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட் பக். 24

## டெங்குத் தொற்றால் நாளாந்தம் 20 பேர் வைத்தியசாலைகளில்

யாழ்ப்பாணம், டிசெ. 3
மழைக்காலம்ஆரம்பித்துள்ள நிலையில், டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நாளாந்தம் 20 பேர் வரையில் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர் என்றுவைத்தியசாலைப்பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
கடந்த ஒக்ரோபர் மாதத்தை விட கடந்த நவம்பர் மாதமே பக். 22



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒதியமலைக் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 32 பேரின் 31ஆவது நினைவு நாள் நேற்று அவர்களது உறவினர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வு முல்லைத்தீவு ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. பொது மக்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-21)

## மோட்டர் கிடங்கிலிருந்து இருவர் சடலமாக மீட்பு

### உடுப்பிட்டியில் நேற்றுச் சம்பவம்

உடுப்பிட்டி, டிசெ.3
வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் வீடொன்றின் மோட்டர் கிடங்குக்குள் இருந்து இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
இவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனரா அல்லது விஷ வாயுக்கசிவின் காரணமாக உயிரிழந்தனரா என்ற கோணங்களில் விசாரணைகள் இடம்பெறுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
சடலமாக மீட்கப்பட்டவர்கள் புலோலிப்பளை, உபய கதிர்காமத்தைச் சேர்ந்த மதுரநாயகம் மகாநாயகம் (வயது- 56) உடுப்பிட்டிப் பகுதியை சேர்ந்த இராசையா கிருஸ்ணமூர்த்தி (வயது - 61) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பக். 24

## இந்திய இராணுவத் தளபதி நேற்றுத் திருமலை பயணம்



யாழ்ப்பாணம், டிசெ. 3
இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக வருகை தந்துள்ள, இந்திய இராணுவத் தலைமைத் தளபதி தல்பீர் சிங், நேற்றைய தினம் திருகோணமலைக்குச் சென்றுள்ளார். அங்கு திருக்கோணேஸ்வர ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளிலும் அவர் பங்கெடுத்துள்ளார்.
இலங்கைக்கு வருகை தந்துள்ள, இந்திய இராணுவத் தளபதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வட பகுதிக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். இருப்பினும் காலநிலை சீரின்மை காரணமாக அவரது யாழ்ப்பாண - பக். 24

## ஏ-32 நெடுஞ்சாலையை மேவிப் பாய்ந்த வெள்ளம்

### மன்னார்-யாழ். போக்குவரத்து தடைப்பட்டது





மன்னார், டிசெ 3
மன்னார்- யாழ்ப்பாணம்ஏ-32நெடுஞ் சாலையில் உள்ள மண்டைக்கல்லாறு பாலம் மேலாக வெள்ள நீர் பாய்ந்தோடுவதால் குறித்த வீதியூடான போக்குவரத்து நேற்று முற்றாகத் தடைப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பெய்து கொண்டிருக்கும் கனமழை பக். 25

## பட்ஜெட் 2ஆம் வாசிப்பு 107 வாக்குகளால் வெற்றி

கொழும்பு, டிசெ.3
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2016ஆம்நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 107 மேலதிகவாக்குகளால் நேற்று நிறை பக். 24

## நிறைவேற்றதிகாரத்தை குறைக்க மைத்திரி உறுதி

### சமந்தா பவர் தெரிவிப்பு

நியூயோர்க், டிசெ.3
இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது நிறைவேற்று அதிகாரத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக எம்மிடம் உறுதியளித்தார்.
இவ்வாறு அமெரிக்காவின் ஐ.நாவுக்கான தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. பாதுகாப்புச் சபையின் டிசெம்பர் நிகழ்வுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பக். 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் 469 குடும்பங்களே மீள்குடியமர்வு

## அடிப்படை வசதிகள் இல்லாமையே ஏனையோர் பின்னடிப்பதற்கு காரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

விடுவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீள்குடியமர்வுக்குப் பதிவுசெய்துள்ள 1247 குடும்பங்களில் இதுவரை 469 குடும்பங்களே மீள்குடியமர்ந்துள்ளன. யாழ். மாவட்டத்தில் போர்க்காலப்பகுதியில் படையினரால் சுவீகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பகுதி தற்போது பகுதி பகுதியாக விடுவிக்கப்படுகின்றது. இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள ஆயிரத்து 38.04 ஏக்கர் நிலப்பரப்பிலேயே குடியமர்ந்த மக்கள் தொடர்பான இந்தத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

இதன்படி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள ஒன்பது கிராமசேவகர் பிரிவுகளிலும் 638.04 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஜே/284 வளலாய் கிராமசேவகர் பிரிவில் இறுதியாக 400 ஏக்கர் நிலப் பகுதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்வதற்காக தெல்லிப்பழை பிரதேசத்தில் பதிவு செய்துள்ள 870 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து பத்து உறுப்பினர்களில் 366 குடும்பங்கள் மட்டுமே மீள்குடியமர்ந்துள்ளன. அத்துடன் வளலாயில் பதிவுசெய்த 377 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 237 உறுப்பினர்களில் 103 குடும்பங்களே மீள்குடியமர்ந்துள்ளன.

> சீரான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாதமையே பதிவுசெய்தவர்களில் பகுதியளவு குடும்பங்கள் மட்டும் மீள்குடியமர்ந்தமைக்கான காரணங்களாக சுட்டப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் சீரான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாதமையே பதிவுசெய்தவர்களில் பகுதியளவு குடும்பங்கள் மட்டும் மீள்குடியமர்ந்தமைக்கான காரணங்களாக சுட்டப்பட்டுள்ளன. முக்கியமாக முழுமையான பாதுகாப்பு முறைகள், வீட்டு வசதிகள், மலசலகூட வசதிகள், சுகாதார வசதிகள், கல்வி மற்றும் தொழில் ஏற்பாடுகள் முதலானவை செய்து கொடுக்கப்படாதுள்ளமை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-ரி5)

# நள்ளிரவு சாராயம் தராததால் சாவகச்சேரி பொலிஸ் கோபம்

## வீட்டுக் கேற்றையும் சேதப்படுத்தியதுடன் மோ.சைக்கிளையும் கொண்டு சென்றனர்!

யாழ்ப்பாணம், டிசெ. 3

மதுபான நிலைய உரிமையாளர் ஒருவரின் வீட்டுக்கு நள்ளிரவில் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் மதுப்போத்தல் தருமாறு வற்புறுத்தியுள்ளனர். அவர் வழங்க மறுத்ததால் அவரது வீட்டின் கேற்றை அடித்துச் சேதமாக்கியதுடன், அவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி டச்சு வீதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நடந்துள்ளது.

புனர்வாழ்வு பெற்று வரும் குறித்த மதுபான நிலைய உரிமையாளர் தனது மகளின் மருத்துவ சிகிச்சைக்காக சாவகச்சேரிக்கு வந்துள்ளார். இந்தநிலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அவரது வீட்டுக்கு நள்ளிரவில் சென்ற பொலிஸார் நடந்து கொண்ட விதம் தொடர்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. அது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அதன் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பில் உரிய தரப்பினரிடம் விளக்கம் கோரவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கூறப்பட்டதாவது–

முக்கியமான விருந்து ஒன்று நடைபெறுவதால் 5 போத்தல் மதுபானம் வழங்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். அப்போது அவர்கள் சிவில் உடையில் இருந்துள்ளனர். மதுபான நிலைய உரிமையாளர் மதுபானம் கொடுக்கவில்லை. அதையடுத்து சீருடை அணிந்த பொலிஸார் மற்றையவர்களுக்கு உதவ வந்துள்ளனர். சீருடையுடன் கேட்டும் மதுபானம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மதுபான நிலைய உரிமையாளர் பயம் காரணமாக வீட்டைப் பூட்டிவிட்டு உள்ளேயே இருந்துவிட்டார்.

அதனால் பொலிஸாருக்குக் கோபம் வந்துள்ளது. அவர்கள் அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைத் தூக்கித் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். அத்துடன் வீட்டுக் கேற்றிலும் தமது பலத்தைக் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த உரிமையாளர் புனர்வாழ்வு பெற்று வருகின்றார். தனது மகளுக்குச் சத்திர சிகிச்சை ஒன்று நடந்ததால் மூன்று நாள் விடுமுறை பெற்று மகளைப் பார்க்க வந்துள்ளார். இந்த நிலையிலேயே பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டுள்ளனர். (ற-4)

# மூன்றாம் தவணை விடுமுறை 5ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ.3

வடக்கு மாகாணப் பாடசாலைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் மூன்றாம் தவணை விடு முறைக்காக மூடப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். எதிர்வரும் 4 ஆம் திகதியுடன் வெள்ளிக்கிழமை பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் செந்தூரன் உயிர் துறந்ததை அடுத்து அனுதாபம் தெரி விக்கும் வகையில் கடந்த 27 ஆம் திகதி வடக்கு மாகாணப் பாடசாலைகள் மூடப்பட்டன. அன்றைய நாளுக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி பாடசாலை நடைபெறவுள்ளது. அன்று வடக்கின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படும் என்று செயலாளர் தெரிவித்தார். (ற-4)

# சூனியம் என பணம் கறந்தவர் மறியலில் எண்ணுகிறார் கம்பி

சாவகச்சேரி, டிசெ.3

பில்லி சூனியம், செய்வினை என்று கூறிப் பொதுமக்களிடம் பெருந்தொகைப் பணத்தைக் கறந்த ஒருவர் தற்போது கம்பி எண்ணுகின்றார்.

குறித்த நபரைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

கோண்டாவில் மற்றும் சங்கானை ஆகிய இடங்களைச் சேர்ந்த (குறித்த நபருக்கு இரு தாரம்) இந்த நபர் பில்லி சூனியம், செய்வினை ஆகியவற்றில் நம்பிக்கையுள்ளவர்கள் சென்றால் முதலில் மருந்து கொடுத்து விடுவாராம். அதை உட்கொள்பவர்கள் அந்த மருந்தால் ஏற்படும் மாற்றத்தைக் செய்வினை, சூனியம் என்று கண்டு பதறத் தொடங்க, மந்திரம் மூலம் குணமாக்குவதாகப் பெருந்தொகைப் பணத்தைக் கறந்து விடுவாராம். பாதிக்கப்பட்டவர்கள் அதன்பின்னர் வேறு மந்திரவாதிகளிடமும் அலைந்து பணத்தை இழந்துள்ளனர்.



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருவர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். அதையடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து விசாரித்துள்ளனர். அதன்பின்னர் நேற்று அவரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு

சாவகச்சேரி, டிசெ.3

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இன்று முதல் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு, மந்துவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நலன்புரிய நிலையங்களில் தங்கியியுள்ள குடும்பங்களுக்கு அந்தந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிவாரணஉலர்உணவுப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கு இதுவரை எந்த நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந்தனர். இந்தநிலையில் தற்போது மாவட்ட செயலகம் நிவாரணத்துக்குரிய நிதியை வழங்கியுள்ளதை அடுத்து, நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# முன்பள்ளிக்கு வழங்கப்பட்ட பாலில் புழு; சோடிக்கப்பட்ட கதை என்கின்றது சங்கம்

## மேலதிக விசாரணைகள் நடைபெறும் என்று கூறுகிறது சாவகச்சேரி பிரதேச செயலகம்

யாழ்ப்பாணம், டிசெ.3

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள முன்பள்ளிக்கு போசாக்கு உணவாக வழங்கப்பட்ட பாலுக்குள் உயிருடன் புழு காணப்பட்டது என்று முன்பள்ளிவட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பாலில் புழு இருக்கவில்லை என்றும், எனினும் முன்பள்ளியின் பால் பாத்திரத்திலேயே புழு இருந்திருக்கக் கூடும் என்றும் தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவர் எ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 83 முன்பள்ளிகளுக்கும் பிரதேச செயலகத்தால் அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கான போசாக்கு உணவாக தினமும் பால் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சாவகச்சேரி நகரையண்டிய பகுதிகளில் காணப்படும் முன்பள்ளிகளுக்கு தினமும் சாவகச்சேரியிலுள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் பால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையிலேயே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 30ஆம் திகதி சாவகச்சேரி பூவேந்தர் முன்பள்ளி மாணவர்களுக்கு சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட பாலிலேயே புழு காணப்பட்டது என்றும், வழமை போன்று பாலை வடிகட்டிப் பெற்றபோது வடிகட்டியில் (வழி) புழு காணப்பட்டது என்றும் உடனடியாக முன்பள்ளி மாணவர்களுக்கான பாலைப் பெற்றுக்கொள்ளாமல் ஆசிரியர்கள் திருப்பி அனுப்பினோர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இந்த விடயம் தொடர்பாக யாரும் வந்து பார்க்கவில்லை என்றும் முன்பள்ளி வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் கேட்டபோது, தாம் வழங்கிய பாலில் புழு காணப்படவில்லை என்று தெரிவித்தனர்.

முன்பள்ளியினர் பால் பெற்ற பாத்திரத்திலேயே புழு காணப்பட்டிருக்கலாம். சம்பவதினத்தன்று வழமைபோன்று 20 லீற்றர் பால் முன்பள்ளிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக குறித்த முன்பள்ளி தவிர்ந்த ஏனைய முன்பள்ளிகளில் நடத்திய விசாரணையில் பால் பழுதடைந்தமை மற்றும் புழு காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த தினத்தில் பால் பழுதடைந்தமைக்கான எந்த முறைப்பாடும் கிடைத்திருக்கவில்லை . இந்த விடயம் தமது சங்கத்தின் பெயரைக்கெடுப்பதற்காக வேண்டும் என்றே சோடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசெயலகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது–

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள முன்பள்ளிக்கு வழங்கப்பட்ட பாலில் புழு காணப்பட்டது என்று தமக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அது சங்கத்தால் உறுதி செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பான பிரதேச செயலகத்தின் மேலதிக விசாரணைகள் நாளை சாவகச்சேரி பிரதேசசெயலர் தலைமையில் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களை வலுவூட்டும் செயல் திசை மாறக்கூடாது

## ஆனந்தசங்கரியின் கோரிக்கைக்கு வடக்கு முதலமைச்சர் பதில்

யாழ்ப்பாணம், டிசெ. 3
உட்கட்சி மோதல் மற்றும் கருத்து முரண்பாடுகளினால், எமது மக்களை வலுவூட்டும் செயற்பாடு வேறு வழியில் திசை திருப்பப்படுவதைத் தவிர்க்கவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் தேவைகருதி தமிழ் மக்களின் இன்றைய சூழ்நிலையில் சிங்களத் தலைவர்களுடன் பேரம் பேசும் தலைமையை வளர்க்கும் நோக்கில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை பொறுப்பேற்க வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்வரவேண்டும். முதலமைச்சர் கட்சியின் செயலாளர் யார் என்று சொல்கின்றாரோ அவரே செயலாளர்" இவ்வாறு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி இணைய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சர் வழங்கியுள்ள பதிலில், அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒருமித்து நின்று அர்ப்பணிப்புடனும் பற்றுறுதியுடனும் எவருக்கும் விலை போகாமல், சில்லறை இலாபங்களுக்கு சரிந்து கொடுக்காமல், எமது மக்களுக்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும் என்று விரும்புகின்றேன். இதுவே மக்களின் விருப்பமுமாகும்.

எனது சட்டக்கல்லூரி சமகால நண்பர் ஆனந்தசங்கரி எனது அரசியல் செயற்பாடுகள் குறித்து வெளிப்படுத்தி உள்ள கருத்துக்களுக்கும் அவர் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் எனது நன்றிகள். இதை மட்டுமே என்னால் தற்போது கூற முடியும் - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான க.சுரேஸ் பிரேமசந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், ஆனந்தசங்கரியின் வேண்டுகோளை வரவேற்றுள்ளார். அத்துடன் இதற்கு முதலமைச்சரே பதில் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-5-101)

## திருக்கேதீஸ்வரம் சீரமைப்பு குறித்த பிழையான தகவல்களால் வேதனை

### திருப்பணிச் சபை கூறுகிறது

யாழ்ப்பாணம், டிசெ. 3
இந்திய அரசின் உதவியுடன் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் திருப்பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், அது குறித்து பிழையான தகவல்கள் வெளியிடப்படுவது வேதனையளிக்கின்றது என அந்த ஆலயத்தின் திருப்பணிச் சபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

திருக்கேதீஸ்வர ஆலயப் புனரமைப்புக் குறித்து இந்து சமயப் பேரவைக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் கடந்த 30ஆம் திகதி உதயனில் செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது.

இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே திருப்பணிச் சபை மேற்கண்டவாறு கூறுயுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இது குறித்து வெளியான குற்றச்சாட்டுக்கள் தவறானவை. சிவகுமார் நமசிவாயம் ஆலய அறங்காவலர் சபையின் உறுப்பினர். அவரால் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக எங்களுக்கு எவ்வித கடிதமும் அனுப்பப்படவில்லை. அதுமட்டுமல்லாது அவர் ஆலய அறங்காவலர் சபையின் கூட்டத்தில் கலந்து இது பற்றி எடுத்துக் கூறவும் இல்லை.

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற எமது ஆட்சிக் குழுக் கூட்டத்தில் மறுசீரமைப்புப் பணிகள் பற்றி முழு விவரமாக எடுத்துரைக்கப்பட்டு ஆட்சிக்குழுவின் ஏகமனதான அங்கீகாரத்தையும் பெற்றிருந்தோம்.

அந்தக் கூட்டத்தில் சிவகுமார் நமசிவாயமும், திருமதி சந்திரகாந்தி சிவகுமார் நமசிவாயமும் பங்குபற்றியிருந்தனர். ஆயினும், அங்கு எதுவித குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் முன்வைக்கவில்லை.

இந்த நிலையில் அவர்கள் பகிரங்கமாகப் பொய்க் குற்றச்சாட்டுக்களை எடுத்துரைத்திருப்பது தவறானது. மேலும் இதுபற்றி இந்து சமயப் பேரவையோ அதன் தலைவர் பேராசிரியர் சிற்றம்பலமோ பகிரங்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார் என்பதை நம்பமுடியாமல் உள்ளது.

இந்திய அரசின் பேராதரவுடன் திருப்பணிகள் நடைபெறும் இவ்வேளையில், இப்படிப்பட்ட பிழையான தகவல்களை வெளியிட்டு குழப்பங்களை ஏற்படுத்துபவர்களின் நடவடிக்கைகள் மிகவும் வேதனைக் குரியது-என்றுள்ளது. (த)

## ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 3
அல்லைப்பட்டி பராசக்தி வித்தியாலயத்தின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மு.ப 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெ றவுள்ளது.

கிறிஸ்தவ மன்றத் தலைவர் ற.றொசான் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தின ராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஸ்ரனிஸ்லாஸ் கலந்துகொள்ளவுள்ளார். (த-ரி5)

## நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

விசுவமடு மகா வித்தியாலயத்தின் விசுவநாதம்-3 நூல் வெளியிடும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று மு.ப 9.30 மணிக்கு பாடசாலை கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ம.ந.அன்ரன் குலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபனும், பொறியியலாளர் பொ.கெங்கேஸ்வரனும், கிளிநொச்சி விவசாயப் போதனாசி ரியர் ஹே.அமலதீபனும் கலந்துகொள்ளவுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (த-ரி5)

DATA ENTRY OPERATORS
⇨ இத்துறையில் பயிற்சியுடன் அனுபவ சான்றிதழை பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
⇨ எதிர்காலத்தில் 45,000/= மேல் வருமானத்தைப் பெற
* உடனே WINSTAR JOB BANK ஐ நாடுங்கள் *
முதலில் பதிவினை மேற்கொள்ளும் 10 நபர்களுக்கே
* அனுமதி வழங்கப்படும். *
WINSTAR JOB BANK 106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

Galaxy Star
வெற்றி வாரம் 013
திகதி 02.12.2015
10 12 21 40 52
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,265,340/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2707
திகதி 02.12.2015
41 49 54 63 Z 11
ரூ. 12,546,000/-

BITSMANS INSTITUTES
MANIPAY
கல்வியாண்டு 2016
தரம் 3 முதல் 11 வரை தமிழ், ஆங்கில மொழி
சகல வகுப்புக்களும் SUPER GRADE ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
ஆரம்பம் 06.12.2015
ஞாயிறு காலை 8.00 மணி

சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்
கூறுவிலை கோரல்
எமது சபைக்கு பொது வீதி விளக்குகள் பொருத்துவதற்கான பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதால் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. எமது அலுவலகத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று கூறுவிலையினை 10.12.2015ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
03.12.2015
(C/20545) (10.15.17)

A/L CHEMISTRY
* 2016 Inorganic, Organic
* Paper Class
* Physical Theory
* 2017 Inorganic, Theory
ஆரம்பம்: 07.12.2015
ஆசிரியர்: Mr.S.Sureshkumar B.Sc (Hons)
V.C.C K.K.S Road,
T/P: 0775559028

அனுமதி
தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்(written, Spoken, Grammar, Reading) 07.12.2015 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதிகளுக்கு அழையுங்கள்.
தொடர்பு:
077 055 6375 , 077 593 6654
(66566) (12.15.17)

றோயல் அக்கடமி
யாழ்நகர் நல்லூர்
தரம் 6 முதல் O/L வரை
தமிழ் மொழிமூல ஆசிரியர்கள்

| கணிதம் | விஞ்ஞானம் | தமிழ் |
| --- | --- | --- |
| S. பிரகாஷ் M. அகபதி K. றெஜி S. பிரதீபன் | இரா.செல்வ வடிவேல் T. டார்வின் M. றஜிகரன் M. நவஜீவா | பண்டிதர் மு.சு.வே S. சுகந்தன் P. தினேஸ் A. லிங்கராஜ் |
| வரலாறு | ஆங்கிலம் | வர்த்தகம் |
| V. தவதசீலன் R. S. சந்திரன் | S. சந்திரமௌலி V. தயாகரன் | S. நித்தி J. தமிழ்முகன் |
| சுகாதாரம் | புவியியல் | குடியுரிமை |
| R. சந்திரராணா | S. டிலக்ஷன் | N. நந்தீஸ்வரன் |

ENGLISH MEDIUM TEACHERS

| Maths | Science | English |
| --- | --- | --- |
| N. Vimalanathan S.Sutharsan V. Kajan | S.Kobinath S. Kajenthiran P. Niroshan | P. Mathan A.S.Sutharsan J.T.Lesly |
| Geography -Citizenship | Health Science | Spoken English |
| A.Gunasingam S.Johnsan | S.Jagatheeswary | S. Santhiramouli |

ஆரம்பம்: 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை
யாழ்நகர் 07.30 a.m நல்லூர் 10.30 a.m

மு/அம்பலவன் பொக்கணை ம.வி
பாராட்டி வாழ்த்துகின்றோம்
தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015
2015 ஆம் ஆண்டு தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சையில் 157
புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த எமது
வித்தியாலய மாணவி
செல்வி ராமதேவன் அகல்விழி
அவர்களையும்



100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான



சு.யதுர்சனா
(புள்ளி - 146)



யூ.டிலானி
(புள்ளி - 134)



ச.கிருஸ்னகாந்
(புள்ளி - 100)

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு கற்பித்து 100% சித்தியைப் பெற்றுத் தந்த ஆசிரியர் திரு.ச.சுபாங்கன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.
மு/ அம்பலவன் பொக்கணை ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பு**

நண்பர்களே இன்று வேலை தேடி அலையத் தேவையில்லை குறைந்த உழைப்புக்கு கூடிய வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். எமது புதிதாக திறக்கப்படும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. லேபல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு (நாள் சம்பளம் - Rs 1500) கிழமை சம்பளம், மாதசம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம், ஆடை முற்றிலும் இலவசம். 6மாத காலம் தொடர்ந்து நீங்கள் வேலை செய்தால் சம்பளத்துக்கு மேலதிகமாக (Rs 25000) போனஸ் வழங்கப்படும். விண்ணப்பங்களுக்கு முந்துங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (முன் அனுபவம் தேவையில்லை)

**077 401 7543, 075 544 6598**

எமது பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் உடனடி வேலை வாய்ப்பு 50பேருக்கு உள்ளதால் ஐஸ்கிறீம், யோகட், பிஸ்கட், டிபி டிபி போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண்(18 - 50) மாதாந்த சம்பளம் (25000 - 40000) வரை நாட்சம்பளம் (1500) போனஸ் ஆகியவுடன் உணவு தங்குமிடம் முற்றிலும் இலவசம். மொழி அவசியம் இல்லை. உடனடியாக தொடர்பு கொள்ளவும். நீங்கள் வேலை செய்யும் அன்றே உங்கள் ஊதியத்தை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

**077 165 7473, 072 246 7945**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ்.றோட், இணுவில்

**கிரய முகாமைக் கணக்கீடு**
**[Cost & Management Accounting]**

**A/L 2016**

ஆரம்பம் :-06.12.2015
நேரம் :-9-11 am யாழ்.நகரில்
12.30-2.30 pm இணுவிலில்

ஆசிரியர்:
**B. முகுந்தன்**
BBA (Hons)MBA (Fm Spl)
CIMA-Adv Dip in MA(uk)

★தனிப் பாட அனுமதி வழங்கப்படும்
★உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

இல. 67, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 0724666 ,077 918 4484
004799515207
(06524) (12.15)

# அதிபர்கள் பதவியேற்பு

சாவகச்சேரி, டிசெ 3

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளில் வெற்றிடமாகக் காணப் பட்ட பாடசாலை களுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த அதி பர்கள் கடமைகளைப் பொறுப்பேற் றுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த க.உதயகுமாரன் வகை 11 பாடசாலையான மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த 19ஆம் திகதியும், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலத்தில் அதிபராக கடமையாற்றிய செ.பெரின்ப நாதன் வகை 1 சீ தரப் பாடசாலையான கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி யாலயத்திலும், கைதடி முத்துக்குமா ரசாமி வித்தியாலயத்தில் கடமை யாற்றிய சி.பவளகுமாரன் வகை 1 சீ பாடசாலையான நாவற்குளி மகா வித்தியாலயத்திலும் கடந்த 23 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர்.

இவர்கள் இலங்கை அதிபர்சேவைதரம் 1க்கு உள்வாங்கப்பட்டு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவ கார அமைச்சின் செயலாளரினால் நிய மனங்கள் வழங்கப்பட்டன. (த-9)

**தென்னை மரக்குற்றிகள் விற்பனைக்கு**

வைரமான 15 தென்னை மரங்கள் தறித்து 5' -6' துண்டுகளாக அறுத்தவை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 615 5015 (66556) (12.15.17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

**பேராசிரியர் அ. துரைராசா** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 11.11.2014 இற்கு பின்னர் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. பிரதிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியாவளாகம், வவுனியா
3. www.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்:- பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

**முடிவு திகதி:14.12.2015**

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவு திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

**பேராசிரியர் க. குணரத்தினம்** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 11.11.2014 இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்ட மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-** **எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப் பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.**

விண்ணப்பப்படிவங்களை கீழ்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. பிரதிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா
3. www.jfn.ac.lk இணையத்தளம்

முடிவு திகதி: **14.12.2015**

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவு திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்,**

## University of Jaffna

### PROF.ALAGAIAH THURAIRAJAH GOLD MEDAL

Applications are invited for the Award of **Professor A. Thurairajah Gold Medal** from those who will be conferred a Bachelors Degree at the forthcoming Convocation among the students **who** have graduated after 11th November 2014 Obtaining first class or second class (upper Division).

Applications could be obtained from one of the Following:

- Deputy Registrar, Academic Branch, University of Jaffna.
- Senior Assistant Registrar, Vavuniya Campus of the University of Jaffna, Vavuniya and
- Website www.jfn.ac.lk

Awards:-

01 Award for all round performance at University Level and another Awards at each Faculty Level.

**Closing date:-14.12.2015**

Applications that do not include correct and relevant information and that are illegible, incomplete and received after the closing date will be rejected.

**Registrar,**
**University of Jaffna,**
**Jaffna.**

## University of Jaffna

### PROF.KANTHIA KUNARATNAM GOLD MEDAL

Applications are invited for the Award **of Professor Kanthia Kunaratnam Gold Medal** for best overall performance in Pure and Applied Science from eligible students who have graduated after 11th November 2014.

Eligibility:-

Those who have received a Bachelors Degree of four years duration in Agriculture, Science or Applied Science with First or Second Class (Upper Division) honours.

Applications could be obtained from one of the following:

- Deputy Registrar, Academic Branch, University of Jaffna.
- Senior Assistant Registrar, Vavuniya Campus of the University of Jaffna , Vavuniya and
- Website www.jfn.ac.lk

Closing date:- **14.12.2015**

Applications that do not include correct and relevant information and that are illegible, incomplete and received after the closing date will be rejected.

**Registrar,**
**University of Jaffna,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநியாய வரிகளை கைவிடுக ஜே.வி.பி. அரசிடம் கோரிக்கை

மக்கள் மீது அநியாய வரி சுமத்திப் பணம் சம்பாதிக்க வேண்டாம். பணம் சம்பாதிப்பதற்கான வழியை நான் உங்களுக்குக் கூறுகின்றேன். இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலபதி தெரிவித்தார். மகிந்த காலத்தில் மின்சார சபை, கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களில் சுமார் 65ஆயிரம் கோடி ரூபா அறவிடாது நிலுவையில் உள்ளது. இதை அறவிட வேண்டும். என்று நான் சவால் விடுக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார். (தி)




## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 03.12.2015 தொடக்கம் 16.12.2015 பி.ப 2.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 17.12.2015 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.12.2015 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒருபிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBTநீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் பொது நூலக புனரமைப்பு தொடர் வேலை | 3.75 | 37,500.00 | 1000.00 | M07/C08 |
| 02 | மணியந்தோட்டம் பெரியதோட்டம் வீதி மற்றும் பூம்புகார் 10ஆம்.11ஆம் குறுக்கு ஒழுங்கைகள் அரியாலை | 2.10 | 21,090.00 | 1000.00 | M07/C08 |
| 03 | மாரியம்மன் வீதி, திருநெல்வேலி. | 2.05 | 20,590.00 | 1000.00 | M07/C08 |
| 04 | பிள்ளையார் வீதி ( மஞ்சத்தடி) இணுவில். | 0.63 | 6,300.00 | 1000.00 | M09/C10 |
| 05 | ஆடியபாதம் வீதி கை ஒழுங்கை, கொக்குவில். | 0.30 | 3,030.00 | 1000.00 | M10/C10 |
| 06 | சிவகுருநாதர் வீதி, கோண்டாவில். | 1.56 | 15,690.00 | 1000.00 | M08/C09 |
| 07 | C.C.T.M.S வீதி, கோண்டாவில் | 1.28 | 12,810.00 | 1000.00 | M08/C09 |
| 08 | கண்ணகை, பார்வதி அம்மன் வீதி, கோண்டாவில். | 0.82 | 8,260.00 | 1000.00 | M09/C10 |
| 09 | நாகபூசணி அம்மன் கோயில் வீதி, கோண்டாவில். | 1.51 | 15,150.00 | 1000.00 | M08/C09 |
| 10 | முத்தட்டுமட வீதி, கோண்டாவில். | 2.08 | 20,800.00 | 1000.00 | M07/C08 |
| 11 | ஞானபாஸ்கரோதயா வீதி, கல்வியங்காடு. | 0.51 | 5,150.00 | 1000.00 | M09/C10 |

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/இரணைப்பாலை றோ.க.ம.வி

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015



**ஜெ.யனுஸ்ரன்**
**புள்ளிகள் - 153**



**திரு.இ.நேவிட் ஜீவராசா (அதிபர்)**



**திரு.செ.மதனரூபன் (ஆசிரியர்)**

இவ்வருடம் நடைபெற்ற தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பாடசாலை மாணவன் செல்வன் ஜெ.யனுஸ்ரன் அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அ.டனுசாயினி, க.சிந்துஜன், க.சிந்துஜா, அ.சார்மி, பா.மகிழ்நிலா, செ.செந்தூரி, பி.தனுசியா, எ.டின்னா, ஜெ.நிலசன் ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களை வழிப்படுத்திய அதிபர் இ.நேவிட் ஜீவராசா, ஆசிரியர் திரு.செ.மதனரூபன் ஆகியோர்களையும் பாடசாலைச் சமூகம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**
**மு/ இரணைப்பாலை றோ.க.ம.வி**

(64185)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மறைமாவட்டத்தின்
புதிய ஆயரும்
எமது ஊர்காவற்றுறை
மண்ணின் மைந்தனுமாகிய

பேரருட்திரு
**ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்**
ஆண்டகை


அவர்களை பங்கு மக்கள் நாம்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"அன்னை மரியூடாக ஆண்டவர் இயேசுவிடம்" என்ற விருதுவாக்கிற்கு ஏற்ப எம் மக்களுக்கு இறைபணியாற்ற இறையருள் வேண்டுகின்றோம்.



## ஓய்வுநிலை ஆயருக்கு எம் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகள்

கடந்த இருபத்திமூன்று வருடங்களாக எம் யாழ். மறைமாவட்டத்தை போரின் கொடூரத்தின் மத்தியிலும் மனம் தளராது இறைவழியில் நடத்திச் சென்று தற்போது ஓய்வு நிலை அடைந்திருக்கும், ஊர்காவற்றுறை மண்ணின் மைந்தன், எம் முன்னாள் ஆயர்



பேரருட்திரு
**இ.தோமஸ் சவுந்தரநாயகம்**
ஆண்டகை

அவர்களுக்கு எம் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகின்றோம். உடல், உள, ஆன்மீக சுகங்களுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
பங்குத்தந்தையும், பங்குமக்களும்.
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## தவமணி சுப்பிரமணியம்

தோற்றம்
05.08.1939

மறைவு
20.10.2015

தமிழ்மணம் கமழும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்
பிறந்து வாழ்ந்தவரும்
"மக்கள் சேவையே மகேசன் சேவை"
என்பதற்கு அமைவாக ஸ்ரீ பரமானந்தா
**சிறுவர், முதியோர்**
இல்லத்தின் முதற் பெண்மேற்பார்வையாளராக இருபத்திரண்டு வருடங்கள்
சேவையாற்றி ஓய்வு பெற்றவருமான சிவபதம் அடைந்த திருமதி தவமணி
சுப்பிரமணியம் (மேற்றன் அம்மா) அவர்களின் நினைவஞ்சலி

### சிறுவர்களின் இதயக் குமுறல்

கருவறையில் ஐயிரு திங்கள் எம்மை
சுமந்து பெற்ற அன்னை போல்
பசியினில் வாடாமல் நாமிருக்க
பல்சுவை உணவூட்டி
இதமாயெம் தலைகோதி
அழகாகப் பொட்டுமிட்டு
பள்ளிக்கு வழியனுப்பி
அழகை ரசித்து மகிழ்ந்த
நித்திய புன்னகையாள்.

கரை காணாக் கல்விக்கும்
பெண்மையின் ஒழுக்கத்திற்கும்
குலமாதர் கதை சொல்லி
அறிவுக்கு உரமிட்ட குருவாய்
பிணி எம்மை வாட்ட
கனிவான தாதியாய்
பரஸ்பரம் பகிர்ந்திட
அன்பான தோழியாய்
வாழ்ந்த புன்னகையாள் இன்று
காலன் வென்ற 45 ஆம் நாள்
மழலைகள் நாம் மலர் தூவி
அஞ்சலி செய்கின்றோம்
அமைதி கொள் தாயே!

### நிர்வாகத்தினர் அஞ்சலி

கடமை கண்ணியம் இரண்டு கண்ணென
தன்னகத்தே கொண்ட தாயார்
தர்மம் செய்ய வருவோரை
அன்புடன் வரவேற்று உபசரித்து
இல்லம் வளர உறுதுணையாகவிருந்த
வித்தாகிய வித்தகி
இல்ல பாலமுருகனுக்கு தினம்
மாலைகள் தொடுத்தும், படையல் செய்து
கந்தசஷ்டி கவசமும் புராணங்களும் பாடி
சிறுவர்களையும் இறை வழிபாட்டில்
ஈடுபடச் செய்த அன்னையவள்
மரணம் நெருங்கிய வேளையில்
தன் கரங்களால் விபூதி தரித்து
முருகா, முருகா என்ற நாமத்துடன்
அன்னை மூச்சு அடங்கியது
எம்மை மெய்சிலிர்க்கச் செய்தன.
மானிட வாழ்கையில் தர்மம், வழிபாடு
இரண்டும் கண்ணெனத்தகுமென
முறையாக வாழ்ந்து காட்டிய தாயின்
பூப்பாதம் பற்றி பூத்தூவி வணங்குகின்றோம்.

### இல்ல முதியோர்கள் துயரம்

பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதி
ஆக்குவதும் அழிப்பதும் அவனருள்
தேற்றிடுதலும் தேற்றிட வைப்பதும்
தேவன் கருணையே
போற்றிப் பேணிய பொன்னெழில்
தோழியின் பூப் பாதம் பற்றி
பூத்தூவி அஞ்சலி செய்கின்றோம்
சாந்தி கொள் தாயே!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்மா சாந்திபெற இல்ல பாலமுருகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம் அத்துடன்
இன்றைய பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் நலன் விரும்பிகள் பிற்பகல்
ஒரு மணியளவில் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்
**சிறுவர், முதியோர்கள்**
**பணியாளர்கள், நிர்வாக சபையினர், ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம்,**
**வதிரி, கரவெட்டி.**

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சிதம்பரம்**
**இராசலிங்கம்** (J.P)
(ஓய்வுபெற்ற ஊழியர்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை)



சுகையின் பெருமதி மொழிந்த நீதிவானே
நீதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வில்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்
போனாலும் எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும் மண்விட்டு
மறைந்து நீங்கள் வானுலகம் சென்று
மூன்று ஆண்டுகள் ஆனாலும்
மனம் விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீரே.

உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

தோற்றம்
25.01.1934

மறைவு
07.11.2012

நிரந்தர முகவரி:
V.C.மோவிட்டபுரம், தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி: தேவாலய வீதி
சங்கானை.

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
1982.04.19

இறைவனடி
2010.11.29

## தம்பிப்பிள்ளை சுதாகரன் (அரசன்)

அன்று எம் அருகில் நீ நின்றபொழுது
கண்ணீர் கூட சுமையானது துடைக்க நீ இருந்தாய்
இன்று சிரிப்பு கூட வேதனையாகின்றது
ஆயிரம் துன்பங்களை எல்லாம் வெற்றி கண்டீர்
நாம் உங்கள் மீது அன்பு வைத்தது போல்
இறைவனும் அன்பு வைத்து விட்டான் போல்
ஆதலால் தான் எங்களிடம் இருந்து தம்மை பிரித்து
தாய் மண் திரும்பாமலே தொலை தூரம் சென்றதேனோ!!!

மீசாலை மேற்கு.
மீசாலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
சகோதரர்கள்.

நிறைவேற்றதி இதன்போதுசமந்தா பவர் மேலும் கூறியுள்ள தாவது:- இந்தியாவுக்கு எமது பயணத்தில் மேலதிகமாக இலங்கைக்கும் சென்றிருந்தேன். இதன்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உறுதியளித்தார். இது மிகவும் மாறுபட்ட நடவடிக்கை. வரவேற்கப்பட வேண்டியது. அத்துடன், மைத்திரிபால சிறிசேனவின் முயற்சி, ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுக்கு முற்றிலும் எதிர்மறையான செயற்பாடாகவுள்ளது என்றார்.

இதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையின் இந்த டிசெம்பர் மாதத்துக்கான தலைமைப் பதவி அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் ஒவ்வொரு மாதமும் ஒரு நாடு தலைமை வகிக்கும். இந்த நிலையில் இந்த மாதத்துக்கான ஐ.நா பாதுகாப்புச் சபையின் தலைவராக சமந்தா பவர் செயற்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 03.11.2015
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி
திருமதி
**இராதாதேவி**
**பத்மநாதன்**



தோற்றம்
11.11.1947

மறைவு
03.11.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் 136, ஆனந்தன் வடலி வீதியில் உள்ள அன்னாரது இல்லத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மயிலு மீனாட்சி மண்டபத்திலும் அன்று மதியம் 12.00 மணிக்கும் இடம் பெறும்.

இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

163, AV வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாண கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.3
கிராமஅபிவிருத்தித்திணைக் களத்தின் மாகாண கண் காட்சி இன்றும், நாளை யும் முற்பகல் 11மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கிராம அபி விருத்தித் திணைக்களத் தின் மாகாணப் பணிப் பாளர் ஜே.ஜே.சி.பொலி சியன் தலைமையில், "செய்வோம் செய்விப் போம்"என்னும்கருப்பொரு ளில் நடைபெறும், இந்த நிகழ்வு இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த் தக வாணிபம், கிராம அபி விருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக் குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வு கள் நாளை வெள்ளிக் கிழமை நடைபெறும். மேலும் இந்த நிகழ்வில் மாணவர்,ஆசிரியர்கௌர விப்பு என்பன இடம் பெற வுள்ளாதாக வடமாகாண கிராமஅபிவிருத்திணைக் களத்தினர் தெரிவித்துள் ளனர். (ந-ஐ-ரி5)

### குருதிக் கொடை முகாம்

வவுனியா, டிசெ.3
வவுனியா பொது வைத் தியசாலையில் ஏற்பட் டுள்ள இரத்தத் தட்டுப் பாட்டை அடுத்து தமிழ்த் தேசிய இளைஞர் கழ கத்தின் வவுனியா மாவட் டக் கிளையினரின் ஏற் பாட்டில் எதிர்வரும் சனிக் கிழமை இரத்தான முகாம்நடத்தப்படவுள்ளது. கழகத்தின் சமூக அபி விருத்திக்குழுத்தலைவர் திவாகரன் தலைமையில் மு.ப.9மணிமுதல்2 மணி வரை ஓமந்தை மத்திய கல்லூரியில் இரத்த தான முகாம் நடைபெறவுள் ளது. இரத்ததானம்செய்ய விரும்புவோரைத்தொடர்பு கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டள்ளது. (ந)

# போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை உயர்த்தும் செயற்றிட்டம்

## வட மாகாண சபை, மீள்குடியேற்ற அமைச்சு இணைந்து முன்னெடுக்கின்றன

யாழ்ப்பாணம், நவ.3
வடக்கு மாகாண சபையும், மீள் குடியேற்ற அமைச்சும் இணைந்து போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலைகளை உயர்த்து வதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன. இந்த அபி விருத்தித் திட்டத்துக்காக இனங் காணப்பட்ட பத்து விசேடகருத் திட் டங்கள் தொடர்பான அமைச்சர வைப் பத்திரம் அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிவித்த வடக்கு மீள்குடியேற்ற அமைச்சின் செய லாளர் வே.சிவஞானசோதி, போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலைகளை உயர் துவதற்கான திட்டத்துக்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி மத்திய கால வரவு செலவுத்திட்ட த்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இதற்காக முன்வைக்கப்பட்ட பத்து விசேட கருத்திட்டங்களையும் வழிப் படுத்தி, கண்காணிப்பதற்காக மத்திய அரசுடன் வடமாகாண சபையையும் இணைத்து ஒரு விசேட பொறிமுறையும் உருவாக் கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பத்து விசேட முன்னுரிமைக் கருத் திட்டங்களில் ஊர்காவற்றுறை - காரைநகருக்கு இடையே பாலம் மற்றும் கடப்பு வழி என்பவற்றின் நிர்மாணம், நெடுந்தீவுக்கான 100 பயணிகளை ஏற்றிச் செல் வதற்கான பயணிகள் படகு நிர்ம ாணம், நெடுந்தீவுக்கான இறங்கு துறை நிர்மாணம், எழுவைதீவு, ஊர் காவற்றுறை இறங்கு துறை நிர்மாணம், வேலணை -ஊர்காவற் றுறை வீதி புனரமைப்பு, அரச சுகா தாரத் துறைக்கான மருத்துவ கழிவு முகாமைத்துவமுறை ஒன்றை வடமாணத்தில் தாபித்தல், யாழ். மாவட்டத்தில் மனித கழிவுக்கான முறையான அகற்றல் முறையை தாபித்தல், யாழ் மாவட்ட மாநகர பகுதியில்திண்மக்கழிவுசேகரித்தல் மற்றும் நீக்கத்திற்கான முறைமை யினை தாபித்தல், வடமாகாண கரையோரப்பகுதிகளில் கடற்பாசி வளர்த்தல், வாழ்வாதார வருமா னம் ஈட்டல் திட்டங்களான பெறு மதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தி களும் சந்தைப்படுத்தலும், வதிரி தோல்பொருள்கள்உற்பத்தி, காமாட்சி அம்பாள் மென்பொருளியல் கைத்தொழில் போன்ற அதியுயர் பெறுபேறுகளை உள்ளடக்கியுள் ளது என்றும் அவர் கூறினார்.

> இதற்காக முன்வைக்கப்பட்ட பத்து விசேட கருத்திட்டங்களை கண்காணிப்பதற்காக மத்திய அரசுடன் வடமா காண சபையையும் இணைத்து ஒரு விசேட பொறிமுறையும் உருவாக்கி உள்ளது.

யாழ். குடாநாட்டைச் சுற்றியுள்ள பிரதானமான 15க்கும் மேற்பட்ட தீவுகளில் வசிக்கும் சுமார் 75 வீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்ளனர். இவர்கள் கடற்றொழில், விவசாயம், கால்நடை மற்றும் பனை சார்ந்த உற்பத்திகள் போன்றவற்றில் தமது வாழ்வா தாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதிகளில் காணப்படும் வினைத் திறனற்ற போக்குவரத்து முறைமை காரணமாக பிரதான நிலத்துக்கான போக்குவரத் துக்காக அதிக நேரத்தையும், பணத்தையும் மக்கள் செலவிட வேண்டியிருக்கின்றது. இதனால் தீவுகளில் வசிக்கின்ற, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வடமாகாண பொரு ளாதாரத்துக்கு பங் களிப்புச் செய் வதில் வரையறை காணப் படுகின்றது - என்றும் சிவஞான சோதி தெரிவித்தார். (ந-ரி5)



ஜேர்மன் நாட்டின் வொல்ப்கங் ஹ்ருக்ஸ்கா மற்றும் டாக்டர் மைக்கல் டொஹ்மன் தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்றுக் காலை கிழக்கு மாகாண முதலமை ச்சரை முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது வெருகலில் புதிய தொழில் பயிற்சி நிலையமொன்றை உடனடியாக அமைப்பதற்கும் கிண்ணியா , கந்தளாய் பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற் பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்துக்கு கிழக்கு மாகாண இளைஞர்களை உள்வாங்கி அங்கு தொழிற் பயிற்சிகளை மேற் கொள்வதற்கும் கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் நூலகங்கள் மற்றும் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பிரிவினை அபிவிருத்தி செய்வதற்கும் உதவிகள் வழங்குதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந

# இராமநாதன் மீதான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3
அச்சுறுத்தல் விடுத்துத் தாக்க முற்பட்டதாக நாடா ளுமன்ற உறுப்பினர் அங் கஜனின் தந்தையாரான இராமநாதன் மீது குற் றஞ் சாட்டி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகில தாஸ் பொலிஸில் முறைப் பாடு செய்த வழக்கில், இரா மநாதன் யாழ்.நீதிமன் றில் நேற்று முன் தினம் முன்னிலையானார். அவரது வழக்கு எதிர் வரும் ஜனவரி 7 ஆம் தி கதிக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

குறித்த வழக்கு மற்றும் சந்தேக நபர்களாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பில் யாழ்.பொலி ஸார் யாழ்.நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தி ருந்தனர். உரிய நடவடிக் கைக்காக அது எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி சந்தேக நபர் களை நீதிமன்றில் முற் படுத்துமாறும் கூறப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் சந்தேக நபராகக் குறிப்பிடப்படும் இராமநாதன், யாழ்.நீதிமன் றில் நேற்று முன் தினம் சட்டத்தரணிகள் மூலமாக நகர்த்தல் பத்திரம் சமர்ப் பித்து வழக்கு விசார ணைக்கு சமுகமளித்தி ருந்தார். இதன்போதே அவரது வழக்கு எதிர் வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினரான அகில தாஸ் தனது முறைப் பாட்டில், யாழ்ப்பாணத்தி லுள்ள அலுவலகத்துக் குத்தன்னைவேறொருவர் மூலமாக இராமநாதன் அழைத்திருந்ததாகவும், அங்கு வைத்து தான் அச் சுறுத்தப்பட்டதாகவும், தன்னைத் தாக்க முற் பட்டதாகவும் குற்றஞ்சாட் டிப் பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்ட விட யமே நீதிமன்றின் கவனத் துக்குக் கொண்டு செல் லப்பட்டது. (த-4-103)

# வரவு - செலவு திட்டத்தை நாடாளுமன்றில் எதிர்க்கவேண்டும் தமிழ்க் கூட்டமைப்பு

## வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.3
ரயிலில் பாய்ந்து சாவ டைந்த யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மாண வனின் சாவுக்கு உபகாரம் தேடும் விதமாக, இன்று நாடாளுமன்றத்தில் இடம் பெறும் வரவு செலவுத்திட் டத்தை தமிழ்த் தேசிய கூட் டமைப்பினர் புறக்கணிக்க வேண்டும் என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள் ளது.

இதுதொடர்பில் பிரஜைகள் குழுவின் தலைவர் கி.தேவ ராஜன் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவித்துள்ள தாவது:

கடந்த வியாழக்கிழமை தமிழ் அரசியல் கைதி களின் விடுதலையை முன் னிறுத்தி யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரிமாணவன் ரயில் முன் பாய்ந்து சாவ டைந்தார்.

அரசியல் கைதிகள் இரண்டு தடவைகள் உண் ணாவிரதம் இருந்த போது தமிழ்த்தேசிய கூட்டமைப் பின்னூடாகஅரசுவழங்கிய வாக்குறுதிகள் இன்று வரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அத் [illegible] வரவு [illegible] நிதியை அரைவாசியாக அரசு குறைத்துள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினராகிய எமது பிரதிநிதிகள் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் புறக்கணிப்பு செய்வதுடன் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத் தப்பட்டுள்ளது. (ந-ஐ-21)

# மின்னலால் செயலிழந்த மின்சார உபகரணங்கள்

## சங்கானையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.3
மின்னலுடன்கூடிய இடியால் சங்கானைப்பகுதியில்உள்ள பல வர்த்தக நிறு வனங்களி லிருந்தமின்சாரஉபகரணங் கள்செயலிழந்துள்ளன.

கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது இதன் போது சங்கானை பிரதான வீதியில் அமைந் துள்ள வங்கிகள், மின்சார உபகரணவிற்பனைநிலை யம், டிஜிற்றல் ஸ்ரூடியோ போன்வற்றில் செயற் பாட்டில் இருந்தபலகணினி கள் செயலிழந்துள் ளன.

இதே வேளை அந்தப் பகு தியில் செயற்பாட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் கணினி களும்செயலிழந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ந-ஐ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவூதியில் இறந்த பெண்ணின் உடல் கையளிப்பு

வவுனியா,டிசெ.3
பணிப் பெண்ணாக வெளிநாடு சென்று சாவடைந்தார் என்று கூறப்படும் வவுனியாவைச் சேர்ந்த பெண்ணொருவரின் உடல், ஆறு மாதங்களின் பின்னர் கடந்த மாதம் 29 ஆம் திகதி வவுனியாவிலுள்ள அவரது இல்லத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த நவனீதராசா கமலா (வயது -37) என்பவரின் சடலமே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
குறித்த பெண் கடந்த ஜூன் மாதம் சவூதி அரேபியாவில் சாவடைந்துவிட்டார் என உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவரது சடலம் ஆறு மாதங்களின் பின்னர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.
(ஐ-21)

“ போரின் பின்னர் மன்னாரில் பல்வேறு திட்டங்கள் ஊடாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவை பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்கும் வகையில் அமையவில்லை. ”

# 9,994 வீடுகள் இன்னும் தேவை

### மன்னார் அரச அதிபர் தகவல்


மன்னார், டிசெ.3
மன்னார் மாவட்டத்தில் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 9 ஆயிரத்து 994 வீடுகள் தேவைப்படுகின்றன - என்று அரச அதிபர் தெரிவித்தார்.
போரின் பின்னர் மன்னார் மாவட்டத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். அவர்களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் உள்ளிட்ட வீட்டுத் திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டபோதும், வீட்டுவசதிகள் இன்னமும் முழுமை பெறவில்லை. குறித்த மாவட்டத்தில் உள்ள மக்களின் இருப்பிட வசதியைப் பூர்த்தி செய்ய இன்னமும் 9 ஆயிரத்து 994 வீடுகள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
5 பிரதேசசெயலர் பிரிவுகளிலும் 9 ஆயிரத்து 994 வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன. 2 ஆயிரத்து 791 வீடுகள் பகுதிஅளவில் சேதமடைந்துள்ளன. மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 27 வீடுகளும், மடு பிரதேச செயலர் பிரிவில் 717 வீடுகளும், நானாட்டானில் ஆயிரத்து 174 வீடுகளும், முசலி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 249 வீடுகளும், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 166 வீடுகளும் முழுமையாக அழிவடைந்துள்ளன.
போரின் பின்னர் பல்வேறு திட்டங்களின் ஊடாக மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 6 வீடுகளும், மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 844 வீடுகளும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 844 வீடுகளும், மடு பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 222 வீடுகளும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 145 வீடுகளுமாக 12 ஆயிரத்து 111 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ந-101)



## பால் நிலை வன்முறைகளை சமாளிக்க தற்காப்பு பயிற்சி

### கிளிநொச்சிப் பெண்களுக்கு வழங்கப்படுகின்றது

கிளிநொச்சி, டிசெ.3
பால்நிலை வன்முறைகளுக்கு எதிராக பெண்கள் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் வகையில் பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி வழங்கும் நிகழ்வொன்று கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் கிளிநொச்சி நைடா தொழில் பயிற்சி நிலையத்தில் பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பெண்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாகவே நேற்றுமுன்தினம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பெண்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. எதிர்வரும் வாரம் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலும் இந்தத் தற்காப்புப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.
இது தொடர்பில் மாவட்டச் செயலக பெண்கள் நலனுக்கான மாவட்ட இணைப்பாளர் திருமதி சண்முகப்பிரியா தெரிவித்ததாவது:-
மாவட்டத்தில் அதிகளவு பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுவதாலும், அவர்கள் திருடர்கள் மற்றும் தனிமையின்போது பாலியல் துஷ்பிரயோக நோக்கத்துடன் அணுகுகின்றவர்களிடம் இருந்து தங்களை பாதுகாத்து கொள்வதற்காகவே இந்தப் பயிற்சி வழங்கப்படுகின்றது - என்றார்.



நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கான தற்காப்புப் பயிற்சிகளை கொழும்பில் இருந்து வந்திருந்த அன்ரோ டினேஸ் பயிற்றுவித்தார்.
(ந-21)

## அடர் மாமரச் செய்கை மன்னாரில் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3
குறைந்த இடைவெளிகளில் மாமரக்கன்றுகளை நட்டு, குறைந்த உயரமுள்ள மரங்களாக அவற்றைப் பராமரித்துக் கைகளாலேயே பழங்களைப் பறிக்கும் அடர் மாமரச் செய்கை என்னும் புதிய பழ மரச் செய்கை முறை மன்னாரில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் தாமரைக்குளப் பகுதியில் பிரதி விவசாயப்பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.
ஏற்கனவே பல்வேறு நாடுகளிலும் அறிமுகமாகியுள்ள இந்தத் திட்டத்தை வடக்கில் அறிமுகம் செய்யும் நோக்குடன், மன்னாரில் 40 ஏக்கர் பரப்பளவில் நடுகை செய்வதற்கென 100 விவசாயிகளுக்கு 2 ஆயிரத்து 478 மாமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.
25 ஏக்கர் பரப்பளவில் நடுகைசெய்வதற்கு 10 ஆயிரம் மாதுளம் கன்றுகளும், 15 ஏக்கர்பரப்பளவில் நடுகை செய்வதற்கு 750 கொய்யாக் கன்றுகளும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனால் வழங்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.செபமாலை ஆகியோரும், திட்டத்தின் பயனாளிகளான விவசாயிகளும் கலந்துகொண்டனர்.
மரநடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாக மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கும் பழமரத் தோட்டங்களை உருவாக்கும் திட்டம், வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ஐ-21)



மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான மன்னார் பேசாலையைச் சேர்ந்த இ.கயஸ் பெல்டானோ சட்டத்தரணியாக கடமையாற்றி 51 ஆவது வருடத்தை நிறைவு செய்வதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-56)

## 10 பைக்கற் சிமெந்து வழங்கும் திட்டம் மன்னாரிலும் ஆரம்பம்

மன்னார்,டிசெ.3
வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவின் வழிகாட்டலின் கீழ் பூச்சு பூசாமல் காணப்படும் வீடுகளுக்கு 10 சிமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டு வேலையைப் பூர்த்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் வீதம் நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடையவுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் இந்தத் திட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட செயலக முன்றலில் அரச அதிபர் .எம்.வை. எம்.தேசப்பிரிய தலைமையில் வைபவம் நடைபெற்றது.
இந்நிகழ்வில் மன்னார் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சில பயனாளிகளுக்கு சிமெந்து பைக்கற்றுக்கள் மானியமாக வழங்கப்பட்டன. (ந-56)

# குறை நிவர்த்தி நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில்

### பெரும் எண்ணிக்கையானோர் பயன்பெற்றனர்

கிளிநொச்சி, டிசெ.3
மக்களின் குறைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் வடக்கு மாகாண சபையும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த குறை நிவர்த்தி நடமாடும் சேவை நேற்று முன் தினம் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



கொட்டும்மழைக்கு மத்தியிலும், நூற்றுக்கணக்கானோர் இந்த நடமாடும் சேவையில் பங்குகொண்டு பயன்பெற்றனர்.
இதன்போது சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தால் மாவட்டத்தைச் சேர்ந்த வறிய மாணவர் 50 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா காசோலைகளும் வழங்கப்பட்டன. காசோலைகளை வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்கினார்.
முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூட கட்டடத் திறப்பு விழாவைத் தொடர்ந்து நடமாடும் சேவை ஆரம்பமானது.
நடமாடும் சேவையில் அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ்கள் உட்பட பல தேவைகளைப் பெற்றுக் கொள்ள வந்த மக்களுக்காக அந்தந்த அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து 37 அலுவலகங்கள் பாடசாலை மண்டபத்தில் அமைக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.
நடமாடும் சேவையின் பின்னர் வடக்கு விவசாய அமைச்சால் மக்களுக்கான பயன்தரு மாமரக் கன்றுகள் வழங்கப்பட்டன.
நிகழ்வுகளில் வடமாகாண முதலமைச்சர், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் சி.சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடமாகாண அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கர நேசன், பா. டெனீஸ்வரன், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், அன்ரனி ஜெகநாதன், அனந்தி சசிதரன் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(ந-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நிவாரணத்துக்கு தேவை ரூபா 10 மில்லியன்

## அமைச்சிடம் கோரியுள்ளார் யாழ். அரச அதிபர்



யாழ்ப்பாணம்,டிசெ.3
யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணஉதவிகளுக்காக மேலும் 10 மில்லியன் ரூபா தேவை என அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கடந்த மாதம் ஏற்பட்ட கடும் மழை காரணமாக குடாநாட்டின் பல பாகங்களிலும் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. மேலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் உதவிக்காக அமைச்சிடம் இருந்து முதல் கட்டமாக 4 மில்லியன் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 6 மில்லியன் ரூபாவுமாக 10 மில்லியன் ரூபா இதுவரை யாழ். மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளது.

இருப்பினும் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மொத்தக் குடும்பங்களின் உதவிக்காக 20 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அதையடுத்து மேலதிக தொகையான 10 மில்லியன் ரூபா நிதியைக் கோரி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ற-ஐ-101)

## விசேட தேவை உடையோர் தினவிழா

வவுனியா,டிசெ.3
வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகமும், வவுனியா தெற்கு கல்வி வலயம், 'சீட்' நிறுவனம் ஒகான் வரோட் உயிரிழை ஆகிய நிறுவனங்களுடன் வவுனியா பொது வைத்தியசாலையும் இணைந்து நடத்தும் சர்வதேச விசேட தேவையுடையோர் தினவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு விசேட தேவைக்குட்பட்டோரின் சக்கர நாற்காலி ஓட்டம், காலை 7.30 மணிக்கு வவுனியா பஸ் நிலையத்தில் பஸ்களில் விசேட தேவைக்குட்பட்டோருக்கான ஆசனங்களுக்கான ஸ்ரிக்கர் ஒட்டுதல், காலை 8 மணிக்கு விசேட தேவைக்குட்பட்டோரின் உரிமைகளை வென்றெடுக்கும் பேரணி நகரசபை கலாசார மண்டபத்தை நோக்கி செல்லல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர். காலை 8.30 தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை கலை நிகழ்வுகள் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

(ற-ஐ-402)



சாவகச்சேரி, கெருடாவில் முருகமூர்த்தி கோயில் வீதி - கல்வயல் வேதனப் பிள்ளையார் கோயில் வீதி என்பவற்றை இணைக்கும் வீதியில் வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகள் கொட்டப்படுகின்றன என்று பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். அதனால் வீதியூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. குறித்த பாதையை சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது போக்குவரத்துக்கு பயன் படுத்துகின்றன. உரிய அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (ற-9)

## கஞ்சா வழக்கு: மறியலில் இருந்த இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ.3
கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரை யாழ்.மேல் நீதிமன்று பிணையில் செல்ல அனுமதித்தது.

இளவாலையில் ஒரு இடத்தில் சுமார் 15 கிலோ கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த பெப்ரவரி மாதம் ஒருவரும், மற்றொரு இடத்தில் சுமார் 27 கிலோ கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் மல்லாகம் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களைப்பிணையில் விடுவிக்கக்கோரி யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று பிணை வழங்கியது. அதன்படி இருவரும் தலா 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-4)

## இறந்தவர் மீண்டதால் பரபரப்பானது குருநகர்

### வதந்தியால் இடம்பெற்ற விபரீதம்

யாழ்ப்பாணம்,டிசெ.3
சாவடைந்தவர் எனக் கூறப்பட்ட ஒருவர் உயிருடன் வந்த சம்பவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை குருநகரில் நடந்துள்ளது.

ஆலயத் தொண்டில் ஈடுபட்டு வந்த 70 வயதுடைய முதியவர் ஒருவர், குருநகர், உத்தரியமாதா ஆலயத்தில் சடலமாகக் கிடக்கிறார் என வதந்தி காட்டுத் தீ போல குருநகர் பிரதேசம் எங்கும் பரவியது.



அவரது பிள்ளைகள் உறவினர் அனைவரும் அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கேள்விக்கப்பட்டு வைத்தியசாலையை முற்றுகையிட்டனர். வேறு சிலர் அவரது இல்லம் சென்று துக்கம் விசாரித்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் முதியவரின் சாவுச் செய்தி கேட்டு அழுது புலம்பிக் கொண்டிருக்க உயிரிழந்தவர் எனக் கூறப்பட்ட அவர் உயிருடன் வீட்டுக்கு வந்துள்ளார். அதனால் அங்கிருந்தவர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

(ற-ஐ-160)

## மாம்பழ விலை தென்மராட்சியில் வீழ்ச்சி

சாவகச்சேரி,டிசெ.3
தென்மராட்சி பிரதேசச் சந்தைகளில் மாம்பழங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் ஒரு பழம் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது 3 ரூபா தொடக்கம் 12 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த வருடம் மாமரங்களில் பூ வந்த காலத்தில் மழை பெய்யாத காரணத்தால், விலாட் மாமரங்களும், அம்பலவி மரங்களும் பெருமளவு காய்களுடன் காணப்பட்டன. தற்போது அவை பழுக்க வைக்கப்பட்டு சந்தைகளுக்கு பெருமளவில் கொண்டு வரப்படுகின்றன.

இதனால் மாம்பழங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதென உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். விலாட் பழமொன்று 3 ரூபாவும், அம்பலவி வெள்ளைக் கொழும் பான் போன்றவை 5 ரூபாவும், கறுத்தக் கொழும்பான் மாம்பழமொன்று 10 ரூபா தொடக் கம் 12 ரூபா வரையும் விற்பனை செய்யப் படுகின்றன.

இம்முறை மாம்பழங்கள் கொள்வனவு செய்ய தென்னிலங்கையிலிருந்து, வியாபாரிகள் வராததால் பழங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-9)

## சாதாரணதரப் பரீட்சைக்கு இம்முறை வடக்கில் 48 ஆயிரம் பரீட்சார்த்திகள்

யாழ்ப்பாணம், டிசெ.3
வடக்கு மாகாணத்தில் 2015ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு 48ஆயிரத்து 793 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்காக 337 பரீட்சை நிலையங்களும்,75 ஒருங்கிணைப்பு நிலையங்களும் செயற்படவுள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் 17ஆம் திகதி வியாழக்கிழமை [illegible] நிலையங்களில் 6 ஆயிரத்து 298 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 5 ஆயிரத்து 259 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும், யாழ்ப்பாணம் 2 வலயத்தில் 109 பரீட்சை நிலையங்களில் 8 ஆயிரத்து 244 பாடசாலைப் பரீட் சார்த்திகளும், 6ஆயிரத்து 960 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

கிளிநொச்சி வலயத்தில் 24 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 262 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 ஆயிரத்து 267 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

முல்லைத்தீவு வலயத்தில் 33 பரீட்சை நிலையங்களில் 2 ஆயிரத்து 386 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 1 ஆயிரத்து 828 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

வவுனியா வலயத்தில் 56 பரீட்சை நிலையங்களில் 3 ஆயிரத்து 505 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 3 ஆயிரத்து 805 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

மன்னார் வலயத்தில் 39 பரீட்சை நிலையங்களில் 2ஆயிரத்து 10 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2ஆயிரத்து 968 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர் என்று வடமாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-ரி6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். தாக்குதல்களால் இலங்கைக்கும் பாதிப்பு

## அரசு முன்னெச்சரிக்கையாக உள்ளது என்கிறார் பிரதமர்



கொழும்பு, டிசெ 3
ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தாக்குதல்கள் உக்கிரமடைந்து மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரமற்ற நிலை ஏற்படுமாயின் அது இலங்கையின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

எனவே, ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படும்பட்சத்தில் அவசர நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கும், பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்றும், இதன் ஓர் அங்கமாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு -செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான எட்டாம்நாள் விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய பிரதமர் கூறியவை வருமாறு:-

கடந்த காலங்களில் குடும்ப ஆட்சி மேலோங்கியது. ஜனநாயகம் மதிக்கப்படவில்லை. எதேச்சாதிகாரப் பாதையில் அரசு பயணித்தது. இந்தநிலையில், இவற்றுக்கு முடிவுகட்டுவதற்கு மாற்றத்துக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சவால்மிக்க இந்தப் பயணத்தை வெற்றிகரமாக மாற்றியமைப்பதற்கு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இறுதியில் ஜனநாயகம் வெற்றிபெற்றது.

மக்களுக்கு நன்மைபயக்கும் வகையில்தான் அரசின் முடிவுகள் அமையும். இதுதான் நல்லாட்சியின் பிரதிபலனாகும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும்வகையில் அரச செயற்பாடுகள் அமையாது.

அத்துடன், புதியதொரு கலாசாரத்தை உருவாக்குவதற்கான பொற்காலம் உதயமாகியுள்ளது. பிரதான இரு கட்சிகள் இணைந்து அரசாட்சி செய்கின்றன. ஏனைய கட்சிகள் எதிரணி வரிசையில் முக்கிய பதவிகளை வகிக்கின்றன. இதன் மூலம் சட்டவாக்கச் சபை பலமடைந்துள்ளது. நாடாளுமன்றக்கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமை மேலும் வலுவடையும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கமைய தேசியகணக்காய்வு சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அத்துடன், தகவல் அறியும் சட்டவரைவு அடுத்த வருட ஆரம்பத்தில் சபையில் நிறைவேற்றப்படும். அதேபோல் அடுத்த வரவு-செலவுத்திட்டம் முற்றிலும் வித்தியாசமானதாக அமையும். இக்காலப்பகுதிக்குள் புதிய அரசமைப்பையும் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ளோம். அதற்கான யோசனையும் விரைவில் முன்வைக்கப்படும். சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கும் பணியிலும் வெற்றிகண்டுள்ளோம்.

> ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளால் மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரமற்றதன்மை ஏற்படுமானால் அதன் தாக்கம் இலங்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

2020இல்தான் இனிப் பொதுத் தேர்தல் நடைபெறும். கட்சிகளைக் கட்டியெழுப்பிய தலைவர்களாக அன்றி, நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவர்களாகவே தேர்தலைச் சந்திப்பதற்கு நானும், ஜனாதிபதியும் விரும்புகிறோம். எமது இலக்கும் அதுதான். ஏனைய உறுப்பினர்களும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைத்தவர்கள் என்ற பெருமையுடன் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்குத் தயாராகுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

2016ஆம் ஆண்டில் உலகில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் அபாயம் இருக்கின்றது. அமெரிக்காவைத் தவிர ஏனைய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவடைந்து வருகிறது. இதன் எதிர்மறைத் தாக்கம் இலங்கையையும் பாதித்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளால் மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரமற்ற தன்மை ஏற்படுமானால் அதன் தாக்கம் இலங்கைக்கும்பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு அவசர நிலைமையை எதிர்கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்-என்றார். (கு-சி)

## ஈ.ரி.எவ் - ஈ.பி.எவ். இணைப்பை எதிர்த்து கொழும்பில் போராட்டம்

கொழும்பு, டிசெ 3
ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை ஒன்றிணைப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஊழியர் சங்கங்கள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பெரும்ஆர்ப்பாட்டமொன்றை நேற்றுமுன்தினம் கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சுற்றுலா அதிகார சபைக்கு முன்பாக முன்னெடுத்திருந்தன.

கடந்த 20ஆம் திகதி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் முன்மொழியப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை ஒன்றிணைப்பது தொடர்பில் கூறப்பட்டிருந்தது. அத்தோடு தேசியக் கொள்கை வகுப்பிலும் பிரதமரால் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதற்கு நாட்டில் உள்ள அனைத்து சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், ஊழியர் சங்கங்களும் தங்களது எதிர்ப்பை வெளியிட்டு வந்தன.

இந்தநிலையிலேயே, நேற்று இந்த அமைப்புகள் கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சுற்றுலா அதிகார சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

எனினும், இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் அரசு எடுக்கவில்லை என்று அரசின் முக்கியஸ்தர்கள் சிலர் ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு விளக்கமளித்தனர். (கு-சி)




## கைதிகளை விடுவிக்க அஞ்சும் அரசு எப்படித் தீர்வைத் தரும்?

### சித்தார்த்தன் எம்.பி. கேள்வி

கொழும்பு, டிசெ 3
தென்னிலங்கையிலுள்ள இனவாதிகளுக்கு அஞ்சி தமிழ் அரசியல் கைதிகளை முழுமையாக விடுதலைசெய்வதற்குத் தயங்கும் அரசு, தமிழ் மக்களுக்கு எப்படி நியாயமானதொரு தீர்வை வழங்கும் என்று தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.



நாடாளுமன் றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆயுதப் போராட்ட இயக்கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. எனவே, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கூறப்படுவதெல்லாம் மாயக்கதைகளாகும். 200 பேரை விடுதலை செய்வதால் எப்படி பாதிப்பு ஏற்படப்போகின்றது?

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அந்தக் கோரிக்கை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான சிறிய பிரச்சினைகளுக்குத் தீர்வைவழங்கத் தயங்கும் அரசு, தமிழர்களின் முழுமையானபிரச்சினைக்கு எப்படித் தீர்வை வழங்கும் என்றுதமிழ்மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நியாயமானதொருதீர்வை வழங்க அரசுக்கு நாம் காலஅவகாசம் வழங்கியுள்ளோம். எனவே, எமது மக்களுக்கு நியாயமானதொரு தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (கு-சி)

## அரச ஊழியருக்கு ஒரு மில்லியன் ரூபா

அரச சேவையாளர்களுக்கு வரிச் சலுகையிலான வாகன அனுமதிப் பத்திரத்துக்குப் பதிலாக ஒரு மில்லியன் ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்று வரும் வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தின்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அரச உத்தியோகத்தர்களுக்கான வரிச் சலுகையுடனான வாகன அனுமதிப் பத்திரம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த நிதியமைச்சர், சுகாதார அமைச்சர் மற்றும் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கமைய அதனை நிறைவேற்றத் தயாராக உள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார். (கு-வ)

## அவன்கார்ட் பிரச்சினைக்கு பதவி விலகியும் தீர்வில்லை

### முன்னாள் அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 3
தாம் பதவி விலகியபோதிலும் அவன்கார்ட் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்துக்குச் சொந்தமான, சட்டவிரோதமானது எனக் கூறப்படும் ஆயுதங்களைக் கடற்படையினரிடம் ஒப்படைக்க முடியுமா என்ற சர்ச்சைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக அரசு கூறிய போதிலும் அதன் ஊடாக நான் பதவியிழந்தது மட்டுமே நடைபெற்றுள்ளது. அவன்கார்ட் நிறுவனத்தின் பணிகள் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (கு)

## அலைபேசி அலறியதால் சட்டத்தரணிக்கு வழக்கு

கொழும்பு, டிசெ. 3
நீதிமன்றத்துக்குள் அலைபேசி அலறியமையால் அதனை வைத்திருந்த ஜனாதிபதி சட்டத்தரணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரலான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்னவின் அலைபேசியே இவ்வாறு அலறியுள்ளது. அதனால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காலி மேல்நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே அலைபேசி அலறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பிலான மேலதிக விசாரணை ஜனவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக நீதிமன்றங்களில் இதுவரை பொதுமக்களின் அலைபேசிகள் ஒலித்தால் அவற்றைப் பறிமுதல் செய்வதும் பின்னர் எச்சரித்து விடுவிப்பதும் சிலபேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதும் இடம்பெற்று வருகிறது. இந்தநிலையில் முதல் முதலாக சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக அவ்வாறு ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (கு-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கங்களை அரவாணிகள் ஆக்காதீர் மாவீரர்களை நினைவுகூர இடமளித்து

## சபையில் கெஹலிய ரம்புக்வெல கொக்கரிப்பு



கொழும்பு, டிசெ 3
மாவீரர் தினத்தை அரச அனுசரணையுடன் நினைவுகூருவதற்கு இடமளித்துச் சிங்கங்களை நல்லாட்சி அரசு அரவாணிகள் ஆக்கிவிடக்கூடாது என்றும், சிங்கக் கொடி கம்பீரமாகப் பறந்த நாட்டை காட்டிக்கொடுக்க வேண்டாம் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வரவு-செலவுத் திட்டத்திலுள்ள குறைபாடுகளையும் அவர் பட்டியலிட்டுக்காட்டிப் பேசினார்.

அவரது உரையின் சாரம்சம் வருமாறு:-

கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அரசு தம்பட்டம் அடித்துக் கொள்கின்றது. ஆனால், உண்மை நிலவரம் அது வல்ல. இன்று ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளது.ஆகவே, அரசு வழங்கிய உறுதிமொழிக்கமைய மேற்படி துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு இடம்பெறவில்லை. இதற்காகக் கடந்த காலங்களில் குரல் எழுப்பியவர்கள் தற்போது மௌனம் காக்கின்றனர்.

நிதி அமைச்சர் போலித் தரவுகளை வழங்கியுள்ளார். இலக்க மோசடிகள் இடம்பெற்றுள்ளன. சுருக்கமாகச் சொல்லப்போனால் நாட்டு மக்களை மயானத்துக்கு அழைத்துச் செல்லும் பட்ஜெட்டாகவே இது அமைந்துள்ளது.

சில அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படவுள்ளன. அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

அத்துடன், ஊழியர் சேமலாப நிதியிலும் கைவைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை பங்குச்சந்தையிலுள்ள பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் முதலீடுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

அதேவேளை, மற்றுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். நான் இனவாதம் பேச முற்படவில்லை. மா வீரர் தினத்தை அரச அனுசரணையுடன்நினைவு கூருவதற்கு சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி கோரியிருந்தனர்.

> மா வீரர் தினத்தை அரச அனுசரணையுடன் நினைவுகூருவதற்கு சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி கோரியிருந்தனர்.

இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஜேர்மன் போன்ற நாடுகளில் தீவிரவாதிகளை நினைவுகூருவதற்கு இடமளிக்கப் படுகின்றதா? ஒரு போதும் இட மளிக்கப் படுவதில்லை. எனவே, இங்கு அதற்கு இடமளித்து சிங்கங்களை அரவாணிகள் ஆக்கிவிடாதீர்கள். சிங்கக் கொடி கம்பீரமாகப் பறந்த நாட்டைக் காட்டிக்கொடுத்துவிடாதீர்கள். தேசிய பாதுகாப்பை கீழ்மட்டமாக்கிவிடாதீர்கள்-என்றார். (து-சி)




# இடரினும் தளரினும்....



முல்லைத்தீவு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை பெய்த மழையில் வகுப்பறைக்குள் குடை பிடித்தவாறு பரீட்சை எழுதும் மாணவர்கள். (ற-9)



படங்கள்: பாடசாலை முகநூல்

# பட்ஜெட்டை எதிர்க்கத் துணிவில்லை விகாரைகளுக்குச் சென்று விமர்சனம்

## அமைச்சர் கயந்த கருணாதிலக சாடல்

கொழும்பு, டிசெ 3
நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து ஆளுங்கட்சியினருடன் நேரடி விவாதத்தில் ஈடுபட்டு வரவு-செலவுத் திட்டம் பற்றி விமர்சனங்களை முன்வைக்க முடியாதவர்கள் இன்று விகாரைகளுக்குச் சென்று விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை வரவு-செலவு நீலம், சிவப்பு, பச்சை என்ற சம்பிரதாயத்தில் இருந்து விலகி புதிய, தனித்துவமிக்க, விசேட வரவு-செலவுத் திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளது. வறியவருக்கான நிவாரணம் என்ன என்று முன்னைய வரவு-செலவைப் பார்த்துக் கேட்டனர்.

அன்று வரவு-செலவு வாசித்த பின்னர் கிழங்கு, வெங்காயம், பருப்பு, சீனி போன்ற பொருள்களின் விலை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அன்று பொருள்களின் விலையால் அரசையே கவிழ்க்க முடிந்தது. ஆனால், இன்று அவ்வாறு கேட்கமுடியாது. 11 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் பல கடைகளுக்குச் சென்று சுற்றிவளைப்புச் செய்தனர். கல்விக்கும் சுகாதாரத்துக்கும் அதிக தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவில்வாகனப்புகைப்பரிசோதனை மற்றும் வாகனம் தொடர்பில் மட்டுமே எதிர்க்கட்சியால் கதைக்கமுடியும். அவ்விரு விடயங்களுக்கும் மாலையில் நிதியமைச்சர் பதிலளிப்பார்.

இந்த வரவு-செலவில் 14 ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக 21 ஆயிரம்மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கிராம இராச்சியம் எண்ணத்தை நாம் பலப்படுத்துவோம். நாம் கம்உதாவ திட்டத்தை மீண்டும் பலப்படுத்துவோம். ராஜபக்ச அரசில் புதிய வீடுகள் கட்டிக்கொடுப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ நிர்மாணித்த வீடுகளுக்கு சாயமடித்தனர். வீதிகள் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என முன்னைய அரசு கூறியது. அபிவிருத்தியடைந்ததோ, இல்லையோ பலருடைய பொக்கற்றுகள் நிறைந்தன.

திஸ்ஸமாராம, பந்தகிரிய மக்கள் முன்னைய அரசின் திட்டத்தால் குடிதண்ணீர் இன்றித் தவித்தபோது அவர்களுக்கான குடிதண்ணீர்த் திட்டத்துக்கான நிதியை நாமே ஒதுக்கினோம்.

கடந்த அரசு கொள்ளையடித்த பணத்துக்காக சுமார் 44 ஆயிரம் மில்லியன் நிதியை எமது அரசால் செலுத்தவேண்டி வந்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரச சேவையாளர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வழங்குவதாகக் கூறினார். அதனை வழங்கினாரா? ஆனால், எமது அரசு வாக்குறுதியளித்ததன்படி 10 ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இன்று ஊடகச் சுதந்திரம் பேணப்பட்டுள்ளது. இங்குள்ள சில விகாரைகளுக்குச் சென்று பிழைகளைக் கூறுகின்றனர். கடந்தகால அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அதிகமாகக் கதைக்கின்றனர். ஜி.எஸ்.பி. சலுகை, ஐரோப்பிய ஒன்றிய மீன் சந்தை என்பன இல்லாமல் போயின.

விவசாயிகள் உட்படப் பல்வேறு துறைசார் மக்களின் பிரச்சினைகளுக்குத் தற்போதைய அரசால் மட்டுமே தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும்-என்றார். (து-சி)

# பிரசாந்தனுக்கு தொடர்ந்து மறியல்

மட்டக்களப்பு, டிசெ 3
மட்டக்களப்பு ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச்சம்பவத்துடன்தொடர்புபட்டார் எனக் கூறப்படும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்கட்சியின் பொதுச்செயலாளரான பூபாலபிள்ளை பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரர் ஹரன் ஆகியோரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் பதில்நீதிவான் எஸ்.சின்னையா நேற்று உத்தரவிட்டார். மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியில் 2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட னர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவர்களில் ஒருவரின் சகோதரியொருவர் காத்தான்குடிபொலிஸாருக்குவாக்குமூலமொன்றை அளித்தமை தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவருக்கும் மீண்டும் நீதிமன்றத்தால் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு; தள்ளாட்டம் போடுகிறது அரசு

● இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதன் மூலமே, இனமோதல்கள் மீளவும் நிகழாமல் தடுப்பதை நிச்சயப்படுத்த முடியும். அவசியமானதும் அதுவே.

● நாட்டில் உள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் ஏற்புடையதான, அதிகாரப்பகிர்வை உள்ளடக்கியதுமாக, இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு அமைய வேண்டும்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவருமான சந்திரிகா (பண்டாரநாயக்க) குமாரதுங்க மேற்போந்தவாறு திருவாய் மலர்ந்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அதன் தலைவரான சந்திரிகா மேற்போந்த கருத்தை வெளியிட்டார்.

மேலும்-

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம், இரண்டாயிரமாம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வை நாடி வரையப்பட்ட உத்தேச அரசமைப்பு, அனைத்துக் கட்சி மாநாட்டின் பரிந்துரைகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றை இப்போது ஆராய்ந்து, நாட்டுக்கு உகந்த தீர்வு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இயலும்-- என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.


அந்தத் தீர்வு நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்துவனவாகவும், அதிகாரப் பகிர்வை உள்ளடக்கியதாகவும், இனப்பிரச்சினையை இல்லாமல் ஆக்குவதாகவும் அமைய வேண்டும் என்றும் சந்திரிகா கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும், 2002 ஆம் ஆண்டில்-- பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர், ரணில் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒஸ்லோ பேச்சுவார்த்தை, அதன் ஊடாக உருவாக்கப்பட்ட, இணக்கம் காணப்பட்ட, நடுநிலை நின்று வகுக்கப்பட்ட விடயங்களை வசதியாக மறந்துவிட்டார் போலும்...!

மேலும், 2002 ஆம் ஆண்டின் ஒஸ்லோ பிரகடனத்தில் உடன்பாடு காணப்பட்ட ஒன்றுபட்ட இலங்கைக்குள், சமஷ்டி அமைப்பு, சுயநிர்ணயம் கொண்ட அரசை உருவாக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், சந்திரிகா தமது ஊடகவியலாளர் சந்திப்பில் இதனையும் ஆராய்வதற்கு எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை; தெரிவிக்கவில்லை. வசதியாக மறந்துவிட்டார்.

அதேவேளை, தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுட்டிக்காட்டிய, ஒஸ்லோ அதிகாரபூர்வ அறிக்கை குறித்தும் முன்னாள் ஜனாதிபதி எதுவும் தெரிவிக்கவில்லை.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரசைகள், அவர்களுக்குச் சேரவேண்டிய அரசியல் ஆட்சி யியல் உரிமைகள் சமநீதியின் பாற்பட்டு வழங்கப்படாவிடின், தென்னிலங்கை அரசியல் வழமை போன்றே, தாம் உயர்ந்து நிற்கவும், தமிழ் மக்களை கீழே விழுத்தி விடவும், வஞ்சகம் செய்யும் வழமையான போக்கே உயரும். அந்த நிலை தொடர்ந்தால், சிங்கள ஆட்சியாளர் எவரும் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அரசியல் மற்றும் உரிமைகளை வழங்கமாட்டார்கள் என்ற தேற்றமே தொடரும்.



# மகிந்த கவிழ்க்கப்பட்டதற்கான உண்மையான காரணங்கள்

எம்.ஐ.முபாறக்

ஒரு நாட்டின் ஆட்சி மாற்றத்துக்குப் பல காரணங்கள் உள்ளன. இனவாதம், வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு, ஊழல், மோசடி மற்றும் சர்வதேச சதி போன்றவை அவற்றுள் அடங் கும். சமீபகாலமாக உலக நாடு கள் பலவற்றில் ஆட்சிமாற்றங் கள் ஏற்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அந்த ஆட்சி மாற் றங்கள் ஒவ்வொன்றுக்கும் மேற் குறிப்பிடப்பட்டுள்ள காரணாங் களுள் ஏதாவது ஒன்று இருக் கவே செய்கின்றது.

### ஆட்சி மாற்றத்துக்கான காரணங்கள்

மகிந்த ஆரம்பம் முதலே அமெரிக்காவையும் அதன் நேச நாடுகளையும் பகைத்துக்கொண்டு அமெரிக்காவின் எதிரி நாடுகளுடன் உறவாடத் தொடங்கினார். அத்தோடு, போரை நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளையும் உதறித் தள்ளினார். அங்கேதான் அவருக்கு எதிரான சதி ஆரம்பமானது.

அதிலும் முக்கியமாக, சீனாவுடன் உறவாடிக் கொண்டு உலக வல்லரசை அவர் எதிர்க்கத் தொடங்கினார். உள்ளூர் ரவுடிபோல் அவர் நடந்துகொண்டார்.

### இந்தியாவின் பங்களிப்புக்கு அச்சுறுத்தல்

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகை யில், சீனாவின் பலவேலைத்திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானது தான் சர்ச்சைக்குரிய கொழும்புத் துறைமுக நகரத்திட் டம்.

140 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தத் திட்டத்துக்கு கொழும்பு காலிமுகத்திடலை அண்டிய கடற்பரப்பில் 450 ஏக்கர் பரப்பளவு சீனாவுக்கு வழங்கப்பட்டது. இலங்கைக்குள் ஒரு குட்டிச் சீனா என்ற அடிப்படையில்தான் அந்த நகர் உருவாக்கப்படவிருந்தது.

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரிப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. எந்த நாட்டிலும் அமெரிக்காவின் ஆதிக்கம்தான் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், அந்த நாட்டின் ஆட்சியைக் கவிழ்த்து தனக்குக் கட்டுப்படக்கூடிய ஆட்சியை உருவாக்குவதுதான் அமெரிக்காவின் பாணி.

அந்தப் பாணியை இலங்கை விவகாரத்தில் பயன்படுத்த அமெரிக்கா களமிறங்கியது. அதனுடன் இந்தியாவும் கைகோர்த்தது. மகிந்தவைக் கவிழ்ப்ப

> “மகிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டமைக்கு நாம் பல காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இவற்றை அழகாக ஒழுங்குபடுத்தி மகிந்தவைக் கவிழ்த்தது மேற்குலக நாடுகள்தான்.”

தற்கு ஏதுவாக அவரது ஆட்சியில் தோன்றிய பேரினவாதம், வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு மற்றும் ஊழல், மோசடிகள் போன்றவற்றை அழகாக வடிவமைத்து - ஒழுங்குபடுத்தி மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தது அமெரிக்கா.

மேற்படி விடயங்கள் தொடர்பில் இலங்கை மக்கள் மகிந்த மீது அதிருப்தியடைந்திருந்ததால் அது அமெரிக்காவுக்கு மேலும் வாய்ப்பாகிப் போனது. அந்த விவகாரங்களை நன்கு ஊதிப் பெருப்பித்து திட்டப்படி வெற்றியை அடைந்தது அமெரிக்கா.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும் சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து இந்திய - அமெரிக்க நாடுகளின் விருப்பத்துக்கேற்ப கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் புதிய அரசால் இடைநிறுத்தப்பட்டது.

சீனாவுடனானதனது நெருக்கமான உறவும், சீனாவின் துறைமுக நகரத் திட்டமுமே தனது அரசைக் கவிழ்த்தன என்பதை மகிந்த நன்கு அறிவார். என்னை அமெரிக்காதான் கவிழ்த்தது என்று மகிந்த பாகிஸ்தான் ஊடகம் ஒன்றுக்கு அப்போது கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கிராமத்துச் சண்டியர்

ஆட்சி கவிழ்வதற்கு ஏதுவாக அவரது ஆட்சி சென்றுகொண்டு இருக்கின்றது என்பதையும் பேரினவாதம், ஊழல், மோசடிகள், வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பு மற்றும் சர்வதேச கொள்கை போன்றவற்றில் பொருத்தமான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதையும் அரசியல் நிபுணர்கள் மகிந்தவுக்கு எடுத்துக் கூறிய போதும், அவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது ஒரு கிராமத்துச் சண்டியர்போல் மகிந்த செயற்பட்டார்.


போர் வெற்றி என்றென்றும் நிலைத்திருக்கும்; அது எப்போதும் தனது ஆட்சியைக் காப்பாற்றும் என அவர் முட்டாள்த்தனமாக நம்பியிருந்தார். ஆட்சியை மீளக் கைப்பற்ற சீன உறவு தேவை என மகிந்த நினைக்கின்றார்போலும். மஹிந்தவை மீண்டும் தலை தூக்கவிடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கும் அமெரிக்காவும் இந்தியாவும் மகிந்தவின் சீனப்பயணம் தொடர்பில் இப்போதே மிகவும் விழிப்படையத் தொடங்கி விட்டன. அவரது பயணம் அவருக்கு எந்தவகையில் நன்மையளிக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# உயிரை மாய்ப்பது பிரச்சினைக்குத் தீர்வல்ல



பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்கள் - சிறுபான்மை இனங்கள் எதேச்சாதிகார அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த போதும் உங்களது ஆர்ப்பாட்டங்களாலும் போராட்டங்களாலும் நாம் அசைந்து விடப்போவதில்லை என்றவாறு மௌனியாகவே அரசு இருந்து வருகின்றது. அரசின் உச்சக்கட்ட மௌனம் அதன் தமிழர் விரோதப் போக்கின் எடுத்துக்காட்டாகும். கோரிக்கைகளை வென்றெடுக்க மிகவும் வலுவான உறுதியான செயல்களை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யும் மக்கள் அதற்காகத் தமது உயிரை மாய்க்கும் அளவுக்குத் துணிகிறார்கள். இலங்கைத் தமிழினம் அரசால் படுகாலைக்கு உட்படுத்தப்பட்ட போதெல்லாம் தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் பலர் தம்மையே தீக்கிரையாக்கி அரசுகளிடம் நியாயம் தேடியுள்ளனர். பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை உலகின் கவனத்தில் ஈர்க்கத் தங்களை ஆகுதியாக்கும் இந்த மக்களின் தியாகம் கூட அரசால் பொருட்படுத்தப்படவில்லை. நீ எப்படியும் போ, என்பிடிதளரப்போவதில்லை என்பதுதான் அரசுகளின் நிலைப்பாடு. இலங்கை, இந்திய நாடுகளில் இதுபோன்ற உயிர்த் துறப்புக்கள் கணிசமாக இடம்பெறினும் அரசியல்வாதிகள் அவற்றைக் கணக்கெடுப்பதில்லை.

**மதிக்கப்படாத உயிர்த் தியாகங்கள்**

அதாவது உயிர்த் தியாகங்கள் கூட மதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் இவ்வாறான போராட்டங்கள் வெற்றியளிக்குமா? என்பது குறித்துதமது உயிரை மாய்த்துக்கொள்ள முனைபவர்கள் சிந்திக்க வேண்டும். இதுபோன்ற போராட் டங்கள் கடந்த காலத்தில் பல இடம்பெற்றிருந்த போதும் அதன்மூலம் வெற்றி கிடைத்ததா? மக்கள் பிரச்சினை தீர்ந்துள்ளதா? என்பது குறித்து உயிர் துறக்கத் துணிபவர்கள் சிந்திக்க வேண்டும். உயிர் பெறுமதி மிக்கது.அதன் பெறுமானத்தைக்கூட கவனத்தில் எடுக்க விரும்பாத ஆட்சியாளர்கள், தற்கொலை முடிவை எடுப்பவர்கள் இது குறித்தும் யோசிக்க வேண்டும்.

**உரிய கௌரவம் இல்லை**

மக்களின் எதிர்காலத்துக்காக நீங்கள் செய்யும் தியாகம் தமிழ் மக்களால் உணரப்படும். அதற்கான கௌரவம் வழங்கப்படும்.

ஆனால் தென்னிலங்கைச் சிங்கள அரசு உங்களது தியாகங்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்போவதில்லை. யாழ்ப்பாணத்து வீதிகளில் எமது இளைஞர்கள் எத்தனைபடுவேகமாக மோட்டார் சைக்கிளை துரத்துகிறார்கள். போக்குவரத்து விதிகளுக்கு முரண்பாடாகப் பறக்கிறார்கள்.

தமக்கென ஒரு நாளை வகுத்துக்கொண்டு அந்த நாளில் வாகனங்களில் செல்லும் மக்களை நிறுத்தி ஏதாவது ஓர் ஆவணம் இல்லை என்றோ அல்லது ஏதாவது ஒரு குற்றத்தையோ கண்டுபிடிக்கும் பொலிஸார் வேகமாகப் பறக்கும் இளசுகளைக் கண்டு கொள்வ தேயில்லை.

தமிழர்தானே, விபத்தில் தொலைந்தால் தொலையட்டும் எண்ணிக்கை குறையும்தானே என்ற திருப்தி. இதேபோன்று உயிர் துறப்புப் போராட்டம் தமிழர் தொகை குறைய வழி யேற்படுத்தும் என்பதால் அரசுக்கும் உள்ளூர மகிழ்ச்சி தரும் ஒன்றாகத்தான் இது அமையும்.

> **"உயிர்த் தியாகங்கள் கூட மதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் இவ்வாறான போராட்டம் வெற்றியளிக்குமா? என்பது குறித்து தமது உயிரை மாய்த்துக் கொள்ள முனைபவர்கள் சிந்திக்க வேண்டும். இதுபோன்ற போராட்டங்கள் கடந்த காலத்தில் பல இடம்பெற்றிருந்தபோதும் அதன்மூலம் வெற்றி கிடைத்ததா?"**

**தற்கொலை தீர்வல்ல**

போராட்டம் தேவையானதும் அவசியமானதும்தான். அது உரிய முறை யில் முன்னெடுக்கப்பட வேண்டும். உயிரை மாய்த்துக் கொண்டால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு விடும் என்பது தவறான முடிவு.

தமிழ் மக்களின் பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, எழுபது வருடங்களுக்கு மேலாகத் தொடர்கிறது. பிரச்சினைகள் முற்றி ஆயுதம் ஏந்தியும் பெரிய அழிவுகளைச் சந்தித்த எமது இனத்தின் தலைமைகள் எமது போராட்டம் வெற்றியடையும் என்பதற்காகத் தம்மைத்தாமே அழித்தார்களா? அதனால் நடக்கப்போவது எதுவுமில்லை என்பதை அவர்கள் அறியாதவர்களுமல்லர். தற்கொலை செய்வதற்கு முன்னதாக சிந்தியுங்கள்!

## வயாவிளான் கல்லூரி மாணவர்களுக்கான போக்குவரத்தில் சிக்கல்கள் இல்லை

தங்களது பத்திரிகையில் கடந்த 20ஆம் திகதி 15 ஆம்பக்கத்தில் வாசகர் திருமுகப் பகுதியில் வெளியான செய்தி தொடர்பாக பின்வருவனவற்றை அறியத்தருகின்றேன்.

எமது இ.போ.ச பிரதம பிராந்திய முகாமையாளரிடம் வயாவிளான் மத்திய கல்லூரி வரை பஸ் சேவையை நீடிக்குமாறு அந்தக் கல்லூரியின் பழைய மாண வர் சங்கத்தினர் விடுத்த கோரிக்கையை அடுத்து வடபிராந்திய உயர் அதிகாரிகள் கடந்த ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி வயாவிளான் மத்திய கல்லூரி சென்று அங்கு அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாண வர்களுடன் கலந்துரையாடி அவர்களது குறைகளைக் கேட்டறிந்து, அதன் பிரகாரம் புன்னாலைக்கட்டுவன் வடக்குவரை சேவையில் ஈடுபடும் பஸ்களை வயாவிளான் பாடசாலை வரை நீடிப்பதெனவும், பாடசாலை மாணவர்களது கோரிக்கைக்கு அமைவாக ஆண், பெண் பிள்ளைகளுக்கு தனித்தனியான பேருந்துச் சேவைகளை நடத்துவதெனவும் அறியத்தந்து அதன் பிரகாரம் இடம்பெற்று வருகின்றது.

கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களது வசதி குறைந்த நிலையை கருத்தில் கொண்டு 90 வீத கழிவுடன் பாடசாலை பருவகாலச் சீட்டுப் பெறுவது எப்படி என்ற விளக்கத்தை எமது பிராந்திய முகாமையாளர் (செயலாற்றல்) மூலம் மாண வர்களுக்கு வழங்கி, பின்னர் வடமாகா ணத்தில் எந்தப் பாடசாலையிலும் இல்லாத வகையில் எமது உத்தியோகத் தர்கள் அந்தப் பாடசாலைக்குச் சென்று 90 வீத கழிவுடன் பருவகாலச் சீட்டை வழங்கியுள்ளோம். குறிப்பாக அந்தப் பாட சாலையில் 95 வீதமான மாணவர்களுக்கு பருவகாலச் சீட்டு வழங்கியுள்ளோம்.

அதைவிட நான் உட்பட எமது வட பிராந்திய உயர் அதிகாரிகள் அடிக்கடி வயா விளான் மத்திய கல்லூரிப் பகுதிக்குச் சென்று பேருந்துச் சேவை தொடர்பாக அவதானித்து வருகிறோம். அத்துடன் வடக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேரக் கணிப்பாளர் ஒருவரையும் கடமையில் ஈடுபடுத்தி பஸ்கள் அனைத் தையும் வயாவிளான் வரை சென்று செயலாற்றுவதை உறுதிப்படுத்திக் கொண் டுள்ளோம். இந்த நிலையில் பணம் செலுத்தி பயணச்சீட்டுப் பெற்று பயணிக் கும் மாணவர்கள் மிகக்குறைவு.

செ.குலபாலசெல்வம்
சாலை முகாமையாளர் இ.போ.ச(வட) யாழ்.சாலை

## ஒழுங்கையின் தலைவிதி மாறாதா?

கஸ்தூரியார் முதலாவது ஒழுங்கையின் மேற்குப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அதைப் பயன்படுத்துபவர்கள் மழைகாலத்தில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த அண்மையில்தான் புனரமைப்புச்செய்யப்பட்டது. முன்பும் இதில் வெள்ளநீர் தேங்கி நிற்பது வழக்கமாக இருந்தது. இப்போதும் அதே நீடிக்கின்றது. இந்த வீதியால் நடந்து செல்லுபவர்களின் நிலைதான் பரிதாபமாகக் காணப் படுகின்றது. இவர்கள் வெள்ளநீரில் செல்வதால் கால்களை அண்டிய பகுதியில் அணிந்திருக் கும் ஆடைகளும் பாதிப்பை எதிர்கொள் கின்றன. காங்கேசன்துறை வீதி உயர்த்தப்பட் டுள்ளதால் இந்த ஒழுங்கையில் தேங்கிநிற்கின்றவெள்ளம்வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்று வழியொன்றைக் கண்டுபிடித்து வெள்ளநீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது உரியவர்களின் கடமையாகும்.

மேலும் வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணமாக டெங்கு போன்ற உயிர் கொல்லி நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுமென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ந.வாகீசன், யாழ்ப்பாணம்

## வடவரணி சிமிழ் கண்ணகைபுரம் வீதி புனரமைக்கப்படுமா?

யாழ்.தென்மராட்சி வரணி வடக்கு சிமிழ் கண்ணகைபுரம் வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப் படாததால் போக்குவரத்து செய்யும் பிரயாணிகள் மிகவும் இக்கட்டான சூழலில் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த வீதி பாடசாலை மாணவர்கள், குடத்தனை வாழ் மக்கள், வாகனங்கள் பெருமளவில் பயணிக்கும் முக்கிய வீதியுமாகும்.

அதுமட்டுமல்லாமல் இந்த வீதியில் அமைந் துள்ள (அரச) வெட்டுக்குளம் பெரும் அரிப்பெடுத்த நிலையில் போக்குவரத்து திடீர் என தடைப்பட வாய்ப்புள்ள நிலையில் உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெட்டுக்குளத்துக்கு வீதிக்காக ஓர் அணைக்கட்டை அமைத்து இந்த வீதியையும் புனரமைப்புச் செய்து தரவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் சார்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அ.புவனபதி, கறுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தரிசனம்

# மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய

## திறப்புவிழா சிறப்பிதழ் – 03.12.2015

### யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



மிருசுவில் பங்கின் புனித. நீக்கொ லார் ஆலயம் புதுப்பொலிவுடன் அபிஷேகம் செய்யப்படும் இத்தருணத்தில் இறை யாசியுடன் கூடிய வாழ்த்துக்களை பங்குத் தந்தைக்கும், பங்கு மக்களுக்கும் தெரி விப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆயராகிய புனித. நீக்கொலார் திருச் சபையின் முதன்மைப் புனிதர்களில் ஒருவர். இறைபற்று,பிறரன்புப் பணி ஆகியவற்றிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். பல்வேறு சந்தர்ப்பங்களில் திருச்சபையின் போதனைகளை முன்நிறுத்தி வாதாடிய வேதவல்லுனராகவும், ஏதிலிகள் சிறுவர் மீது அன்பும் இரக்கமும் கொண்ட நத்தார் தாத்தாகவாகவும் எண்ணற்ற புதுமைகள் மூலம் இறைமாட்சியை எடுத்தியம்பிய புனிதராக வும் புனித. நீக்கொலார் திருச்சபை வரலாற்றில் பரிணமித் துள்ளார்.

மிருசுவில் பங்கு யாழ். மறைமாவட்டத்தின் தொன்மை யான கத்தோலிக்க பணித் தளங்களில் ஒன்றாகும். அங்கு புனித. நீக்கொலார் பெயரில் நிலைபெற்ற ஆலயம் சுமார் 150 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. பல்வேறு இடப்பெயர்வு களின்போது இவ்வாலயமும் அதன் சுற்றாடலும் பல்லாயிரம் மக்களின் புகலிடமாக விளங்கியது எம் நினைவுகளில் இன்றும் நிழலாடுகின்றது.

காலநிலையாலும்,போரின் வடுக்களாலும் பாதிப்புற்ற தம் கிராமத்தின் பாதுகாவலரின் ஆலயத்தை மிருசுவில் மக்கள் குறுகிய காலப்பகுதியில் அழகிய ஆலயமாக நிறைவு செய்திருப்பது பாராட்டிற்குரியது.இவ்வாலயம் இறை பிரசன்னத்தின் இல்லமாகவும், விசுவாசத்தின் காப்பரணாக வும், பிறரன்பின் மையமாகவும் என்றும் திகழ ஆசிக்கின்றேன்.

பேருட் . கலாநிதி
யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் - யாழ். ஆயர்

### பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

**ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. லூக் 1:14**



மிருசுவில் தூய நீக்கொலார் ஆலயம் புதிய உருவெடுத்து விண்ணக மண வாள னுக்குரிய அழகிய மணவாட்டியா ஆடை ஆபரணங்களு டன் அழகுற நிற்கும் காட்சி மனதிற்கு நிறைவும் மகிழ்வும் தருகின்றது.

எனது குருத்துவப் பணிவாழ்வில் பங்குத் தந்தையாக முதல் பணியேற்ற மிருசுவிலில் இவ் ஆலயத்தினை மீளக் கட்டுமானம் செய்தமை என் பணிவாழ்விற்கு கிடைத்த பாக்கியம் எனக் கருதுகின்றேன். இரு வருடகாலத்தில் இப்பணியை நிறைவு செய்ய அருள் கூர்ந்த இறைவனுக்கும் துணை நின்ற யாவருக்கும் நன்றி நயக்கின்றேன். இப்பணியை சிறப்பாக நிறைவுசெய்ய அரும்பணியாற்றிய கட்டுமானப்பணி விசேட செயலணிக்கும்,தாராளமாக உதவி நல்கிய உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் வாழும் மிருசுவில் மண்ணின் மைந்தர்களுக்கு என் பாராட்டுக்கள் உரித்தாகுக.


கட்டுமானப் பணியில் பல்வேறு சவால்களையும், இடர்களையும் சந்தித்த போதும் அவற்றை வெற்றிகொள்ள புனித.நீக்கொலாரின் பரிந்துரையும்,இறை பிரசன்னமும் எம்மை வழிநடத்தி,வலுப்படுத்தியதை நான் உணர்ந்து கொண்டேன். எம் ஆலயத்தை அழகுறக் கட்டிவிட்டோம். ஆயினும் நம் இதயங்களை இணைத்து இறைவனை வழிபட தூய வாழ்விற்கு எம்மை அர்ப்பணிப்பதே எம்முன்னுள்ள பெரும் கடமையாகும். எனவே எம் வாழ்வால் இறைவனை மகிமைப்படுத்த உங்களை அழைக்கின்றேன். இந்தப் புதிய தரிசனத்தினூடாக புனித வாழ்வு நம்மில் மலரட்டும்.

அருட்பணி. A.J.A.ஜெயரஞ்சன்
பங்குத்தந்தை மிருசுவில்



இந்த ஆலயம் தான் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தஞ்சமளித்தது. இங்கே தங்கியிருந்து அருள் பெற்றவர்கள் ஆலயத்தின் அபிவிருத்தியில் இணைந்து கொள்ள விரும்பின் தொடர்புகொள்ளவும்.

பங்குத்தந்தை, புனித நீக்கொலார் ஆலயம், மிருசுவில்.



யாழ் மாவட்டத்திலிருந்து தெற்கு நோக்கி A9 நெடுஞ் சாலையூடாகவோ புகையிரத மார்க்கமாகவோ பயணிப்போர் மிருசுவிலில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் புனித. நீக்கொலார் ஆலய தரிசனத்தை நிச்சயம் அனுபவித்திருப்பர். நூற்றாண்டு காலப் பழைமைமிக்க இத்தேவாலயம் 1987 இல் ஒப்பரேசன் லிபரேசனில் இடம் பெயர்ந்த வடமராட்சி மக்களுக்கும், 1995 இல் சூரியக்கதிர் நடவடிக்கையில் நிர்க்கதியாகி அபயம் தேடிய தீவக, வலிகாமம், யாழ்ப்பாண மக்களுக்கும், 2009 இல் வன்னிப் பெரு நிலப்பரப்பிலிருந்து யாழ் திரும்பிய மக்களுக்கும் புகலிடமளித்த கூடாரம் என்பதை எம்மில் பலர் மறந்திருக்க மாட்டோம். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தஞ்சமளித்த இவ்வாலயம் போர் அதிர்வுகளாலும் , இயற்கைத் தாக்கங்களா லும் பாதிப்புற்ற நிலையில் , உள்ளூரிலும் , வெளிநாடுகளிலும் வாழும் இம் மண்ணின் மக்களால் புதிதாகக் கட்டியெழுப்பப் பட்டு இன்று இளைப்பாறிய யாழ்.ஆயர் பேரருட்கலாநிதி.இ. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் அபிஷேகம் செய்யப்படுவது ஒரு வரலாற்றுப்பதிவாகும். இவ்வரலாற்று நிகழ்வையொட்டி புதிய தரிசனம் என்னும் சிறப்புமலர் இன்று வெளிவருகின்றது.

#### புனித நீக்கொலார் புகழ்மாலை

மிருசுவிலின் பாதுகாவலரான புனித. நீக்கொலார் துருக்கி நாட்டின் லிசியா என்னும் பட்டணத்துள்ளடங்கும் பற்றாறா என்னும் கிராமத்தில் கி.பி 270 பங்குனி 15 இல் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். ஆழ்ந்த இறைபற்றும், பிறரன்பும் மிக்க புனிதர் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருச்சபையின் போதனை களை முன்நிறுத்தி வாதாடிய வேதவல்லுனராவார். இறை சித்ததால் மீரா பட்டணத்தின் ஆயராகத் திருப்பொழிவு பெற்ற புனித. நீக்கொலார் எண்ணற்ற புதுமைகள் மூலம் இறைமாட் சியை எடுத்தியம்பிய புனிதராகவும் திருச்சபை வரலாற்றில் பரிணமித்துள்ளார்.ஏழைகள்- சிறுவர்கள் மீது அன்பும்- இரக்கமும் கொண்ட புனித நீக்கொலார் கிறிஸ்மஸ் காலங்களில் அவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கி நத்தார் தாத்தா என்னும் பாரம்பரியத்தையும் ஆரம்பித்தவராவார். கி.பி 343 இல் மார்கழி 6ஆம் நாளில் புனிதர் அமரத்துவம் அடைந்திருக் கக் கூடுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவர் இறந்த பின் அவர் உடலிலிருந்து சுரந்த ஒரு வகைத்திரவம் பல்வகை வியாதி களைக் குணமாக்கும் வல்லமைமிக்கதாக விளங்கிய தென்பர். மிருசுவிலிலும் முன்னொரு காலத்தில் தீராத தொற்று நோய் புனிதரின் வல்லமையா லேயே குணமாகியது என்பர். புனித. நீக்கொலார் மாலுமிகள், வியாபாரி கள்,ஏதிலிகள், சிறைப்பட் டோர்போன்ற பல்வேறு தரப்பினரின் பாதுகாவலரா கக் கணிக்கப்படுகின்றார்.

#### மிருசுவில் பங்கும், புனிதரின் ஆலயமும்

மிருசுவில் மண்ணிலே கத்தோலிக்க திருமறை நிலைபெற்று நான்கு நூற்றாண்டுகளாகின்றன... 1686 இல் கிளாலி உள்ளடங்கலான இப்பிரதேசத்தில் கத் தோலிக்க பணித்தளம் இருந்தாக பதிவுகள் உள்ளன. இப்பிரதேசம் 1871 இல் பங்குத் தளமாக உயர்த்தப்பட்டது. இங்கு கொட்டகையாகக் காணப்பட்ட வழிபாட்டிடம் 1872 இல் அத்திபாரமிடப்பட்டு 1893 இல் ஆலயமாக முழுமைபெற்றதாக ஆவணங்கள் சான்றுரைக் கின்றன. இந்த ஆலயமே யுத்த அனர்த்தத்தில் மக்களுக்கு அபயமளித்தது. விசுவாசத்திலும், விருந்தோம்பலிலும் தளைத்தோங்கிய மிருசுவில் மைந்தரின் வாழ்வியலின் மையமே புனித. நீக்கொலார் தேவாலயம் என்றால் அது மிகையாகாது.தம் வாழ்வின் மையமாகிய புனிதரின் இல்லிடத்தை காலத்தின் தேவைக்கேற்ப புதிதாக வடிவமைக்க வேண்டுமென்ற மிருசுவில் மக்களின் ஆவல் இன்று நிறைவேறுகின்றது. இந்த ஆலயத்திற் கான ஆரம்ப வேலைகள் முன்னாள் குருமுதல் வரும் தற்போதைய ஆயருமாகிய பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி.ம. பத்திநாதர் அவர்களின் தலைமையில் 06.12.2012 அன்று மண்ணின் குரு.அருட்பணி.ஜே.நீக்கலஸ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பமாகியது.தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி A.J.A. ஜெயரஞ்சன் அடிகளாரின் சிறப்பான திட்டமிடல் வழிகாட்டலின் பயனாக இன்று அழகான ஆலயமாக பரிணமித்துள்ளது. இந்த ஆலயம் வெறுமனே ஒரு கட்டடம் [illegible] நம்பிக்கையின் [illegible] பலமுறையின் எழுச்சிக்கான புதிய தரிசனம்.

ஆக்கம்; எப். எக்ஸ். அன்ரன்

### முன்னாள் ஆயரின் ஆசிச்செய்தி



**"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்.
அவரது கோவிலில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்"
தி.பா. 27:4**

எம் மக்களின்வாழ்வியல் தன்மைகளுக்குள் சமயப் பற்றுதலும் ஆன்மீக எழுச்சி நிலையும் மேலோங்கி இருப்பது வெளிப்படையான ஓர் உண்மை. எம் மக்கள் தத்தமது வாழ்வை இறை நம்பிக்கையிலும் பிறரன்புப் பணியிலும் கட்டியெழுப்ப வேண்டியது எமது தார்மீகப் பொறுப்பும், காலத்தின் தேவையுமாகின்றது. அந்த வகையில் காலத்தின் நீரோட்டத்தில் நீண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மிருசுவில் புனித.நீக்கொலார் ஆலயம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. பல்வேறு கஷ்ரங்கள் மத்தியிலும் இந்த ஆலயம் புதுப்பொலிவுபெற உழைத்த அனைவரையும் பாராட்டுகின்றேன். '' நீங்கள் தூய ஆவி குடிகொள்ளும் ஆலயம் '' என்னும் தூய பவுலின் வார்த்தைகள் எம் வாழ்வில் அர்த்தம் பெறவும், ஆன்மீக புதுப்பித்தல் ஏற்படவும் வாழ்வு செழிப்புறவும் இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

பேரருட் கலாநிதி இ. தோமஸ் சௌந்தரநாயகம்

### அரசஅதிபரின் வாழ்த்துச் செய்தி



1987 முதல் 2009 வரை பல சந்தர்ப்பங்களிலும் போரினால் பாதிக்கப்பட்டு பெரும் எண் ணிக்கையிலான குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக தஞ்சம் அடைந்தபோது இவர் களுக்கு ஆலயத்திலும் , ஆலய வளவிலும் புகலிடம் வழங்கி நீண்டகாலத்திற்கு தங்கியிருப்பதற்கான வசதிகளை இப் பிரதேச மக்கள் வழங்கி ஆதரவு அளித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆலயம் பங்கு மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு. எல்லா வழிகளிலும் உறுதுணையாக அமையும் என்னும் நல்ல செய்தியோடு இப்புதிய தரிசனத்திற்கு உழைத்த பங்குத் தந்தை, பங்கு மக்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நா.வேதநாயகன்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர், யாழ்.மாவட்டம்.

### ஆலய அருட்பணிச்சபை செயலாளரின் வாழ்த்து



ஒரு மனிதனின் பூரணத்துவத் தில் ஆன்மீகத்தின் பங்கும் அதிக மானதே. அந்த வகையில் இலங் கைக் கத்தோலிக்க ஆலயங்களில் யாத்திரைத் தலமாகவும், யாழ். மறைமாவட்டத்தில் யாழ் - கண்டி வீதியில் மக்களை இறையாசியுடன் வரவேற்கும் தேவாலயமாகவும் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயம் திகழ்கின்றது.

மிருசுவில் பங்கு மக்களின் ஆன்மீக இல்லமான இத் தேவாலயம் பல இடப்பெயர்வுகளில் மக்களின் தங்கு மிடமாகவும், பாதுகாப்பரணாகவும், கல்விக்கூடமாகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும் திகழ்ந்தமை மறக்கமுடியாதது. பழைமையும், பாரம்பரியமும் மிக்க இவ்வாலயம் போரின் அதிர்வுகளாலும், இயற்கை மாற்றங்களாலும் அதன் கட்டட உறுதித் தன்மையை இழந்ததால் இப்புதிய ஆலயத்தை அமைக்கும் தேவையெழுந்தது.


இவ்வாலயம் அமைக்க பங்கு வாழ்.மக்களும், வெளி நாடுகளிலும்,பிறர் ஊர்களிலும் வாழும் எம் உறவுகளும் வழங்கிய ஆதரவுமே இப் புதிய தரிசனத்தின் அடிநாத மாகும்.அவர்களுக்கு நன்றி நவில்வதுடன், ஆலய கட்டு மானத்தின் ஆரம்பப் பணிகளை முன்னெடுத்த முன்னாள் பங்குத் தந்தை அருட்பணி.ம.பத்திநாதர் அடிகளார் அற்புதமான திட்டமிடல், சிறப்பான வழிநடத்தல் ஆகியவற்று டன் பல்வேறு சுமைகளையும் தன் தோளிற் சுமந்து பெரும்பங் காற்றிய அருட்பணி.A.J.A.ஜெயரஞ்சன் ஆகியோருக்கும் நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன். இவ்வாலயத்தை அபிஷேகம் செய்யும் எம் முன்னாள் ஆயர் பேரருட் காலாநிதி.இ.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கும், ஆசியளித்த எம் ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கட்கும் என் நன்றிதனை நவில்கின்றேன். புனிதரின் பரிந்துரையும், இறையாசியும் இப்புதிய ஆலயத்தின் வழியாக என்றும் எமக்குக் கிட்டட்டும்.

அ.ஜென்சன் றொனால்ட்
செயலாளர், ஆலய அருட்பணிச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு வெள்ளத்தில் மிதக்கிறது தமிழகம்

## 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சென்னையில் கனமழை



சென்னை, டிச. 3
வடகிழக்கு பருவமழையின் தீவிரம் காரணமாக தமிழ்நாட்டின் பலமாவட்டங்கள் பெருவெள்ளத்தில் மிதக்கின்றன.

கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சென்னையில் மிகப் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

தொடர்ந்தும் பரவலாக கடும் மழை பெய்து வருவதால் பாதிப்பு மேலும் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதுவரை 188 பேர் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர். ஆயினும் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வானூர்திச்சேவைகள், தொடருந்துச் சேவைகள் பதிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிக்காக இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. விட்டு விட்டு பெய்தது. தீபாவளிக்கு பிறகு பலத்த மழை கொட்டியது. பின்னர் கடந்த மாதம் 23ஆம் திகதி கனமழை பெய்தது. குறைந்த காற்றழுத்தத்தாழ்வு நிலையால் கடந்த ஞாயிறு இரவில் இருந்து மீண்டும் மழை கொட்டுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள வெள்ளம் போக்குவரத்தைப் பாதித்துள்ளது. மீனம்பாக்கம் வானூர்தி ஓடுபாதை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் பல சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 400க்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் தங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.



நகரின் 60 சதவீதப் பிரதேசத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 18 நாள்களாகப் பாடசாலைகள், கல்லூரிகள், முதன்மைச்சாலைகள் பல இடங்களில் மூடப்பட்டுள்ளன. சில வைத்தியசாலையில் வெள்ளம் உட்புகுந்ததால் நோயாளிகள் வெளியேற்றப்பட் டுள்ளனர். ஆற்றோரம் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து தற்கால குடியிருப்புக்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

நவம்பர் மாதத்தில் மட்டும் சென்னையில் 118 சென்ரி மீற்றர் மழை பதிவாகி உள்ளது. இது வரலாற்றுச் சாதனை என்கிறார்கள் அதிகாரிகள். 1918ஆம் ஆண்டு சென்னையில் நவம்பர் மாதத்தில் 108.8 சென்ரி மீற்றர் மழை பெய்ததே இதுவரையில் கூடுதல் அளவாக இருந்தது என்கிறார்கள் அவர்கள். இதன் மூலம் 107 ஆண்டு கால மழைச் சாதனை இந்த ஆண்டு முறியடிக்கப்பட்டுள்ளது. சென்னையில் கடைசியாக கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் மாதத்தில் 97 செ.மீற்றர் மழை பெய்தமையே அதிகளவானதாக இருந்தது. 1985 ஆம் ஆண்டிலும் இந்த அளவு மழை பதிவாகி இருந்தது. (உ-ரி4)

> ஆற்றோரம் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து தற்கால குடியிருப்புக்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.



# பரம்பரை நோய்த் தீர்வுக்கு மரபணு மாற்றுச் சிகிச்சை

### முழுமையான சாத்தியம் என அமெ. அறிவியலாளர்கள் அறிவிப்பு

வொஷிங்டன், டிச.3
பரம்பரை அலகுகளை - மரபணுக்களை - திருத்துவதன் மூலம் பரம்பரை நோய்களையும், பிறப்பின்போது ஏற்படும் நோய்களையும் குணமாக்க முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் இது ஒரு அறிவியல் கருத்தியலாக இருந்தபோதும், துல்லியமான சிகிச்சை முறையாக விரிவு பெற்றிருக்கவில்லை. இப்போது நடத்தப்பட்ட ஆய்வுகளின் விளைவாக மிகத்துல்லியமாக மரபணுவைச் சரி செய்யும் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அறிவியலாளர்கள் கூறுகின்றனர். மனித மரபணுவில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் மரபுரிமை நோய்களுக்குத் தீர்வு காண முடியும் என அவர்கள் இப்போது ஆணித்தரமாகக் கூறுகிறார்கள்.

இந்தத் தொழில்நுட்பம் கிரிஸ்பர்-கஸ்9 என அழைக்கப்படுகிறது. மரபணுவைச் சரி செய்வதே மரபணு நோய்களுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என ஆய்வு தெரிவிக்கின்றது. ஆனால், ஒரு மனிதனின் மரபணுவை மாற்றுவதென்பது மருத்துவத்தில் மிகச் சவால் நிறைந்தது. இது தொடர்பில் ஆழமான சோதனைகள், கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இயற்கையில் உள்ள நன்மை பயக்கும் பக்ரீரியாவை இனம் கண்டு, அதனை மனித மரபணுவில் சேர்ப்பதன் ஊடாக அந்த பக்ரீரியாத் தாக்கத்திலிருந்து காத்துக்கொள்வதே இந்த முறையில் கடைக்கொள்ளப்படும் நுட்பம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மனிதரில் இந்த நுட்பம் சோதிக்கப்பட்டு முழுமையாக வெற்றி பெற்றுள்ளது என்றும் அமெரிக்க அறிவியலாளர்கள் அறிவித்துள்ளனர். (உ-ரி4)



# முடிவற்ற உள்நாட்டுப் போருக்கு சிரியாவில் ரஷ்ய அதிபர் முயற்சி

### உலகை இப்படி எச்சரிக்கிறார் அமெ. அதிபர் ஒபாமா



பாரிஸ், டிச .3
சிரியப் போரில் ரஷ்யாவின் தலையீடு குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா உலகத்தை எச்சரித்துள்ளார். ஆப்கானிஸ்தான் போன்று சிரியாவிலும் முடிவற்ற உள்நாட்டுப் போர் ஒன்றுக்கே ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் முயற்சி செய்கிறார் என்று ஒபாமா தெரிவித்தார்.

இதே போக்கில் புடின் தொடர்ந்து செயற்பட்டால் அவரது நாடு பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று பாரிஸில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார் ஒபாமா. காலநிலை தொடர்பான உலக மாநாட்டுக்காக பாரிஸ் வந்திருக்கிறார் ஒபாமா.

சிரிய அதிபர பசீர்-அல்- அசாத்தை எதிர்ப்பவர்களைக் கொன்று குவிக்கும் செயற்பாட்டை ரஷ்யா உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் - ஒபாமா வலியுறுத்தினார். "சிரியாவில் அரசியல் மாற்றம் அவசியம். வரவிருக்கும் மாதங்களில் சிரியப் போரை முடிவுக்குக் கொண்டு வரவுள்ளோம். 6 மாதங்களில் இதனைச் செய்து முடிக்க வேண்டும். இந்த முயற்சி மிகவும் சவாலாக இருக்கும். ரஷ்யா தனது போக்கை மாற்றி எம்முடன் இணைய வேண்டும்" எனவும் வலியுறுத்தினார் ஒபாமா.

பாரிஸில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் எமது முயற்சி அமைய வேண்டும். தாக்குதல் நடத்தப்பட்ட பாரிஸில் காலநிலை மாநாட்டுக்கு உலகத் தலைவர்கள் ஒன்றிணைந்தமை எமது துணிவையும், தன்னம்பிக்கையையும் காட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோர் வீழ்ந்தவர்கள் அல்லர்

**கே.கோபாலகிருஷ்ணன்**



இன்று எமது நாடும் கணிசமான அளவில் பொருளாதாரத்தை நோக்கிய வளர்ச்சிப் பாதையில் கடுகதியாக நகர்ந்து கொண்டு செல்கின்றது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்தக் காலகட்டத்தில் மாற்று வலுவுடையோர்களின் பிரச்சினைகள், தேவைகள், வசதிகள் என்பனவும் உணரப்படல் வேண்டும் .

**திறன்களை அளவிடுவோம்**

மாற்று வலுவுடையோர்கள் பலகாலமாக, ஏன் இன்றும் கூட ஊனமுற்றவர்களாக, வலது குறைந்தவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களிடம் காணப்படும் திறன்களை அளவிட்டுப் பார்ப்போமாகில் சில துறைகளில் எம்மிலும் பார்க்க பன்மடங்கு வீத திறன்களைப் பெற்றிருப்பதைக் காணலாம். முதலில் ஒலியைக் கேட்க முடியாதவர்களான செவிப் புலனிழந்தவர்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். இவர்கள் ஒலியைக் கேட்க முடியாமையினால் சாதாரணமானவர்களைப் போன்று ஒலி மூலம் தொடர்பாடல் செய்ய முடியாத வர்களாக உள்ளனர். முதலில் எமது தாயார் எங்களுக்கு மொழியை ஊட்டுகிறார், உணவை ஊட்டுவதில் எவ்வளவு அக்கறையோ அதே அளவுக்கு அக்கறையுடன் மொழியையும் ஊட்டுகின்றார். இதனால் நாம் கவலையடையத் தேவையில்லை. இந்த மாணவர்களிடம் வேறு திறன்களை நாம் காணலாம். செவிப் புலனிழந்த பெண் பிள்ளையாக இருந் தால் அப்பிள்ளையால் மிகத் திறைமையாக ஆடைகளைத் தைக்கவும், கேக் ஐசிங் செய்யவும், மாலைகளைக் கட்ட வும், மணப்பெண் அலங்காரம் செய்யவும், மேலும் இது போன்ற சுயதொழில் முயற்சி களைத் திறம்படச் செய்யவும் முடிகின்றது. இதே போன்று செவிப்புலனிழந்த ஆண் பிள்ளைகள் மிகத் திறமையாக மர வேலை, மேசன் வேலை, ஓவியங்கள் வரைதல், பாதணிகள் செய் தல், மின்உபகரண வேலைகள், ஏனைய கைத் தொழில் வேலைகள் போன்ற வற்றில் சிறந்து விளங்கு கின்றனர். ஆனால் அவர்களது இந்தத்திறன்களை சமூகம் கணிப்பதில்லை. எனவே அவர்களால் கல்வியில் காட்டப்படும் அக்கறை பாராட்டத்தக்கது. இந்த அக்கறை சகல பார்வையிழந்த மாணவர் களையும் சென்றடைய வேண்டும். மேலும் கல்வியை மேற்கொள்ள இயலாதுள்ளவர்கள் சுய முயற்சிப் பயிற்சிகளாக கைப்பணி வேலைகள், கதிரை பின்னல் வேலைகள் போன்ற பயிற்சிகளையும் வழங்கலாம். தற்போது இந்த வேலைகளிலும் பல விழிப் புலனிழந்தவர்கள் சிறந்து விளங்குகின்றார்கள். கிட்டத்தட்ட இன்று இத்தகைய தொழில்களை அவர்களுக்கென்றே ஒதுக்கப் பட வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இது வரவேற்கத்தக்கதாகும்,

**இன்று சர்வதேச வலுவிழந்தோர் தினம்**

கட்டுரையாளர் வலுவிழந்தோர்
புனர்வாழ்வுச் சங்கத்தின்
கௌரவ செயலாளர்.

**தனம்**



# யானைகளின் ஆக்கிரமிப்பால் அழிவைச் சந்திக்கும் ஒட்டுசுட்டான்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு இறக்கி விடப்பட்ட யானைகளால் கிராமங்களில் உள்ள தென்னந்தோப்புக்கள் நாளாந்தம் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் தென்னைச் செய்கையாளர்கள் பாதிப்படைந்து வருவதுடன் காணிகளை விட்டு வெளியேறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. தோட்டங்களுக்கு வரும் யானைகள் எந்தவிதமான அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது தினமும் தமது கைவரிசையைக் காட்டி வருவதுடன் காணிகளுக்கு இடப்பட்ட வேலிகளையும் அறுத்து நாசம் செய்வதால் கால்நடைகள் பயிர்களை நாசம் செய்கின்றன.

இது பற்றி மக்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார், வனவள திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் மக்களை அழைத்துக் கூட்டங்களை நடத்தி இறக்கி விடப்பட்ட யானைகள் பிடிக்கப்பட உள்ளதாகவும், தற்போது யானைகளை விரட்ட வெடிகளைப் பயன்படுத்துமாறும் கூறி வெடிகளை வழங்கினார்கள். ஆனால் யானைகள் பிடிக்கப்படவும் இல்லை, வெடிகளுக்கு கட்டுப்படவும் இல்லை. மாறாக நெல் சேமித்து வைத்துள்ள வீடுகளை உடைத்துச் சேதப்படுத்தியதுடன் உணவுக்காகச் சேமித்து வைக்கப்பட்ட நெல்லையும் சாப்பிட்டு விட்டன. இதில் இரண்டு வீடுகள் ஜீவநகர் பகுதியில் முற்றாக அழிக்கப்பட்டு அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. அத்துடன் பணி முடிந்து திரும்பிய பெண் ஒருவரும் யானையால் தாக்கப்பட்டார். யானைகளால் பயிரழிவுகளும் ஏற்படுகின்றமையால் இந்த வருட காலபோக நெற்செய்கையும் கேள்விக் குறியாகி உள்ளது. தொடர்ந்து தோட்டங்களில் பயிர்களை



அழிக்கும் யானைகள் கிராமங்களுக்கும் வரத் தொடங்கியுள்ளன.

கற்சிலைமடு மூன்றாம் கண்டத்தில் இருக்கும் சுப்பிரமணியம் குமாரசுவாமி என்பவர் கூறும்போது; எனது காணியில் 250இற்கும் மேற்பட்ட தென்னைகள் உள்ளன. அவைகளில் சில பயன் தருகின்றன. மேலும் என்னால் 150 தென்னம்பிள்ளைகள் நடப்பட்டுள்ளன. அவை அடுத்த வருடம் காய்க்கத் தொடங்க உள்ள நிலையில் முதல்நாள் இரவு இரு யானைகள் புகுந்து 25க்கும் மேற்பட்ட தென்னைகளையும் வாழைகளையும் அழித்துள்ளன. அன்றிரவு பலவிதமான முயற்சியின் பின் இவைகள் வேலிகளை அறுத்து விவசாயக் காணியூடாக விவசாயங்களையும் நாசமாக்கிச் சென்றன. அடுத்த நாள் நான்கு யானைகள் உட்புகுந்து மேலும் தென்னைகளை அழித்து விட்டுச் சென்றுவிட்டன.

தற்போது நான்குக்கும் மேற்பட்ட யானைகள் தோட்டத் தில் புகுந்து சேதம் விளை வித்ததால் தென்னைகள் உட்பட எவ்வித பயிர்களும் இன்றி முற்றாக அழித்துள்ளன.

**வீட்டு முற்றத்தில் யானை**

இது நடந்த அன்றிரவு நான் வீட்டைத்திறந்து கொண்டு வெளியே ரோச் லைற்றை பாய்ச்சியபோது எனது முற்றத்திலே யானையொன்று நிற்பதைப் பார்த்து சத்தம் போட்டும், வெடிகொளுத்தியும்கூட யானை அங்கிருந்து அகலவில்லை. நான் பயத்தி[illegible]டிவிட்டு வீட்டின் உள்ளே [illegible]தேன். அதிகாலை வெளியில் வந்து பார்த்தபோது எனது தோட்டம் வெறுமையாக இருந்தது. பயிர்களுக்குப் பதிலாக அவை சாப்பிட்டு வெளியேற்றும் கழிவுகளைத் தான் பார்த்தேன். மற்றுமொரு விவசாயியான செல்லையா குணசேகரம் தெரிவிக்கும்போது; எனது காணியானது பேராற்றுக் கரையோடு உள்ளது. அதில் தென்னம்பிள்ளைகளை நட்டு நீர் இறைத்துப் பாதுகாத்து வந்தேன். இரண்டு இரவுகள் எனது தோட்டத்துக்குள் உட்புகுந்த யானைகள் பயிர்களை முற்றாக அழித்து விட்டன. நான்கு ஐந்து வருடங்களாக விழி மூடாது பாதுகாத்து வந்த தென்னைகள் காய்த்துப் பயன் தரும் வேளையிலே நூற் றுக்கும் மேற்பட்ட தென்னைகளை யானைகள் அழித்து விட்டுச் சென்றுள்ளன. அத்து டன் பயன் தந்து கொண்டிருக்கும் வாழைத் தோட்டத்தையும் முற்றாக மிச்சம்விடாது அழித்துவிட்டுள்ளன. இதனால் மனமுடைந்து காணியை விட்டு வெளியேறியுள்ளேன். தற்போது யானைகள் நடுக் கிராமத்துக்கும் வந்துள்ளன என்றார். யானைகள் தற்போது பண்டார வன்னி கெருடமடு, கற்சிலைமடு, ஜீவநகர், முத்தையன் கட்டு, பேராறு போன்ற கிராமங்களுக்குள்ளும் ஊடுருவியுள்ளன. இதனால் மக்கள் அச்சமடைந்த நிலையிலேயே உள்ளனர், என்றார்.

> வீடுகளை உடைத்துச் சேதப்படுத்தியதுடன் உணவுக்காகச் சேமித்து வைக்கப்பட்ட நெல்லையும் சாப்பிட்டு விட்டன. இதில் இரண்டு வீடுகள் ஜீவநகர் பகுதியில் முற்றாக அழிக்கப்பட்டு அவர் களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப் படைந் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வு தந்தது அகதி முகாம்... காவடி தந்ததோ வாழ்வின் முகம்...

செ.உமாசுதன்

போர்வாழ்வின்கட்டமைப்புக்களும்சூழமைவுகளும் தமிழ் மக்களை தலை தெறிக்க ஓடவிட்டது.அவர்களின் சந்தோசங்களை நிரந்தரமாக தூர விரட்டிவிட்டது.முகத்தில் இருந்த ஆர்ப்பரிப்பான, ஆரவாரமான களையை முற்றாகக் களைந்துவிட்டது. எதிர்கால வாழ்வுக்கான போராட்டமும் வறுமையும் ஒரு புறம் நர்த்தனமாட, மறுபுறம் நெருக்கமான, அடர்த்தியாக எந்த வசதிகளுமற்ற தகரமும் ஓலையும் நிழல் தருகின்ற சிறிய குடிசைகள் நிறைவாய் மலிந்த முகாம் வாழ்வு என்பது அவர்களுக்கு நிரந்தரமாய்ப் போனது.அதிலிருந்து மீண்டு கொள்வதற்கான பாதைகள் புதர் மண்டிப்போய் கிடக்கின்றன. உயர் பாதுகாப்பு வலயம் என்ற அநியாயம் எங்கும் தலை விரித்தாடுகிறது.தங்கள்அன்னைபூமியின்அரவணைப்பிலே, இனியஸ்பரிசத்திலே நிம்மதியாக வாழ்வதற்கும் சுதந்திரமாக உலாவுவதற்கும் இன்னமும் இடம் தரவில்லை.பல இடங்களை விடுவதாகக் கூறியும் சில இடங்களில் மாத்திரம் இருக்க நாங்கள் அனுமதிப் பத்திரம் தருவோம் என்று சொல்லி விடுவித்திருக்கின்றனர்.

ஆனால், அங்கே மீள் குடியமர்ந்தவர்களின் வாழ்வு மீட்சி பெற நீண்ட காலம் தேவைப்படும். இந்த மக்களின் சந்தோசங்கள் எப்போதும் உறை பனியாக உறைந்து போய்க் கிடக்கின்றன.

**சிறிய குடிசைகளில் வாழ்வு**

இதற்கு ஆதாரமாகவும், ஓர் பாடத்திட்டமாகவும் விளங்குபவர்கள் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக அகதி என்ற அலங்கோலம் சுமந்து அதன் எல்லைப்புறக்கிராமங்களின் ஒவ்வோர் அந்தங்களிலும் வாழும் மனிதப் பிறவிகள்தான். முகம் என்ற திறந்த வெளிச் சிறையினுள் வாழ்ந்து வருகின்ற பல ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கூட்டம்தான்.

**சபாபதிப்பிள்ளை முகாம்**

வலி.வடக்கின் ஓர் அந்தத்தில் இருக்கின்றது சபாபதிப்பிள்ளை என்ற முகாம்.

தொலைத்தவர்களின் முகவரி சொல்லுகின்ற ஒரு முகாம். மொத்தமாக 52 குடும்பங்கள் அங்கே வசித்து வருகின்றன. இவர்களின் வாழ்க்கையும் வாழ்வாதாரமும் வலுவிழந்து இருக்கிறது.நிமிர்ந்தெழத் துடிக்கிறது.அன்றாடம் கூலி வேலைகளுக்கும் கிடைக்கின்ற இதர பிற வேலைகளுக்கும் சென்று தங்களின் உறவு களோடு நடை பயில்கின்றனர்.

இவர்களில் ஒருவர் தான் ஆனந்தம் யோகராணி. இவருக்கு தற்போது வயது 58.சொந்த இடமான மயிலிட்டியிலிருந்து 90 களில் இராணுவத்தினரின் படை நடவடிக்கையால் இடம்பெயர்ந்து இருபாலை, கொடிகாமம் என பல இடங்கள் அலைந்து, இறுதியாக 92 களில் இந்த முகாமில் தஞ்சம் புகுந்து கொண்டவர். இந்த முகாமில் உள்ள குடும்பங்களில் இரு குடும்பங்கள் மாத்திரம் தான் காவடி செய்யும் தொழிலைத் தமது வாழ்வாதாரத்துக்கான வழிகாட்டியாக கொண்டுள்ளனர். ஓர் சுய தொழிலாக செய்து வருகின்றனர். "பலாலியிலை இருக்கேக்கை தோட்டம் தான் செய்தனாங்கள். பிறகு இடம்பெயர்ந்து வந்தாப் பிறகு ஒண்டும் செய்யிறத்துக்கு இல்ல. கோயிலுக்குப் போகேக்கை அங்கை காவடி செய்யிறதைப் பாத்திட்டு அதை ஓர் சுய தொழிலாகச் செய்தால் என்ன எண்டுற எண்ணம் வந்தது.அந்த தொடர்ச்சிதான், ஆரம்பத்திலை சின்னச் சின்ன காவடி செய்து பழகினம்.பாதை அடைப்பு நேரம் கஷ்டப்பட்டனாங்கள்.ஏனெண்டால் மயிலிறகு எடுத்து வரேலாது.பிறகு படிப்படியாக எங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொஞ்சம் கிடைச்சுது.அதை முதலாய் போட்டு செய்யத் தொடங்கி படிப்படியாய் உயர்ந்தம்" என்று சொல்லி அமைதியானார்.திடீரென உணர்ச்சிப் பிரவாகத்தோடு இடப்பெயர்வு எங்களுக்குத் தந்தது அகதி முகாம்.ஆனால் காவடி தந்ததோ வாழ்வின் முகம் என்று கூறி ஆர்ப்பரித்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

சரி அதன் செயன் முறை பற்றியும் அதைச் செய்வதற்குத் தேவையான கால இடைவெளிகள் மற்றும் அதற்கான வருவாயும், வாழ்வாதாரத்தில் அதன் பங்கு என்ன என்றும் கேட்ட போது நீண்டதொரு விளக்கத்தைத் தந்தார். அவரது விளக்கத்தில் சுவாரஸ்யம் குறையவில்லை. அவரது வார்த்தைகளின் கோவையாக வருகின்ற கருத்தாடலைப் பார்த்துப் படியுங்கள். துன்பங்கள் இருந்தாலும் வாழ்வை உயர்வாக்க தடைகளை களைந்து முயற்சியோடு உழைக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

> சொந்தத் தாய் நிலம் இழந்து அதன் பாசப் பிணைப்பறுந்து நீண்ட காலம் சிறைப்பட்டுக் கிடக்கும் இவர்களுக்கு மாவைக் கந்தனும் அவன் மறுவடிவமான நல்லை அலங்காரக் கந்தனும் வழி சொல்லக் கூடாதா...? மயிலேறி வந்து தீர்வை மயிலிறகாய் உதிர்க்கக் கூடாதா....? காத்திருக்கின்றனர் கந்தனை வேண்டி நிதம் வழி பிறக்குமென்று ஏங்கித் தவித்து–

**மயிலிறகு**

எங்களிட்டை இப்ப 52 ஆட்டக் காவடிகளும் 02 பறவைக்காவடி செற்றும் இருக்குது. ஒரு காவடி செய்ய முப்பத்தையாயிரம் வேணும். பலகை எடுத்து (சப்பு, வேம்பு,வாகை) வெட்டி பிறகு மூட்டி காவடி வடிவமைப்பைச் செய்ய வேணும். இதை மூடி மேலுக்கு அலங்கரிக்கிறதுக்கு வேலைப் பாட்டோடை கூடின துணி எடுக்க வேணும்.இந்தத் துணி ஒரு மீற்றர் வேண்ட வேணுமெண்டால் ஆயிரம் ரூபா வேணும். வேண்டின துணியை அளவாகத் தைத்து பூ நூல் வேண்டி நெற்போல பின்னி வலை முடிச்சு குஞ்சம் கட்டுவம்.இதுக்கு ஒரு நூலுக்கு 50 ரூபா வேணும். பிறகு மாலை கட்டுற பூ ஒரு கிலோ 400 ரூபா படி வேண்ட வேனும். செண்டு கட்டுறதுக்கு பனம் ஈக்கு வேண்டி வார்ந்து அதிலை பூவை ஒட்டி செண்டாக கட்ட வேணும்.ஒரு செண்டுசெய்ய நாலு நாள் செல்லும்.காவடியை சுற்றி நாலு மயிலிறகு கட்டு கட்ட வேணும்.இதுக்கு மயிலிறகை அடுக்கி ஊசி நூலலை கோர்த்து பின்ன வேணும்.நாங்கள் மயிலிறகை கண் எண்டு தான் சொல்லுறனாங்கள். பெரிய காவடிக்கு ஒரு கட்டைக்கு 250 கண்கள்படி 1000 கண்கள்வேணும்.

ஆடி மாதத்திலை தான் மயில் கண் உதிர்க்கிறது.கண் எடுக்க வன்னிக்கும் போறனாங்கள்.கூடுதலாய் கதிர்காமம் தான் போறனாங்கள்.கதிர்காமத்திலைதிஸமாறகமஎண்டஇடத்திலை தான் போய் எடுக்கிறனாங்கள்.ஒரு பெரிய கண் 10 ரூபா சின்னக் கண் 5 ரூபா.அங்கை சில்லறை விலைக்கு 25ரூபா கொடுத்து வாங்க வேணும்.நாங்கள் நெடுக எடுக்கிற படியாலை குறைச்சுத் தருவினம்.இது தவிர அலகு,வேல் முள்ளு,செக்குத்தி[illegible] முள்ளு,நெற்றியில் போடும் வேல் முள்ளு செய்ய வேணும்.இதுக்கு நோய்த் தொற்று வராத வெள்ளிரும்புக் கம்பி வேண்டி மோட்டரிலை வெட்டிச் செய்ய வேணும். இதை மாரி காலத்திலை தான் செய்வம். ஏனெண்டால் கோடையிலை தொழில் செய்ய வேணும்- என்கிறார்.





**அரங்கேற்றம்**

இத்தனை செயல்முறைகளின் பின்னணியில் உருவம் பெறும் காவடிக்கு அரங்கேற்றம் என்பது ஆலயத் திருவிழாக்களின் ஆரம்பத்தோடு தான்.குறிப்பாக ஓகஸ்ட் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான கோயில் திருவிழாக் காலங்களின்போது தான் அதன் ஆக்கத்துக்கான முழுமையை அடைந்து கொள்கின்றது. இவை தவிர ஆண்டு தோறும் வருகின்ற ஊர்த்திருவிழாக்களின் போதும் சிறப்புப் பெறுகின்றன. நில வாடகையாக 25 அடி நிலத் துண்டுக்கு முப்பதினாயிரம் ரூபா கொடுத்து அலங்கரித்து அரங்கேற்ற நர்த்தனம் காணும் காவடி: நல்லூர்,செல்வச் சந்நிதி, நயினாதீவு, வல்லிபுர ஆழ்வார்,வற்றாப்பளை கண்ணகி அம்பாள், புளியம்பொக்கணை ஆலயம்என அடியவர்களின் தோள்களிலே நர்த்தனமாடி நேர்த்திக் கடன்களாக இறைவனடியைச் சென்றடைகின்றன. இதிலும் சிறப்பாக ஒவ்வோர் மாதத்திலும் வருகின்ற வெள்ளிக்கிழமைகளில் செல்வச் சந்நிதி முருகனிடம் சரண் புகுந்து விடுகின்றன.

**2 வருடத்துக்கு ஒரு லட்சம்**

ஆனாலும் செலவுகளை தமதாக்கி உருவம் கொடுக்கின்ற உழைப்பாளிகளான ஆனந்தன்,யோகராணி போன்றவர்களுக்கு கிடைப்பதோ வருடத்துக்கு ஒரு லட்சம் ரூபா தான்.இதுதவிர ஏனைய சந்தர்ப்பங்களில் கிடைப்பது ஆகக் கூடுதலாக இரண்டாயிரம் ரூபா முதல் மூவாயிரம் ரூபாதான்.சில சமயம் அதிகம் கிடைக்கிறது.இப்படி நர்த்தனங்கள் புரியும் ஆட்டக் காவடிகளும் பால்க் காவடிகளும் திருவிழா நிறைவில் களைப்படைந்து சோர்வடைகின்றன. அன்பாகப்பிள்ளைகள் அரவணைத்து மயிலின் உதிர்வான காவடியின் பார்வையான கண்களை வருடி முறிப்பதால் நிறைவிலே மீண்டுமொரு பிறப்பு இவற்றுக்குத் தேவைப் படுகின்றது. கிடைத்த உழைப்பின் ஒரு பகுதி மீண்டும் அழகாக கலை நயம் பெறுகிறது. கால ஓட்டத்தில் இவற்றின் மீட்சி என்பது புதுப்பொலிவு பெறுகின்றபோதும்.அதிலொரு இறையருள் குடிகொண்டுள்ள போதும், அழகும் சந்தோசப் பிரவாகம் பிரகாசிக்கின்றபோதும்.சொந்தத் தாய் நிலம் இழந்து அதன் பாசப் பிணைப்பறுந்து நீண்ட காலம் சிறைப்பட்டுக் கிடக்கும் இவர்களுக்கு மாவைக் கந்தனும் அவன் மறுவடிவமான நல்லை அலங்காரக் கந்தனும் வழி சொல்லக் கூடாதா...? மயிலேறி வந்து தீர்வை மயிலிறகாய் உதிர்க்கக் கூடாதா....? காத்திருக்கின்றனர் கந்தனை வேண்டி நிதம் வழி பிறக்குமென்று ஏங்கித் தவித்து - காவடிச் சிந்துவில் நளினம் புரியும் அவன் கண்களை மயிலிறகில் பார்த்து.ஏனெனில் இடம்பெயர்வுதந்தது அகதி முகாம். ஆனால் காவடி தந்ததோ வாழ்வின் முகமல்லவா....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொகுசாய் ஓடிடும் ரயில்

சிகு சிகு சிகு சிகு ரயில் வண்டி
சொகுசாய் ஓடிடும் ரயில் வண்டி
குப்குப்குப்குப் ஒலியுடனே
காற்றாய்ப் பறந்திடும் ரயில் வண்டி


பெரியவர் சிறியவர் எனப் பிரித்து
பேதம் பார்க்கா ரயில் வண்டி
உரியவர் யாரென அறிவீரா?
உங்கள் வீட்டுப் பிள்ளைகளே!

கோபு, இழுத்துச் செல்கின்ற,
பொறியைப் போல ஓடிடுவான்!
பாபுவோ சோதனை யாளரென
பக்குவமாக வந்திடுவான்!

பயணச்சீட்டைக் கொடுப்பவரோ
பாலுவின் நண்பன் பாண்டியனே!
நயமுடன் நான்கு நண்பர்களே
ரயிலின் பெட்டிகள் போல் வருவர்!

நீங்கள் எங்கே சென்றிடனும்
நிம்மதியாக இணைந்திடுவீர்!
எங்கள் ரயிலும் புறப்படுது!
பயணச் சீட்டும் தரப்படுது!

*பு.சந்தோஸ்,*
*தரம் 2,*
*மல்லாகம் விசாலாட்சி வித்தி.*



# கண்ணனுக்கு உதவிய பாட்டி


அம்மு

பூஞ்சோலை என்ற கிராமத்திலே பொன்னம்மா என்ற பெயருடைய வயதான பாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அந்தப் பாட்டி வடை சுட்டு விற்று அதில் கிடைக்கின்ற வருமானத்தைக்கொண்டு தனது வாழ்க்கையை ஓட்டி வந்தார்.

பாட்டி சுடுகின்ற வடைகள் மிகவும் சுவையாக இருந்ததால் அந்த ஊரில் இருந்தவர்கள் மட்டுமல்லாது அயல் ஊர்களைச் சேர்ந்தவர்களும் அங்கு வந்து வடைகளை வாங்கிச் சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. பாட்டி மிகவும் சிக்கனமாக வாழ்ந்ததால் தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை தனது வீட்டின் சமையலறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மண்பானையொன்றில் சேமித்து வந்தார். இந்த விடயம் பாட்டியைத் தவிர வேறு எவருக்குமே தெரியாது. அத்துடன் அந்தப் பானைக்குள் எவ்வளவு தொகைப் பணம் உள்ளது என்ற விவரம் பாட்டிக்கும் தெரியாது. ஏனென்றால் அவர் தாம் தினமும் சேமிக்கும் பணத்தைக் கணக்கு வைத்துக் கொள்வதில்லை.

அந்த ஊரிலே கண்ணன் என்ற சிறுவனும் வசித்து வந்தான். அவனது குடும்பம் மிகவும் வறிய நிலையில் இருந்து வந்தது. அவனது தந்தை உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலை யில் இருந்ததால் வேலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. இதனால் சாப்பாட்டுக்கே கண்ணனின் குடும்பத்தினர் கஷ்டப்பட்டு வந்தனர். ஆனால் கண்ணன் நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தான். அவன் பொய் பேசுவதில்லை. மற்றவர்களின் பொருள்களுக்கு ஆசைப்படுவதும் இல்லை. ஒழுங்காகப் பாடசாலை செல்வான். கல்வியைக் கருத்துடன் கற்பான். இதனால் அவன் கல்வி கற்கின்ற பாடசாலையின் ஆசிரியர்கள் அவன்மீது பிரியமாக இருந்தார்கள். கண்ணனைப் பற்றி அறிந்து கொண்ட பாட்டி அவனது மேற் படிப்புக்கு உதவுவதென முடிவு செய்தார்.

கண்ணன் கல்லூரிக்குச் சென்று கல்வி கற்பதற்கான கட்டத்தை எட்டினான். ஆனால் அவனது படிப்புச் செலவுக்கான பணவசதி அவனது குடும்பத்தாரிடம் இல்லை. இதனால் அவர்கள் கவலையுடன் யோசனையில் ஆழ்ந்திருந்தனர். அப்போது அந்தப் பாட்டி அங்கே வந்தார். ஒரு தொகைப் பணத்தைக் கண்ண



னின் தந்தையிடம் கொடுத்து அதனைக் கண்ணனின் கல்லூரிப் படிப்புக்குப் பயன்படுத்துமாறு கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அந்த ஏழைப் பாட்டியின் செயல் கண்ணனின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. தனது வறுமை நிலையிலும் தனக்கு உதவிய அந்தப் பாட்டியை அவரது இறுதிக் காலத்தில் வைத்துப் பராமரிப்பதென அவன் அன்றே சபதம் எடுத்துக் கொண்டான். கல்லூரி செல்வதற்கான ஆயத்த வேலைகளிலும் உற்சாகமாக ஈடுபட்டான்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க



## பொது அறிவு

1. உலக குருதி தான தினமாகக் கருதப்படும் நாள் எது?
   ஒக்ரோபர் 1.
2. மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை இனம் எது?
   கிவி.
3. போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது?
   வைரஸ்.
4. அகசிவப்பு கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்?
   தண்ணீர்.
5. இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?
   4.
6. உலகின் இரண்டாவது நீளமான கடற்கரையாக மெரினாவை வடிவமைத்து பெயர் சூட்டியவர் யார்?
   கிரண்ட்டப்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1792 - பிரான்ஸ் அரசர் லூயிஸ் XVi மீதான விசாரணை ஆரம்பம். பின்னர் 33 குற்றச்சாட்டுக்களில் சாவுத் தண்டனை.

1828 - 7 ஆவது அமெரிக்க ஜனாதிபதியாக அன்றூ ஜக்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1910 - நியோன் விளக்கு முதன் முதலாக காட்சிப்படுத்தல்

1922 - முதலாவது டெக்னிக் கலர் திரைப்படம் வெற்றிகரமாக திரையிடப்பட்டது நியூயோர்க்கில்

1956 - எகிப்திலிருந்து பிரித்தானியா, பிரான்ஸ் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

1971 - இந்தோ-பாகிஸ்தான் போர், விமானக் குண்டு வீச்சுடன் ஆரம்பம்.

1979 - ஆயத்துல்லா றொஹுல்லா கொமெனி ஈரான் நாட்டின் அதிகாரமிக்க தலைவரானார்.

1984 - இந்தியா போபாலில் விஷவாயு கசிவினால் 2000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

1992 - உலகின் முதலாவது வரிவடிவ செய்தி கணினி மூலம் தொலைபேசிக்கு அனுப்பப்பட்டது.

2007 - தமிழர் வகைதொகையின்றிக் கைது, நாடாளுமன்றில் ஜே.வி.பி., ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம்.
- பூசாவில் அடைக்கப்பட்டோர் 3 நாள்களாகப் பட்டினி நாடாளுமன்றில் மகேஸ்வரன் தெரிவிப்பு
- ஷேர்ண் வோனின், டெஸ்ட் அந்தஸ்துள்ள நாடுகள் ஒவ்வொன்றினதும் 50 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட சாதனையை முத்தையா முரளிதரன் முறியடிப்பு. நினைவாக 500 ரூபா முத்திரையும் வெளியீடு.

2012 - சர்வதேச அழுத்தம் அதிகரித்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அவசர சந்திப்புக்கு மகிந்த அழைப்பு.

## எங்கள் ஆசிரியர்..!



அகர முதல சொல்லித் தந்த எங்கள் ஆசிரியரே...
அடக்கம்தனை அறிய வைத்த எங்கள் ஆசிரியரே...
ஆசை தீரப் பாடுகிறோம் உங்கள் புகழையே..!
இனிய தமிழ் பயிற்றுவித்த எங்கள் ஆசிரியையே...
இனிய கதை சொல்லித்தந்த எங்கள் ஆசிரியையே...
ஈன்ற தாயைப்போல நாங்கள் வணங்குவோம் உம்மையே..!
ஐம்புலனும் அறிவியலை அறியவைத்த எங்கள் ஆசிரியரே...
ஐயங்களை நீக்கி வைத்த எங்கள் ஆசிரியரே...
ஒழுக்கம் கற்று நிற்கின்றோம் உங்கள் அன்பு முறையிலே..!
உண்மைதனை எடுத்துரைத்த எங்கள் ஆசிரியரே...
உலகம் கேட்க சொல்லிடுவோம் உங்கள் பெருமையையே..!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நோயின்றி வாழ்வதற்கு

எமது உடலானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களால் தான் இயக்கப்படுகின்றது. அவற்றிலுள்ள பிரச்சினைகளை களைந்தாலே நாம் வாழ்நாள் முழுவதும் நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

**உணவு (நிலம் )** – இரைப்பை , மண்ணீரல், கணையம் ஆகிய உறுப்புக்கள் ஒழுங்காக இயங்க கீழே கொடுக்கபட்டுள்ளவற்றைப் பின்பற்றவும். பசி இல்லாதபோது சாப்பிடக்கூடாது. வாயுத் தொந்தரவு, அல்சர், அஜீரணம், வயிற்று வலி, நீரிழிவு, இரத்த அழுத்தம், எலும்புத் தேய்மானம் போன்ற தொந்தரவுகளுக்கு அடிப்படைக் காரணமே பசி இல்லாதபோது சாப்பிடுவதுதான். பசி இல்லாத போது சாப்பிட நேர்ந்தால் சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் இனிப்புச் சாப்பிட வேண்டும்

நாம் பால்,தேநீர், கோப்பி செயற்கைக் குளிர் பானங்கள் போன்றவற்றைத் தவிர்த்தாலே பசி ஒழுங்காக எடுக்கும். சாப்பிடும் முன் கை, கால், முகம் கழுவ வேண்டும்.

உணவில் ஆறு சுவைகள் உள்ளன. இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம் இருக்குபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஆறு சுவைகளையும் திகட்டும் வரை உண்ண வேண்டும்.

நாக்கால் சுவையை நன்கு ருசித்த பின்னரே விழுங்க வேண்டும். அப்போதுதான் அதில் உள்ள சத்துக்களை எமது உடம்பால் முழுமையாக சமிபாடடையச்செய்ய முடியும்.

சாப் பிடும்பொழுது கண்களை மூடி, உதட்டை மூடி, உதட்டை பிரிக் காமல் மென்று கூழ் போல் அரைத்துப் பின் விழுங்க வேண்டும். ஏனென்றால் காற்று உணவுச் சமிபாட்டுக்கும் எதிரி.

முடிந்தவரை சாப்பிடுவதற்கு அரைமணி நேரம் முன்பும் பின்பும் நீர் அருந்துவதைத் தவிருங்கள். தேவை ஏற்பட்டால் சிறி தளவு குடித்துக்கொள்ள லாம். ஏனென்றால் நீர் எமது சமிபாட்டுக்கு எதிரி .



குளித்தபின்னர்45நிமிடங்களுக்கும் பிறகு மட்டுமே சாப்பிட வேண்டும். சாப்பிட்ட பிறகு 2 மணி நேரத்துக்குக் குளிக்கக் கூடாது. அப்படிக் குளித்தால் எமது உடம்பானது உணவை சமிபாடடைவதற்குப் பதிலாக உடல் வெப்பத்தை சமநிலைப்படுத்துவதற்கே முன்னுரிமை கொடுக்கும்.

பேசிக் கொண்டோ, புத்தகம் படித்துக்கொண்டோ, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டோ சாப்பிடக்கூடாது. கவனம் சிதறாமல் இருப்பதற்காக கால்களைத் தொங்க வைத்து அமர்ந்து சாப்பிடக் கூடாது.

முதல் ஏப்பம் வந்தவுடனோ அல்லது உணவின் சுவை குறைந்து விட்டாலோ அல்லது போதும் என்ற உணர்வு வந்துவிட்டாலோ சாப்பிடுவதை நிறுத்திவிட வேண்டும். அது தான் நாம் சாப்பிட வேண்டிய அளவு.

**நீர்** – சிறுநீரகம், சிறு நீர்ப்பை, விதைப்பை (ஆண்களுக்கு), கர்ப்பப்பை (பெண் களுக்கு) ஆகிய உறுப்புக்கள் ஒழுங்காக இயங்க கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் பின்பற்றவும்

தண்ணீரைக் கொதிக்க வைத்தோ அல்லது நீரை வடிகட்டியோ குடிப்பதால் அதில் உள்ள தாது உப்புக்களை இழக்க நேரிடும். அந்தத் தாது உப்புக்களுக்காகத்தான் நாம் நீரையே அருந்துகிறோம். அதற்கு பதிலாக நீரை மண் பானையில் 2 மணிநேரம் வைத்தபின் பயன்படுத்தலாம். பின்னர் நீரை செப்புக் குடத்தில் வைத்து அருந்தலாம்.

தாகம்எடுத்தால்உடனேதேவையானஅளவுமெதுவாக வாய்வைத்து உறிஞ்சிக் குடிக்க வேண்டும். போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரைப் பயன்படுத்தக் கூடாது. உறிஞ்சிக் குடிக்க நேர்ந்தால் உணவில்அதிகநீர்ச்சத்துஉள்ளஉணவுகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது மோர், இளநீர், பதநீர், எலுமிச்சை சாறு, கரும்புச்சாறு, பழச்சாறு ஜூஸ் போன்றவற்றை பருகலாம். தாகம் இல்லாமல் தண்ணீர் குடிக்கக் கூடாது. சிறுநீர் கழித்தால் உடனே தேவையான அளவு நீர் அருந்த வேண்டும்.

நீரை அண்ணாந்து பார்த்தபடி குடிக்கக் கூடாது. அப்படிக்குடித்தால் தேவைக்கு அதிகமாகவே குடித்துவிடுவோம். நீரை நிதானமாக வாய்வைத்து உறிஞ்சிக்குடிக்க வேண்டும்.

பால் அருந்துவதைத் தவிர்த்தாலே எமது உணவு எளிதில் சமிபாடடையும். நன்றாகப் பசி எடுக்கும். அப்படி பால் அருந்த நேர்ந்தால், பசி எடுக்கும்வரை பொறுமையாக இருந்து உணவை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஓய்வு தூக்கம் (ஆகாயம்)** கல்லீரல், பித்தப்பை ஆகிய உறுப்புக்கள் ஒழுங்காக இயங்க கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் பின்பற்றவும் முடிந்தவரை இரவு 10 மணிக்கு தூங்க முயற்சிக்கவும். இரவு 11 மணி – 3 மணி வரை ஆழ்ந்த உறக்கத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அந்த நேரத்தில் தான் எமது கல்லீரலும் பித்தப்பையும் உடம்பிலுள்ள இரசாயனக் கழிவுகளை முழுவீச்சில் வெளியேற்றும்.

வடக்கே தலை வைத்துப் படுப்பதைத் தவிர்க்கவும். தூங்கத் தயாராவதற்கு முன் மனதைப் பாதிக்கும் பேச்சு, அதிர்ந்த சிந்தனைகள், செயற்பாடுகள் போன்றவை இல்லாமல் அமைதியான சூழ்நிலையில் இருந்து படுக் கைக்குச் சென்றால் தூக்கம் நன்றாக வரும்.

புகைப்பழக்கம் மற்றும் தேநீர், கோப்பி செயற்கைக் குளிர்பானங்கள் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். இவை அனைத்துமே எமது தூக்கத்துக்கும் உடல்நலத்திற்கும் கேடு விளைவிக்கும்.

இரவு 10 மணிக்குள் படுத்துவிட்டு விடியற் காலை எழுந்து குளிக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும். காலை நேரத்தில்தான் பித்தம் உடலில் பரவும். அப்போது குளிப்பது உடம்பிற்கு நல்லது.

படுக்கையில், தலைமாட்டில் கைபேசி போன்ற கதிர்வீச்சுக்கள் உள்ளவற்றை வைத் துக் கொள்ளாமல், வேறு அறையில் அல்லது தூரத்தில் வைத்து விட வேண்டும்.

> போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரைப் பயன்படுத்தக் கூடாது. அப்படிக் குடிக்க நேர்ந்தால் உணவில் அதிக நீர்ச் சத்து உள்ள உணவுகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது மோர், இளநீர், பதநீர், எலுமிச்சை சாறு, கரும்புச்சாறு, பழச்சாறு ஜூஸ் போன்றவற்றைப் பருகலாம்.

குளிர் காலங்களில் வெறும் தரையில் படுக்கக் கூடாது. உடல் அதிகம் குளிர்ச்சியடைந்தாலும் தூக்கம் கெட்டுவிடும்.

உடல் உழைப்பு உள்ளவர்கள் குறைந்தது 6 மணிநேரம் தூங்க வேண்டும். மூளைக்கு மட்டுமே வேலை கொடுப்பவர்கள் குறைந்தது 6 மணி நேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.

இரவில் பல் விளக்கிப் படுத்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

முடிந்தவரை வெறும் கையால் உப்புக் கலந்த நீரில் விளக்கவும். ஈறுகளுக்கு மசாஜ் செய்தல் பற்களுக்கு வலிமை தரும். தாடைக்குக் கீழ் தடவிக் கொடுத்தால் நன்றாகத் தூக்கம் வரும். தலையில் உச்சிக்கும் சுழிக்கும் நடுவில் மசாஜ் செய்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

நாம் தூங்கும் இடங்களில் இயற்கையான காற்றோட்டம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் இரவு முழுக்க கனவுகளால் அவதிப்படும் சூழல் உருவாகும்.

இரவில் எளிதில் சமிபாடடையக்கூடிய உணவை உண்டால் தூக்கமின்மைத் தொந்தரவு ஏற்படாது.

தலைவலி, உடல்வலி என்று எதற்கெடுத்தாலும் ஒரு மாத்திரையைப் போட்டுக் கொள்வது நல்லதல்ல. எண்ணெய்க் குளியல், கசாயம் போன்ற இயற்கை மருத்துவ முறையைப் பின்பற்றுவது நல்லது. *(தொடரும்)*

# மனித செயற்பாடுகளே காலநிலை மாறக் காரணம்

காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் இரு வார கால உச்சிமாநாடு பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று முடிந்துள்ளது.

வரலாற்றில் பிரான்ஸ் அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட மிகப் பெரிய மாநாடாகக் கருதப்படும் இந்த மாபெரும் மாநாட்டில் 195 நாடுகளைச் சேர்ந்த 40 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கெடுத்துள்ளமை மாநாட்டின் முக்கியத்துவத்தைப் பறை சாற்றுகின்றது.




காலநிலை மாற்றம் என்பது இன்று பல ஊடகங்களிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு சொல். குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் காலநிலை அளவீடுகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களையே காலநிலை மாற்றம் என்கிறார்கள். இன்று சுற்றுச்சூழலில் ஏற்படும் பல மாற்றங்களுக்கு இந்தக் காலநிலை மாற்றமும் ஒரு முக்கியமான காரணம்.

நதிகள் வற்றிப்போவதற்கும், மழை பொய்த்துப் போவதற்கும், எதிர்பாராத சமயங்களில் மழை பெய்வதற்கும் காலநிலை மாற்றம் முக்கியமான காரணம் என்று அறியப்பட்டிருக்கிறது.

கடந்த நூற்றாண்டில்தான் காலநிலை மாற்றத்தின் தாக்கம் கடுமையாக உணரப்பட்டிருக்கிறது. எதிர்வரும் நாள்களில் காலநிலை மாற்றம் சர்வதேச சமூகம் சந்திக்கக்கூடிய ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துக்கொண்டிருக்கிறது. காலநிலை மாற்றம், பொருளாதார வளர்ச்சிக்குக்கூட சவாலாக அமையும் என்று சமீபத்தில் வெளியான ஓர் ஆய்வு சொல்கிறது.

இன்றைக்கு காலநிலை மாற்றம் உருவாக இயற்கைக் காரணங்கள் தவிர, மனித செயற்பாடுகளே பெருமளவில் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக, மனித செயற்பாடுகளால் பூமி வேகமாக வெப்பமடைவதும் முக்கியமான காரணம்.

பூமியின் மேற்பரப்பில் ஒரு படலம் போல இருக்கும் பசுங்குடில் வாயுக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால், இந்த வாயுக்கள் கிரகித்துக்கொள்ளும் சூரிய வெப்பத்தின் அளவும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. பசுங்குடில் வாயுக்களின் அடர்த்தி அதிகரிக்க மனித செயற்பாடுகளே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. புதைப்படிம எரிபொருள்களை எரிப்பது, அவற்றின் மூலம் மின்சாரம் தயாரிப்பது, உரங்களைப் பயன்படுத்துவது, காடுகளை அழிப்பது, மரங்களை வெட்டுவது உள்ளிட்ட பல மனித செயற்பாடுகளால் பசுங்குடில் வாயுக்களின் அடர்த்தி அதிகரித்து, புவி வேகமாக வெப்பமடைந்து வருகிறது.

இப்போது சர்வதேச சமூகத்தின் முன்பு இருக்கும் மிகப்பெரிய சவால், புவி வெப்பமடைதல்தான்.

இருவார காலத்துக்கு முன்பாக கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்ற நிலையிலும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீன ஜனாதிபதி ஜிங் பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட 183 நாடுகளின் அரச தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளமையானது காலநிலை மாற்றம் தொடர்பில் எந்தளவுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதென்பதற்கு சான்றுபகர்வதாகவும் அமைந்துள்ளது.

கோப் 21 என்றழைக்கப்படும், இந்த உச்சிமாநாட்டில் கார்பன் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நீண்டகால ஒப்பந்தமொன்று இம்முறை எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இம்முறை சட்டரீதியாக அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் எட்டப்பட வேண்டும் எனும் அழுத்தங்கள் அதிகரித்து வந்துள்ளன. 2009ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடந்த காலநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டை விட, இம்முறை இடம்பெற்ற மாநாடு மிக பிரமாண்டமாக இருக்கின்ற நிலை யில், நீண்டகால நிலையான தீர்வு இந்த மாநாட்டில் எட்டப்படலாம் என ஆர்வலர்கள் நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

எனினும், இந்த உச்சிமாநாட்டில் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களைவிட, புவி வெப்பமடைதல் உட்பட காலநிலை மாற்றங்களை கட்டுப்படுத்த கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு நாடுகளில் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

பிரான்ஸ், ஆஸ்திரேலியா, தென் கொரியா உட்பட பல நாடுகளில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இம்முறை மாநாட்டில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த சர்வதேச நாடுகள் ஒருங்கிணைந்த தீர்மானத்திற்கு வரவேண்டும் என ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்திருந்தனர்..

உலகில் அதிகளவாக கார்பனை வெளியேற்றுகின்ற நாடுகளான அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றமை முன்னேற்றகரமான இணக்கப்பாடு ஏற்படக்கூடும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியிருந்தது.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகள் உலகில் பெரும் தாக்கத்தை ஏற்கனவே ஏற்படுத்தத் தொடங்கிவிட்ட நிலையில், இந்த மாநாட்டில் எட்டப்படும் முடிவுகள் மனிதகுலத்தினதும் பூமியினதும் நீண்டகால இருப்பை உறுதி செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகிக்கும் என நம்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| 7 | 3 | 7 | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| 9 | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியானஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும்கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனைஅறிமுகப்படுத்திவெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 7 | 5 | 3 | 1 | 8 | 6 | 9 |
| 3 | 6 | 1 | 9 | 7 | 8 | 4 | 5 | 2 |
| 9 | 8 | 5 | 2 | 4 | 6 | 7 | 1 | 3 |
| 2 | 9 | 3 | 1 | 6 | 4 | 5 | 8 | 7 |
| 7 | 5 | 4 | 3 | 8 | 2 | 1 | 9 | 6 |
| 8 | 1 | 6 | 7 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 6 | 4 | 9 | 8 | 2 | 5 | 3 | 7 | 1 |
| 5 | 3 | 2 | 6 | 1 | 7 | 9 | 4 | 8 |
| 1 | 7 | 8 | 4 | 9 | 3 | 6 | 2 | 5 |

# ஹீரோவாக மாறும் இசையமைப்பாளர்!



அண்மைக்காலமாக இசையமைப்பாளர்கள் ஹீரோவாக அவதாரம் எடுத்து வருகின்றனர். ஜி.வி.பிரகாசைத்தொடர்ந்து தேவிஸ்ரீ பிரசாத் ஹீரோவாக அறிமுகமாகவுள்ளார். தமிழ் மற்றும் தெலுங்குத் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத். அண்மையில் விஜய் நடித்த புலி படத்தின் இசையமைப்பாளரும் இவரே. இவர் தாம் நடித்தபடங்களில் சில பாடல் காட்சிகளில் தலைகாட்டிவிட்டுச் செல்வது வழக்கம்.

இந்த நிலையில், தேவிஸ்ரீ பிரசாத் ஹீரோவாக நடிக்கவிருக்கும் படத்தை, அவரது நெருங்கிய நண்பரும், தெலுங்கின் முன்னணி இயக்குநருமான சுகுமார் இயக்க, தில் ராஜ் தயாரிக்கவுள்ளார். குமாரி 21–எப், ஆர்யா, ஆர்யா2 உள்ளிட்ட தெலுங்குப் படங்களை இயக்கியவர் சுகுமார் என்பது குறிப்பிடத்தக்கது. தேவிஸ்ரீபிரசாத் தான் இசை.

இந்தப் படத்தில் இரண்டு நாயகிகள் தேவிஸ்ரீ பிரசாத்துக்கு ஜோடியாக நடிக்கிறார்கள். ஆனால் ஹீரோயின்கள் எவரென இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. அடுத்த வருடம் ஜனவரியில் படப்பிடிப்புத் தொடங்கவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**படித்துறை பாண்டி** @iampadithurai · Aug 30
என் வாழ்வில் இன்பம் வண்ணமயில் போல ஆடி வருவதாக நினைத்து இறுதியில் அது வெறும் சித்திலம்தான் என தெரிந்து வாய்மூடி விலகினேன்.

**latha** · Aug 30
மகனையோ மகளையோ திட்டிவிட்டு அவர்களுக்கு பிடித்ததை அவர்களுக்குத் தெரியாமல் அம்மாவிடம் கொடுத்தனுப்பும் தந்தையிடம் அளவு கடந்த தாயின் அன்பைக் காணலாம்.

**நுண்மதியோன்** @Nunmathiyon · Aug 30
பணி செய்துகொண்டே குடும்பத்தையும் கவனிக்கும் பெண்கள்தான் பெரும் ஆச்சரியத்துக்குரியவர்களாகத் தெரிகிறார்கள்.

**பா.தன லட்சுமி** · Aug 30
சாப்பாட்டில் தலைமுடி இருந்தால் உறவு வளருமாம். கணவனிடம் திட்டு வாங்கிய எவளோ கிளப்பி விட்டிருக்கா...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நருபவர்: வித்யா

**மேடம்:** செயலில் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பயன் கருதி வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். கண்களின் பாதுகாப்பில், தகுந்த கவனம் தேவை..

**இடபம்:** நிதானமாகச் செயற்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், தடை ஏற்பட்டு விலகும். இலாபம் சுமார். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் நலன் குறித்த அக்கறை மேலோங்கும்.

**மிதுனம்:** நீண்ட நாள் விருப்பம் ஒன்று நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். அரசியல்வாதிகளுக்கு யோகமான வாய்ப்புண்டாகும்.

**கடகம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடும். இலாபம் சுமார். உடல்நலனில் அக்கறை கொள்வது அவசியம். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவார்கள்.

**சிங்கம்:** பொது விடயத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியைத் தரும். வீட்டில் சுப நிகழ்வு குறித்த பேச்சு நடந்தேறும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை சேர்க்கும்.

**கன்னி:** உறவினரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் விலை உயர்ந்த பொருளை கவனமாகப் பாதுகாக்கவும்.

**துலாம்:** உற்சாகத்துடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி ஏற்படும். இலாபம் கூடும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** இனிய பேச்சால், நன்மை பல பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**தனுசு:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், தடை ஏற்பட்டு விலகும். இலாபம் சுமார். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இருந்த சிரமம் விலகும். இலாபம் கூடும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பழக வேண்டாம். தொழிலில், மிதமான வருமானம் கிடைக்கும். உடல் நலம் பெற, மருத்துவ சிகிச்சை பயன்படும். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி காண்பர்.

**மீனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரின் பாராட்டுக் கிடைக்கும்.

# 'பேஸ் புக்'கில் பிடித்தவை...







# WhatsApp படித்ததில் பிடித்தது

ஒரு நாள் பாடசாலையிலிருந்து வந்த தோமஸ் ஆல்வா எடிசன் கையில் ஒரு கவரில் இருந்த கடிதத்தை தன் அம்மா விடம் மட்டுமே கொடுக்க வேண்டும் எனத் ஆசிரியர் கூறியதாகச் சொல்லிக் கொடுத்தான்.

அந்த கடிதத்தை அந்தத் தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும்படி இப்படிப் படித்தாள் உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பாடசாலை மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. அதனால் தயவுசெய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது என்று அந்தக் கடிதத்தில் ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயாரும் காலமாகி விட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் ஆனார்.....!

இந்த நிலையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது அவர் தன் அம்மாவிடம் முன்பொரு முறை பாடசாலையிலிருந்து கொண்டுவந்து கொடுத்த கடிதம் எதேச்சையாக கண்ணில் பட அதை எடுத்துப் படித்துப் பார்த்தார்.....

அதில் இப்படி எழுதியிருந்தது "மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பாடசாலைக்கு நீங்கள் அனுப்பவேண்டாம்" என்று அதைப்படித்த எடிசன் கதறி அழுதார் . பின் அவரது டைரியில் கீழ்க்கண்டவாறுஎழுதினார். 'மூளை வளர்ச்சியற்ற தோமஸ் ஆல்வா எடிசன், தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்' என்று. தன்பிள்ளைகள் மீதான உயர்வான எண்ணங்கள் அவர்களைமிகஉயரத்துக்குக்கொண்டு செல்லும்..! குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைப்போம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது புதுசு





பெண்களின் மனங்களைக் கவரும் விடயங்களில் பேஸ்களும் ஒன்று. ஆடைக்கேற்ற விதத்தில், வித்தியாசமான நிறங்களில் பேஸ்களை வைத்திருப்பதில் இளம் பெண்கள் ஆர்வம் காட்டுவார்கள். ஒவ்வொரு கால கட்டத்திலும் புதிய பரிமாணங்களில் பேஸ்கள் வடிவமைக்கப்படுகின்றன. அவற்றில் சாதாரணமாக, தினசரி பயன்பாட்டுக்கு, விசேட வைபவங்களுக்கு என அலங்கார வேலைப்பாடுகளுடன் கடைகளில் வலம் வருகின்றன. சாதாரண பேஸ்கள் 300 - 500 ரூபாய் ஆகும். விசேட வைபவங்களுக்கான பேஸ்கள் விலை 500 - 1,500 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.

நவீன ஆடைகளில் புதிய வரவு, பதின்ம வயதினருக்கான ப்றொக் வகைகள். பல ஆண்டுகளின் பின்னர் வளர்ந்த பெண்களுக்கான ப்றொக் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வெல்வெட், நெட் துணி வகைகளில், கல் வேலைப்பாடுகளுடன், பல அடுக்குகளில், முழு ஆடையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. விசேட வைபவங்களில் அணிவதற்கு ஏற்ற ஆடையாகும் இது. இந்த ஆடை 7,000 - 9,000 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.





## பொருத்தமான காதணியை அணியுங்கள்

(நேற்றைய தொடர்ச்சி... )

குண்டு முகத்துக்கு தொங்கட்டான் வேண்டாம். காதோடு சேர்ந்த வடிவங்களில் தோடு எடுப்பாக இருக்கும். கழுத்தில் மெலிதான செயின் என்றால் காதணியைச் சற்றுப் பெரிதாக அணிந்து கொள்ளுங்கள். காதோரம் குட்டிக் குட்டித் தோடுகள் அழகாக இருக்கும். அகலமான முகம் உள்ளவர்கள் நீளத் தொங்கட்டான்கள், ஒன்றின் கீழ் ஒன்று வரும் குடை ஜிமிக்கிகள், பெரிய வளையங்கள் போடலாம். கழுத்து நீளம் குறைவென்றால் காதணி நீளத்தைக் குறைக்கவும். காது மடல்களில் அணியும் தோடுகள், குட்டித் தொங்கட்டான்கள், வளையங்கள் முக அழகை கூட்டும். விழாக்களுக்கு செல்லும் போது அகலமான காது மாட்டி, கல் வைத்த குண்டு ஜிமிக்கி, பட்டை நெக்லஸ் அணிந்து செல்லலாம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 700 | 400 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 300 | - |
| கணவாய் | 550 | 600 | 500 | 800 | 500 | - |
| பாரை | 400 | 400 | - | 400 | 450 | 400 |
| சுறா | 450 | 500 | - | 600 | 500 | - |
| சீலா | 250 | 350 | 400 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 300 | 400 | 400 |
| முரல் | 300 | 300 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 350 | 300 | 300 | 400 | 300 | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | - | - | - |
| ஓரா | 300 | 350 | 300 | - | - | 300 |
| திரளி | 200 | 350 | 100 | 200 | 300 | 300 |
| நகரை | 150 | 250 | 100 | 200 | - | 300 |
| சூடை | 150 | 100 | 100 | 100 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | - | 250 | - |
| திருக்கை | 150 | 300 | - | 100 | 200 | - |
| பாலை | 350 | 200 | - | 100 | 260 | - |
| வாளை | 100 | 100 | 200 | 250 | 350 | 200 |
| செமய் | 100 | 100 | 80 | 50 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 200 | - | 150 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 80 | – | 100 | 100 | 80 |
| கத்தரி | 160 | 160 | 150 | 160 | 130 | 140 | 110 |
| கரட் | 180 | 200 | 180–400 | 260 | 160 –280 | 120–300 | – |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 30 |
| பயிற்றை | 200 | 160 | 200–240 | 130 | 160–180 | 300 | 220 |
| பாகல் | 300 | 200 | 400 | 300 | 260–280 | – | 200 |
| கருணைக்கிழங்கு | 40 | 100 | 80 | 160 | 80–100 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 140 | 100 | 120 | 120 | 120–130 | 120 | 110–120 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 110–120 | 180 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40–50 | 80 | 50 |
| தக்காளி | 200 | 200 | 140 | 200 | 180–200 | 160 | 120 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 60 | 50–60 | 80 | 40–50 |
| கீரை | 60 | 50 | 50 | 20 | 40–50 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 | 25–30 | 40 | 12 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 800 | 700 | 600 | 800 | 600 |
| புடோல் | 140 | 120 | 120 | 140 | 130–150 | 140 | 120 |
| கோவா | 160 | 200 | 170 | 180 | 150–160 | 200 | 180 |
| வெண்டி | 180 | 140 | 120 | 120 | 100–120 | 140 | 80 |
| போஞ்சி | 300 | 240 | 220 | 260 | 230–240 | 320 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 –200 | 200 | 160–180 | 200 | – |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50–60 | 40–45 | 60 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 60–70 | 80 | 80–120 |
| தேசிக்காய் | 400 | 300 | 250–400 | 300 | 180–300 | 200 | 150 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 10–20 | 20 | 10–12 |
| கரிமிளகாய் | 400 | 200 | 600 | 260 | 300–350 | 400 | 200 |
| இராசவள்ளி | – | – | – | – | 260–300 | – | – |
| முருங்கைக்காய் | – | – | – | – | 400–380 | 360 | 300–350 |

# பசலைக்கீரை சூப்



### தேவையான பொருள்கள்:

எண்ணெய் – 1 மேசைக் கரண்டி
பட்டை – 1 சிறிய துண்டு
கராம்பு – 4
வெங்காயம் – 1 (பொடியாக நறுக்கியது)
உள்ளி – 3 பற்கள்
பசலைக்கீரை – 3 கப் (பொடியாக நறுக்கியது)
உப்பு – தேவையான அளவு
மிளகு – தேவையான அளவு
சோள மாவு – 1 டேபிள் ஸ்பூன்
குளிர்ந்த பால் – 1/2 கப்
தண்ணீர் – தேவையான அளவு

### செய்முறை:

முதலில் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி அது காய்ந்ததும், பிரியாணி இலை, கிராம்பு, பட்டை சேர்த்து தாளிக்க வேண்டும். பின்னர் அதில் வெங்காயம், பூண்டு சேர்த்து 2 நிமிடம் வதக்கி, பின்னர் பசலைக்கீரை சேர்த்து 5 தொடக்கம் 7 நிமிடங்கள் நன்கு பச்சை வாசனை போக நன்கு வதக்கி இறக்கி விட வேண்டும். பிறகு அதில் உள்ள பட்டை, கிராம்பு ஆகியவற்றை எடுத்துவிட்டு, மீதமுள்ளதை மிக்ஸியில் போட்டு நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின்பு அதனை ஒரு பாத்திரத்தில் ஊற்றி சிறிது தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து, தேவையான அளவு உப்பு மற்றும் மிளகுத் தூள் சேர்த்து கொதிக்க விட வேண்டும். பின் சோள மாவைப் பாலில் [illegible] [illegible] கொதிக்க விட்டு இறக்கினால், சுவையான பசலைக்கீரை சூப் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஸ்ரீ.சோமஷ்ஸ்ரீ
ஜெயன்

தோற்றம்
19.04.1986

மறைவு
14.12.2014

திதி: தேய்பிறை அட்டமி

ஆண்டு ஒன்று சென்றாலும்
மாறவில்லை உன் நினைவுகள்
காய்ந்திடாத விழிகளின் ஈரத்துடன்
வேண்டுகின்றோம் – உன் ஆத்ம சாந்திக்காய்
மறுபிறப்பு இனிவேண்டாம்
மாத்தனையானுடன் சேர்ந்துவிடு.

122/4.கோயில் வீதி.
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நவரத்தினம் அர்ச்சனா

தோற்றம் 02.06.1984
மறைவு 03.12.2010

ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாமின்று நிர்க்கதியாய் -
தவிக்கின்றோம்

வாராயோ இன்னொருகால்
எம்மோடு வாழ்வதற்கு.....!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம்
இராஜதுரை

தோற்றம் 03.07.1948
மறைவு 03.12.2005

திதி: துதியை 13.12.2015

தந்தையாய் - நல் ஆசானாய் எங்களை வாழ வைத்த தெய்வமாய்
எம்முள்ளே தோன்றாப் பொருளாய்
நல்லூக்கம் தரும் பரம் பொருளாய்
எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே!
எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பத்து ஆனாலும்
என்றும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு அகலவில்லை
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள்.

கூத்தாதோட்டம்,
வதிரி, கரவெட்டி.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சண்முகம் தாட்சாயணி



தோற்றம் 18.03.1928
மறைவு 07.12.2001

திதி: கார்த்திகை அவரபக்க அட்டமி

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்து எம்மை வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே !!
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி ! சாந்தி !!! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாப்பாணவூரி,
காரைநகர்.


டெங்கு அதிகளவானோர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் யாழ்.புறநகர் உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 49 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பரில் 192 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். டிசெம்பரில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இந்த அதிகரிப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் வரைக்கும் தொடரும். ஏனெனில் கடந்த ஜனவரி மாதம் 348 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரியில் 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே பொதுமக்கள்தான் இந்த விடயத்தில் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

(த-4)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்

அன்னை மடியில்
1943 . 01 . 27

ஆண்டவன் அடியில்
14 . 12 . 2014



அமரர் சின்னத்தம்பி- யோகராசா
(புங்குடு தீவு-12)

திதி : 03.12.2015

அப்பா என்று ஒருமுறை அழைத்தால்
ஓடோடி வருவீர்கள் அப்பா
எத்தனைமுறை அப்பா என்று அழைத்தாலும் ஏன்
வரவில்லை? ஓராண்டு சென்றாலும் அப்பா
உங்கள் நினைவு என்றும் மாறாது

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும். மதிய போசனமும் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலிலும், புங்குடுதீவு அருள்மிகு இராஜராஜேஸ்வரி கண்ணகை அம்பாள் ஆலய அன்னதான மடாலயத்திலும் இன்று (03.12.2015) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

(இந்த நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.)

சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
[illegible]
பேரப்பிள்ளைகள்.

[66554] [13-15]

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 . 10 . 1947



உதிர்வு
03 . 12 . 2006

அமரர் மார்க்கண்டு அரியரட்ணம்

(உரிமையாளர்- சிற்றி வைன் ஸ்ரோர்ஸ்,
றோயல் வைன் ஸ்ரோர்ஸ், நிருத்திகா ஜுவல்லர்ஸ்)

திதி: திரயோதசி

உன்னத வாழ்வு கண்டீர்
உத்தம குணங்கள் கொண்டீர்
அன்புள்ள கணவரானீர்!
பாசமுள்ள தந்தையானீர்
ஊர் போற்றும் உத்தமராய் வாழ்ந்தீர்கள்
ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
என்றும் நீர் எங்களுடன்......

[illegible]ன்னி வீதி.
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

(66657) (13.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 3

இலங்கை வங்கியின் யாழ்.கிலையின் ஓய்வு பெற்ற 32 உத்தியோகத்தர்களின் கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மாலை 4.00 மணிக்கு இலங்கை வங்கி யாழ். கிளையில் நடைபெறவுள்ளது. அகில இலங்கை ரீதியில் ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கௌரவிப்பு வழங்கப்படுகின்றது. (து-ரி6)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணலீலா செல்வநாயகம்



மூர்த்தியாங்கூடல், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணலீலா செல்வ நாயகம்02.12.2015 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிஜயா காலஞ்சென்ற இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமக ளும் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் சஜிலன், தட்சாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணகுமாரி(ஜேர்மனி), கிருஷ்ண பவானி, தயாபரன் (லண்டன்), தயாளன், சுபாஜினி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலிங்கம் (ஜேர்மனி), விவேகானந்தன், மார்ட்டினா(லண்டன்), சுதாஜினி, சத்திய மூர்த்தி(கனடா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்வராஜா, காளிக்குட்டி மற்றும் தெய்வநாயகி , கண்மணி, பரமேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூர்த்தியாங்கூடல்,**
**சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### முருகேசு குமரேசு

(முன்னாள் ஞானம் ஸ்ரோர் உரிமையாளர்)



தோற்றம் : 07.07.1937
மறைவு : 02.12.2015

கூழாவடிலேன், ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குமரேசு நேற்று (02.12.2015) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான முருகேசு - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - பவளம் தம்பதியரின் அன்பு மரு மகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் ஈஸ்வரன்(ஈசன்), கணேஸ்வரன்(ஞானம்), ஞானேஸ்வரி (கவிதா) ஆகி யோரின் அன்புத் தந்தையும் மஞ்சுளா, உமா ஆகியோரின் அன்பு மாமனாரும் , கபி ஷானி, பபிஷன், சபிநாத், சுபினா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தியாகராஜா, கார்த்திகேசு, பொன்மலர் ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் ஐயாத்துரை, சந்திரன், ஜெகநாதன், அம்பிகாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு (கரையாம் பிட்டி) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கூழாவடிலேன்,**
**ஆனைக்கோட்டை.**

(66551)(12.15)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



# முத்தையா அருந்தவநாதன்

(ஓட்டோ சப்ளையர்ஸ் உரிமையாளர்)

(19, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் 34/6, செட்டித் தெரு, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா அருந்தவநாதன் 30.11.2015 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா(யா/நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய முன்னாள் ஆசிரியர்) நல்லம்மா தம்பதியரின் அன்பு மூத்த புத்திரனும் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும் வரதலஷ்மியின் அன்புக் கணவரும் ரவீந்திர நாதன், ஜெகநாதன், ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோத ரனும் அனுஷ்யா, ஜெயந்தன், ஈஸ்வரன், ஜெகதீசன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் புவீந்திரன், டயானி, பத்மரமணி, தாக்சாயினி ஆகியோரின் அன்பு மாமனும் லக்ஷ்மிதா, சூரியா, வித்தியன், உபநயா, லக்ஷனா ஆகியோரின் பாசமிகுபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.12.2015) வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**34/6, செட்டித் தெரு,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(66535)
(14,15,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 222 2443**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டர்

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் மோட்டர் கிடங்கு ஒன்றுக்குள் இருந்து இரண்டு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று மாலை 4 .30 மணியளவில் மோட்டர் திருத்த வேலைக்காக மகாநாயகம் என்பவர் குறித்த மோட்டர் கிடங்குக்குள் இறங்கியதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது. அவர் 13 அடி ஆழமான அந்த கிடங்குக்குள் இறங்கிய நிலையில் திடீரென கிடங்குக்குள் சுருண்டு விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து அவர் விழுந்ததைக் கண்ட வீட்டில் இருந்தவர் அவரைக் காப்பாற்ற கிடங்குக்குள் இறங்கிய நிலையில் அவரும் சுருண்டு விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் வீட்டார் இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதாகவும் அங்கு வந்த பொலிஸார் விஷவாயுக்கசிவு என நினைத்து தீயணைப்புப் படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். குறித்த இடத்திற்கு விரைந்த கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி குறித்த விடயம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் படைமுகாமுக்கு தகவலை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் அங்கு விரைந்த இராணுவத்தினரில் இருவர் தமது இடுப்பில் கயிறை கட்டியபடி ஏணியூடாக இறங்கி குறித்த இருவரின் இடுப்பில் கயிற்றை கட்டி விட்டு மேலே ஏறினர். இதனை அடுத்து இருவரும் கயிறு மூலமாக இழுத்து மேலே எடுக்கப்பட்டனர்.

இதனையடுத்து இருவரையும் வெளியே எடுத்துப் பரிசோதனைக்குட்படுத்திய கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோக்குமார், ஏற்கனவே உயிரிழந்ததை உறுதிப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை உருவாக்கியுள்ளது. இவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனரா அல்லது விஷவாயுக்கசிவின் காரணமாக உயிரிழந்தனரா என்ற கோணங்களில் விசாரணைகள் இடம்பெறுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-வ-108,109)

## பட்ஜெட்

வேற்றப் பட்டது. ஆதரவாக 159 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் அளிக் கப்பட்டன. 13 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் பட்ஜெட்டுக்கு சார்பாக வாக்களித்தன. அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகியனவும் சார்பாக வாக்களித்தன. பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக வாக்களித்தது.

பட்ஜெட் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்து அதற்கு எதிராக ஜே.வி.பி. வாக்களித்தது. பொது எதிரணியினர் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மஹிந்த ஆதரவு அணி எம்.பிக்கள் பலரும் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்தனர். எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அதேவேளை மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, லொஹான் ரத்வத்த, கீதா குமாரசிங்க ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இவர்கள் எதிர்வரும் காலத்தில் தேசிய அரசில் இணைந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்த ஆதரவு அணியின் லக்ஸ்மன் செனவிரத்ன. அதிர்ச்சியளிக்கும் வகையில் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதம் நடைபெற்றது.

ஆளும், எதிரணி உறுப்பினர்கள் உரையாற்றிய பின்னர் இரண்டாம் வாசிப்புமீது பெயர் கூவி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்படி ஆளுந்தரப்பினர் ஆதரவாக வாக்களித்தனர். பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வாக்களித்தமை விசேட அம்சமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் சமயத்தில் மகிந்த அரசு சமர்ப்பிக்கும் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

வாக்கெடுப்பின் போது சபையில் கூச்சல் குழப்பமும் ஏற்பட் டது. மகிந்தவின் பெயரை அழைக்கும்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். வெளிநாடு சென்றிருப்பதால் விமல் வீரவன்ஸவும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இறுதியில் இரண்டாம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு 107 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக் காலை முதல் வாக்கெடுப்பு நிறைவடையும்வரை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் இருந்தார். அங்கு அவர் முக்கிய சந்திப்புகளை நடத்தினார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டமும் நடைபெற்றது. குறிப்பாக ஆதரவு திரட் டும் பணியில் காலை முதல் மாலைவரை தீவி ரமாக ஜனாதிபதி செயற்பட்டார் என்பது குறிப் பிடத்தக்கது.

தேசிய அரசின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 21ஆம் திகதி முதல் நேற்றுவரை இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் நடத்தப்பட்டது.

இன்று முதல் குழுநிலை விவாதம் இடம்பெற்று, பட்ஜட்மீது எதிர்வரும் 19 ஆம் திகதி இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். (த-சி)

## இலங்கை மீது

வதில்லை.

உலக அரங்கில் ஜனநாயகம் மிக்க நாடாக இலங்கை காட்சியளிக்கின்றது. வெளிநாட்டில் இருக்கும் எனது நண்பர் ஒருவர் அண்மையில் இப்படியொரு கருத்தை வெளியிட்டார். இலங்கை அதிஷ்டம் மிக்க நாடு. உங்கள் நாட்டுக்கு நெல்ஸன் மண்டேலா போன்று ஒரு தலைவரும் லீ குவான் யு போன்று மற்றொரு தலைவரும் கிடைக்கப் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் என்று அவர் பெருமையாகக் குறிப்பிட்டார். இது உண்மைதான். நல்லிணக்கம், ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி தலைமை தாங்குகின்றார். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பிரதமர் திட்டம் வகுக்கின்றார்.

சர்வதேசத்தின் நன்மதிப்பை நாம் பெற்றுள்ளோம். ஜெனிவாவில் எமக்கு ஆதரவு வலுத்தன. சர்வதேச விசாரணை கைவிடப்பட்டுள்ளது. முழு உலகமும் எம்மை நோக்கி நேசக்கரம் நீட்டுகின்றன. குறுகிய காலப்பகுதியில் நாம் புதியதொரு அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கியுள்ளோம். எனினும், அரசியல் ரீதியாக அநாதையாக்கப்பட்டுள்ள ராஜபக்ச அணியினர் போலிக்கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த அரசு நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை. முன்னாள் அரசுதான் நாட்டைக் காட்டிக்கொடுத்ததுடன், வளங்களையும் கொள்ளையிட்டது. வெளிநாட்டு வங்கிகளில் பணம் பதுக்கப்பட்டது. இது குறித்த தகவல்கள் வெளியாகின்றது. இது பற்றி விசாரணை நடக்கின்றது.

அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவலுக்கமைய, மகிந்த ஆட்சியின்போது இடம் பெற்ற பெரிய ஊழல் மோசடிகள், படு கொலைச் சம்பவங்கள் தொடர்பில் 725 இற் கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன. மேற்படி சம்பவங்களுடன் மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு பட்டிருக்கின்றனர்.

அத்துடன், 25 பெரிய மோசடி சம்பவங்களுடன் ராஜபக்ச குடும்பத்தினருக்கு நேரடியாக தொடர்பு இருக்கின்றன. அத்துடன், வெளிநாடுகளில் இவர்களுக்கு வங்கிக் கணக்கு இருக்கின்றது. இவை பற்றி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிவதற்கு காலதாமதம் ஏற்படும். ஒரு விசாரணையை முன்னெடுப்பதற்கு 6 நாடுகளுக்கு செல்லவேண்டிய நிலை இருக்கிறது.

திருட்டுக் கூட்டத்தின் தகவல்கள் எம்மிடம் இருக்கின்றன. பிக்பொக்கட் காரர்களைப் பிடிப்பதுபோல் இவர்களை பிடித்துவிடமுடியாது. விசாரணைகளுக்கு நாடுகளின் ஒத்துழைப்பு தேவை. விசாரணைகளைக் கைவிடமாட்டோம். கொள்ளையடிக்கப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டு வருவோம்.

சீனா, அமெரிக்காவுடன் நாம் சிறந்த நட்புறவைப் பேணிவருகின்றோம். நடுநிலையான வெளிநாட்டுக்கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம். நாம் நாட்டைக்காட்டிக் கொடுக்கமாட்டோம். மைத்திரி அரசு எவரிடமும் மண்டியிடாது.

உலகத் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தேடி வருகின்றனர். பிரதமர் ரணில் பற்றி விசாரிக்கின்றனர். ஜனாதிபதி பிரான்ஸ் சென்றபோது, ஜேர்மனி ஜனாதிபதி, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் ஜனாதிபதி மைத்திரியுடன் புகைப்படம் எடுக்க ஆசைப்பட்டனர். இதுதான் இன்றைய நிலை.

மஹிந்த ஆட்சியின்போது அரசியல் காரணங்களுக்காக தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புகள்மீதான தடை நீக்கப்பட்டது. 8 அமைப்புகள்மீதான தடையே நீக்கப்பட்டன. அதை வைத்துக்கொண்டு நாம் நாட்டைக் காட்டிக்கொடுப்பதாகக் குறிப்பிடுகின்றனர் -என்றார்.

(த-சி)

## இந்திய

முல்லைத்தீவுப் பயணங்கள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் நேற்றுத் திருகோணமலைக்கு அவர் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருடைய மனைவியுடன் அங்கு சென்ற அவர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தின் விருந்தினர் பதிவேட்டிலும் ஒப்பமிட்டதுடன் ஆலயப் பரிபாலன சபையினரால் அவருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

(த-5)

## கிளிநொச்சியில்

வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்த இளைஞர் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காய்ச்சல் காரணமாகக் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் திங்கட்கிழமை சாவடைந்த இளைஞர் எலிக் காய்ச்சலினாலேயே பாதிக்கப்பட்டு சாவடைந்துள்ளார். இவ்வாறு சாவடைந்த இளைஞர் ஒரு விவசாயி என்பதால் வயலில் இறங்கி வேலைகள் செய்யும்போது அங்கே உள்ள எலிகளின் சலம் நீருடன் கலந்து அது வெள்ளத்துடன் பரவியே இந்த குறித்த இளைஞரைப் பாதித்துள்ளது. இது சிறிதாக இருக்கும்போது முறையான சிகிச்சை பெற்றிருந்தால் குறித்த நோயைப் பரவவிடாமல் தடுத்திருக்க முடியும்.

எலியின் சலத்தின் மூலமே இந்த நோய் பரவுகின்றது. காய்ச்சல் ஏற்பட்ட உடனேயே சிகிச்சை பெறவேண்டும். இல்லையெனில் நோய்த் தாக்கம் அதிகரித்து இறப்பு நிகழ நேரிடும்.

எனவே விவசாயிகள் மிக அவதானமாக இருக்கவேண்டும். பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பாதணிகளை பயன்படுத்தினால் குறித்த நோயின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். அத்தோடு இந்த நோயைக் குணமாக்குவதற்கான மருந்துகள் உள்ளன. எனவே உரிய சிகிச்சைகள் பெறும் பட்சத்தில் நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட முடியும். வெள்ளப் பெருக்குக் காலங்களில் விவசாயிகள் அவதானமாக இருக்க வேண்டும்-என்றார்.

(த-21-ரி3)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**கமலாம்பிகை (கிளி) இரத்தினம்**

எமது பழைய மாணவர் சங்க பொருளாளர் இ.சிவரூபன் அவர்களின் அன்புத்தாயாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மறவன்புலோ.சகலகலாவல்லி வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்.

## துயர்பகிர்கின்றோம்

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கடமையாற்றும் திருமதி சந்திரகலா சில்வெஸ்ரர் அவர் களின் கணவரான

**அன்ரன் சில்வெஸ்ரர்**

அவர்களது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக்கின்றோம்.



(66573)

யா/புனித ஜோண்பொஸ்கோ பாடசாலைச் சமூகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**நடேசன் புனிதகிருபாகரன்**

பிறப்பு 29.02.1968
இறப்பு 03.11.2015

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் நீங்கள் நித்தம்
புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்



மணற்பகுதி,
பத்தூர்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
**சிவகுருநாதர் பராசக்தி (ரத்தினம்)**

அன்புக்கு இலக்கணமாய்
எங்கள் அம்மா
ஆறுதலின் சிகரமான
எங்கள் அம்மா
இனி எங்கு நாம்
உங்களைக் காண்போம்
உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



குடும்பத்தினர்.
8A, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம் 24.06.1939
மறைவு 15.11.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாவின்

நடரா[illegible] சரவணபவன், செல்லத்துரை கிருபாகரன், தங்கவேல் நிமலன், கனகரத்தினம் ஆதி[illegible]ன் ஆகியோரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவுக்கு அமைய இவர்கள் 2012 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பூசா முகாமில் 6 அடி நீளமும், 7 அடி அகலமும் கொண்ட அறையினுள்ளே 4 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த அறையினுள்ளேயே மலசல கூடமும் காணப்படுகின்றது.

தினமும் குறைந்தளவான நேரமே, அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறையை விட்டு வெளியேற அனுமதிக் கப்படுவதா[illegible]ம் தெரிவிக்கப்படுகின்றது. எஞ்சிய நேரம் முழுவதிலும் மிகச் சிறிய இடத்தி லேயே அவர்கள் அடைக்கப்பட்டி ருப்பதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பகுதியைச் சுற்றி 73 விசேட பாதுகாப்பு அதி ரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் குறிப்பிடுகின்றனர். எந்தத் தவறும் செய்யாத தமது பிள்ளைகளைப் பொதுமன்னிப் பிலாவது விடுவிக்க வேண்டும் என்று அவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-5)

## ஏ-32 நெடுஞ்

காரணமாகப் பாலத்தை மேவி வெள்ளம் பாய்ந்து ஓடுகின்றது. இதனால் ஜெயபுரம், முழங்காவில், வெள்ளாங்குளம், மன்னார் உள்ளிட்ட 15 இக்கும் மேற்பட்ட பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இதனால் தற்போது கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கத்தினர், பிரதேச செயலகத்தினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து மக்களை படகுகள் மூலம் ஏற்றி இறக்கி வருகின்றனர்.

மண்டைக்கல்லாறு பாலத்தின் இரு பகுதியில் இருந்தும் பயணிகள் பஸ்களில் இருந்து இறக்கி விடப்பட்டுப்படகு[illegible] 10 பேர் வீதம் ஏற்றப்பட்டுச் சேவை நடைபெறுகின்றது. இதனால் நோயாளர்கள், பெண்[illegible]ள், சிறுவர்கள் அலுவலகங்களுக்குச் செல்வோர் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றர்.

ஏ-32 பாதை புனரமைக்கப்பட்டபோது இந்தப் பாலம் புனரமைப்பு செய்யப்படவில்லை. இதனால் இந்தப் பாலத்தின் ஊடான போக்குவரத்தில் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும், இந்தவிடயத்தில் முதலமைச்சர் மற்றும் ஜனாதிபதி நடவடிக்கை எ[illegible]கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-101)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாம்பிகை (கிளி) இரத்தினம்



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை (கிளி) இரத்தினம் நேற்று 02.12.2015 காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினம் (குஞ்சுவின்) அன்பு மனைவியும் சிவரூபன் (ரூபன்), சிவாஜினி (வேவி), சிவராஜினி (சூட்டி) ஆகியோரின் அன்புத்தாயாரும் நிசாந்தி, மகுலன் (சுவீடன்), மயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரகசியன், தஸ்மிஜா, டோனிஷா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனிப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் - இ.சிவரூபன்

T.P : 077 9485383

(66582)

### திருமதி
### கமலாதேவி சிவதாஸ்

மெய்கண்டான் வீதி, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சிவதாஸ்30.11.2015 திங்கட்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சிவதாஸின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-கனகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (மூளாய் றோட் , வட்டு) மற்றும் தங்கம்மா தம்பதியரின் மருமகளும், அமரர் துரைராசா (ஓய்வுநிலை அதிபர்-மன்.பாலம்பிட்டி அ.த.க.பாடசாலை) மற்றும் செ. இராசரத்தினம் (மட்டுவில்) செ.கெங்காதரன் (பிரான்ஸ்), செ.மகாதேவன் (தொட்டிலடி) ஆகியோரின் சகோதரியும், லவன் (ஆஸ்திரேலியா), சிவகரன் (லண்டன்), சிவகாந்தன் (ஆசிரியர்-கிளி/பூநகரி நல்லூர் ம.வி) சிவாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பூநகரி கமநல சேவை நிலையம்), சிவசங்கர், சிவகுமார் (ஊரன் -பிரான்ஸ்) ஆகியோரின் அம்மாவும், கலைவாணி (ஆஸ்திரேலியா) , கார்த்திகா (லண்டன்), வினோதினி, பிரதீபன் (எழுதுநர் அக்கராயன் கமநல சேவை நிலையம்) ஆகியோரின் மாமியும், ஆரதி (ஆஸ்திரேலியா) அஞ்சனா (ஆஸ்திரேலியா), ஆதனா ஆகியோரின் பேர்தியும், செல்வராணி (பாலம் பிட்டி), இராசலட்சுமி (மட்டுவில்) சாந்தி (பிரான்ஸ்), மணிமேகலை (தொட்டிலடி), சிவமலர் (மூளாய் றோட் வட்டு) சிவகந்தராஜா (மூளாய் றோட் வட்டு) நேசமலர் (ரஞ்சினி-வடலியடைப்பு) சிவரூபன் (ரூபன்- கனடா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பேரின்பநாயகம் (சின்ராசா-மூளாய் றோட், வட்டு) மற்றும் சாருகேசி (மணி-மூளாய் றோட்,வட்டு), பத்மநாதன் (வடலியடைப்பு) ரசிகலா (கனடா) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2015) வெள்ளிக்கிழமை காலை. 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி.சிவகாந்தன் (மகன்)
(இயக்குநர்-மாதுமை முன்பள்ளி,
மாதுமை கல்வி நிலையம்)

0776692932
(66579) (10.17)

## மரண அறிவித்தல்

திகதி மாற்றப்பட்டுள்ளது

### திருமதி கமலாதேவி குமாரசாமி (நாதஸ்வரம் - ராசு)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி குமாரசாமி (நாதஸ் வரம்-ராசு) 30.11.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-கமலம் தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் (ராசு) அன்பு மனைவியும், விஜயவனிதா, உதயணன் (UK), மதுரகுமார் (வெள்ளை), சிவனேஸ்வரி (தேவி), சிவனேஸ்வர நாதன் (குஞ்சன்) ஆகியோரின் அன்புத்தாயும், கனகாம்பரி, பாலம்பிகை(வசந்தா) ஆகியோரின் மாமியும் பரமேஸ்வரி, ராசகோபால் (துரைச்சாமி- கனடா), சின்னராசா, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் சிறீலதன் (UK), வினோஜா,சிந்துமாலா, வியூசணன், கஸ்தூரி, ராகப்பிரியா, காணவர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும், ரிஷிகேசவன், லோகதர்சன், கிஷாநந்தினி, தர்மிதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.03, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
[illegible]
(வியூஸ்)
075 042 3742

(66549) (12.17)

## மரண அறிவித்தல்கள்

### தில்லையம்பலம் சின்னத்துரை (துரையர், போதகர்)

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த தில்லையம்பலம் சின்னத்துரை நேற்று (02.12.2015) புதன்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது மகனாகிய செல்வநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு

(66584)

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை (பிளசம்)

மண்ணில் - 17.07.1955 விண்ணில் - 29.11.2015



யாழ். பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் குருநாகலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா சூசைப்பிள்ளை அவர்கள்29.11. 2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளை - மார்ஹிரேட் தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இன்னாசிமுத்து விக்டோரியாப் பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், இன்னாசிமுத்து சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜூடித் அனுஷா(பிரான்ஸ்), நிரோஷா (குருநாகல்), ஜூட் சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்ரன் செல்வராஜ் (பிரான்ஸ்), சோபனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனுஜன் (பிரான்ஸ்), லத்திக்கா (பிரான்ஸ்), தர்ஷிகா (பிரான்ஸ்), கெட்ரினா (கனடா), நாட்டான்யா (கனடா) ஆகியோரின் பாட்டியும் காலஞ்சென்ற M.C.இம்மானுவேல்(துரை), பற்றிக் இம்மானுவேல் (யோகு) மற்றும் லோறன்ஸ் இம்மானுவேல் (யாழ்) , திரேஷா (பவளம் - கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (04.12.2015) வெள்ளிக்கிழமை குருநாகல் மல்கடுவாவில் உள்ள கிறிஸ்தவ மயானத்தில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 178 7689
077 441 8519

தகவல்:
சூசைப்பிள்ளை (கணவர்)
நிரோஷா (மகள்)

(66578)



### நவரத்தினம் சிவநடராசா

(பிரபல வர்த்தகர், ஜெயம் ஷென்ரர் தொழிலதிபர்,
இல.89A, வாழைப்பழக் கடை தெஹிவளை, ஜெயம் ஷென்ரர் - பண்டத்தரிப்பு, மெனிங் பிளேஸ் குறோசறி வெள்ளவத்தை, ஜெயம் ஷென்ரர்ஸ் புடைவையகம் - மாத்தளை, ஜெயம் ஷென்ரர்ஸ் புடைவை வியாபார நிலையம் - புதுக்குடியிருப்பு.)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், 138/4A, பிரதான வீதி, மாத்தளையை தற்காலிக வசிப்பிடமாகவும், இல.137, தெற்கிலுப்பைக் குளம் 09ஆம் ஒழுங்கை பிள்ளையார் கோயிலடி, வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் சிவநடராசா 28.11.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-இராசமணி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற இலட்சுமணர்-தங்கச்சி அம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயரத்தினம் (லண்டன்), சிவனேஸ்வரி (பிரான்ஸ்), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), சிவறஞ்சினி (கனடா) ஆகியோரின் பேரன்புமிக்க தகப்பனும், சுஜீபா (லண்டன்), ஜெயராஜா (பிரான்ஸ்), நிர்த்தன் (கனடா) ஆகியோரின் அருமை மாமனும், வாகீசன், சிந்துஜா, ஜெயதீஸ் (பிரான்ஸ்), மிதுஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற இந்திரராசா மற்றும் சந்திரராசா (பிரான்ஸ்), சற்குணராசா (லண்டன்), தவமலர் (சுழிபுரம்), மதிவதனி (ஜேர்மனி), வர்ணமகாராசா (பிரான்ஸ்), சிவானந்தராசா (பிரான்ஸ்), நித்தியானந்தராசா (கனடா), சிறீஸ்கந்தராசா (வவுனியா), வசந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கோவிற்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெற்கிலுப்பைக் குளம்,
வவுனியா.

(66577) (10.17)

தகவல்:
குடுபத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பந்தால் தாக்கப்பட்ட நடுவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு




ராஞ்சி கிண்ணத்தொடரில் பந்தால் அடிபட்ட ஆஸ்திரேலிய நடுவர் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ராஞ்சிக் கிண்ணத் தொடரில் பஞ்சாப் மற்றும் தமிழக அணிகள் மோதிய ஆட்டத்தில் பஞ்சாப் அணியின் பரிந்தரன்சிங் சரண் துடுப்பெடுத்தாட தமிழக வீரர் சந்திரசேகர் பந்து வீசினார். இந்தப் பந்தை பரிந்தரன் சிங் சரண் அடித்த போது அது வேகமாகச் சென்று ஆஸ்திரேலிய நடுவர் ஜான் வேர்டின் இடது காதுக்குப் பின்னால் தலையில் தாக்கியது. இதில் அவர் மைதானத்திலேயே சுருண்டு விழுந்து மயக்கமடைந்தார். மருத்துவ பரிசோதனையில் அடிபட்ட இடத்தில் ரத்தக்கட்டு இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் அவர் தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

# சர்ச்சைக்குரிய நாக்பூர் ஆடுகளம் விளக்கம் தருமாறு ஐ.சி.சி. தெரிவிப்பு



நாக்பூர் ஆடுகளம் தொடர்பாக விளக்கம் தருமாறு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் கேட்டுள்ளது.

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நாக்பூரில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் ஆட்டம் மூன்று நாட்களில் முடிவடைந்தது. தென்னாபிரிக்காவின் அத்தனை இலக்குகளையும் சுழற்பந்து வீச்சாளர்களே கைப்பற்றினர். இந்நிலையில் நாக்பூர் ஆடுகளம் மிகவும் மோசமான ஆடுகளம் என ஐ.சி.சி. தெரிவித்துள்ளதுடன் குறித்த ஆடுகளத்தைப் பற்றிய முழு விவரத்தையும் 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும்படி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

நாக்பூர் ஆடுகளம் தொடர்பான சர்ச்சைகள் இவ்வாறிருக்க இன்று ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட் ஆட்டத்திலும் முற்றிலும் சுழலுக்கு சாதகமான ஆடுகளமே அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம)

## மெக்ராத், முரளிதரன் பந்துவீச்சில் மிகுந்த சிரமப்பட்டேன் - ராவிட்

தனது கிரிக்கெட் வாழ்க்கையில் மெக்ராத், முரளிதரன் ஆகியோரது பந்து வீச்சை எதிர்கொள்வதுதான் சிரமமாக இருந்ததாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

ராவிட் தனது நேர்காணலில் :- கிரிக்கெட்டுக்கு அழகு பொறுமை. பொறுமைக்கான ஆட்டம் டெஸ்ட் ஆட்டம். இன்றைய வீரர்களில் பொறுமையை காணக்கிடைப்பதில்லை. நான்கு பந்துகளை வீணடித்து விட்டால் ஐந்தாவது பந்தின் தன் மையை அறியாமலே அடித்தாட முற்படுகின்றனர். எங்கள் காலத்தில் அவ்வாறில்லை. துடுப்பாட்டத்தை நான் மிகவும் நேசித்தேன். ஒவ்வொருநாளும் எனது துடுப்பாட்டத்தை நுட்பமாகக் கற்றுக்கொண்டேயிருந்தேன். என்னைப்பொறுத்தவரை ஒருநாள் ஆட்டங்களை விட டெஸ்ட் ஆட்டங்களே சிறந்



தவை. எந்தப் பந்துவீச்சாளருக்கும் நான் அஞ்சியதில்லை. ஆனால் சுழல் பந்துவீச்சில் முரளியும் வேகப்பந்து வீச்சில் மெக்ராத்தும் எனக்குச் சவாலாக இருந்தனர். ஆனால் இவர்கள் இருவரதும் பந்துவீச்சுக்களை சச்சின் கணித்து ஆடக்கூடியவர் என்றார். (ம)



# லையனின் ஆட்டமிழப்புச் சர்ச்சை நியூசியிடம் மன்னிப்புக் கேட்டது ஐ.சி.சி.

கிரிக்கெட் வரலாற்றின் முதல் பகலிரவு டெஸ்ட் ஆட்டம் அடிலெய்டில் நடைபெற்றது. இந்த முதல் ஆட்டத்திலேயே லையனின் ஆட்டமிழப்புச் சர்ச்சை கிரிக்கெட் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாக ஆகியிருக்கிறது. லையன் ஆட்டமிழப்பல்ல என்று தீர்வானது தவறு என்றும் அவர் ஆட்டமிழப்புத்தான் என்றே தீர்வாகியிருக்க வேண்டும் என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளது ஐ.சி.சி.

முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 202 ஓட்டங்களில் சுருண்டது. தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலியா 110 ஓட்டங்களைக் கடப்பதற்குள் 8 இலக்குகளை இழந்து தத்தளித்தது. 9ஆவது இலக்குக்கு நாதன் லையன் களம் இறங்கினார். இவர் ஓட்டங்கள் ஏதும் எடுக்காத நிலையில், கிரைக்கின் பந்தில் வில்லியம்சனிடம் பிடி கொடுத்தார். ஆனால், இந்தியாவைச்சேர்ந்தமைதான நடுவர் ரவி ஆட்டமிழப்பை கொடுக்க மறுத்துவிட்டார். இதனால், நியூசிலாந்து மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டது. பரிசீலனையில் ஹொட்ஸ்பொட் முறையில் ஆட்டமிழப்பு எனவும் ஸ்னிக்கோமீற்றரில் (அதிர்வலையை வைத்து ஆட்டமிழப்பை கணிக்கும் சாதனம்.) ஆட்டமிழப்பு அல்ல எனவும் தெரியவந்தது. முடிவில் ஆட்டமிழப்பு அல்ல என்று தீர்ப்பாகியது.

இதனால் நாதன் லையன்-நெவில் இணை 9ஆவது இலக்குக்கு 74 ஓட்டங்களைக் குவித்தது. இதனால் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 224 ஓட்டங்களைச் சேர்த்து 22 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. லையனின் ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டிருந்தால் நியூசிலாந்து இந்த டெஸ்டில் வெற்றிபெற்று தொடரை சமன் செய்திருக்கும்.

இதனால் நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை குறித்த விடயத்துக்கு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் விளக்கம் கேட்டிருந்தது. சர்ச்சை தொடர்பான வீடியோவைப் பரிசீலித்த ஐ.சி.சி. லையன் ஆட்டமிழந்தார் என்றே தீர்வாகியிருக்க வேண்டும். மூன்றாம் நடுவரின் முடிவு தவறு என்று தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையே இறுதியாக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் டோனியின் இவ்வாறான ஓர் சர்ச்சை ஆட்டமிழப்பு எனத் தீர்வாகியது. அதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஏற்றுக்கொண்டது. டோனியும் ஏற்றுக் கொண்டார். அந்த வகையில் பார்க்கப் போ[illegible]லும் லையன் ஆட்டமிழப்பு என்றே தீர்வாகியிருக்க வேண்டும். (மு)

## தங்கப் பந்து யாருக்கு?

நடப்பு வருடத்தின் தங்கப்பந்து விருதுக்கான இறுதிப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பார்சிலோனாவின் மெஸ்ஸி, நெய்மர் மற்றும் ரியல் மட்ரிட்டின் ரொனால்டோ ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

இந்த மூவரில் ஒருவரை உதைபந்து பத்திரிகையாளர்கள், தேசிய அணியின் பயிற்சியாளர்கள் ஆகியோர் வாக்களித்து ஜனவரி 11ஆம் திகதி தெரிவுசெய்வார்கள். இவர்களில் மெஸ்ஸி நான்கு தடவையும் ரொனால்டோ மூன்று தடவையும் இந்த விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




## ஐ.சி.சியின் சிறந்த டெஸ்ட் அணியில் இலங்கை, இந்திய வீரர்கள் இல்லை

நடப்பு வருடத்துக்கான சிறந்த டெஸ்ட் அணியை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது. இதில் இந்திய, இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. 12ஆவது வீரராக அஸ்வின் இடம்பெற்றுள்ளார். இந்த அணிக்கு இங்கிலாந்து அணியின் தலைவராக குக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். குக் இரண்டாவது முறை [illegible]சிறந்த டெஸ்ட் அணிக்கு தலை[illegible] தெரிவு செய்யப்படுகிறார். இங்கிலாந்து அணியை சேர்ந்த ஸ்டுவேர்ட் பிரோட், ஜோ ரூட் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். அதேபோல், ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித், டேவிட் வோர்னர் உள்ளிட்டோரும், நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் போல்ட் மற்றும் வில்லியம்சன், பாகிஸ்தான் அணியில் யுனிஸ்கான், இலக்குக் காப்பாளர் சர்பராஸ் அகமது, [illegible] பந்துவீச்சாளர் யாசிர் சா ஆகியோ[illegible]ம் ஐ.சி.சி. அறிவித்துள்ள இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவியரிடம் வீழ்ந்தது கழுகுகள்

கரணவாய், டிசெ. 3
வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை 4:2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல் பாதியிலேயே இருஅணியினரும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்து அசத்த ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

இரண்டாம் பாதியில் கழுகுகளால் தொடர்ந்து ஆதிக்கத்தைத் தொடர முடியவில்லை. சேவியர் மேலும் இரு கோல்களைப் பதிவுசெய்ய 4:2 என்று வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது அந்த அணி. (ம-108



# கொக்குவில் இந்து அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 3
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் வத்தளை இலேசியம் அணியை வீழ்த்தியுள்ளது கொக்குவில் இந்துக்கல்லூரி.
பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் தேசிய ரீதியாக நடத்தும் 15வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றுவருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வத்தளை இலேசியம் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 46:39 என்றபுள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இன்று இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி அணியுடன் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# கண்ணன் இளைஞர் கழக கரப்பந்தாட்ட திடலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 3
இளைஞர் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேசத்தில் பொன்னகர் வடக்கு கண்ணன் இளைஞர் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடல் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொன்னகர் கிராம சேவையாளர் திருமதி வி.ஜெயதரன், மாதர் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் சி.சறோஜாதேவி, மாதர் கிராம அபிவிருத்திச்சங்க செயலர் சி.புவனேஸ்வரி, இளைஞர் சேவைகள் அலுவலர் சி.மயூரன், இளைஞர் கழகத் தலைவர் சி.பிரதீபன், அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பாலரமேஸ், கிராம அபிவிருத்தி செயலாளர் ச.மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)



இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட பிரிவு இரண்டிற்கான உதைபந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மண்டபத்தில் இடம்பெற்றது. (ம-108-422)

# டயமன்ஸ், யங்கம்பன்ஸ் அணிகள் அரையிறுதி வாய்ப்பை அதிகப்படுத்தின

கரணவாய், டிசெ. 3
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக உதைபந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களுக்கான வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளன.

> "வெற்றிபெற்றால் அரையிறுதிக்கான வாய்ப்பு அதிகமாகும் நிலை. முழுமையாக பத்து நிமிடங்கள் முடிய முன்னர் டயமன்ஸ் 3 கோல்களைப் பதிவு செய்தது. தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அந்த அணி முதல்பாதி முடிவதற்கு முன்னர் 5-0 என முன்னிலை வகித்தது."

**டயமன்ஸ் - நியூட்டன்**

கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் அரையிறுதிக்கான வாய்ப்பு அதிகமாகும் நிலை. முழுமையாக பத்து நிமிடங்கள் முடிய முன்னர் டயமன்ஸ் 3 கோல்களைப் பதிவுசெய்தது. தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அந்த அணி முதல்பாதி முடிவதற்கு முன்னர் 5-0 என முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் முடிவில் 8:0 என்று வெற்றி பெற்று அரையிறுதிக்கான வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது. அவ்வணியின் சார்பாக துசி 5 கோல்களையும் லக்கி 2 கோல்களையும் மது ஓர் கோலையும் பதிவு செய்தனர்.

**கொலின்ஸ் - யங்கம்பன்ஸ்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. கோல்கள் எவையும் பதியப்படாமல் முடிந்தது முதல்பாதி. இரண்டாம் பாதியில் வீறுகொண்டெழுந்த யங்கம்பன்ஸ் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் பதிவு செய்து 3:0 என அரையிறுதிக்கான வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது. (ம-108)

# மகாஜனக் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 3
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும் குருநாகல் மல்லிகாதேவி மகாவித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட நட்பு ரீதியிலான உதைபந்தாட்டத் தொடரில் மகாஜனக்கல்லூரி வெற்றிபெற்றுள் ளது.
நேற்று முன்தினம் மகாஜனக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் ஆண்களுக்கான ஆட்டத்தில் 2:0 என்ற கோல்கணக்கிலும், பெண்களுக்கான ஆட்டத்தில் 3:0 என்ற கோல்கணக்கிலும் மகாஜனக்கல்லூரி வெற்றி பெற்றது. (ம-23)



தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட அமெரிக்கன் உதைபந்தாட்டத் தொடரில் மூன்றாம் இடத்தைப் பெற்றது யாழ்ப்பாணம் வூல்ப் அணி. குறித்த தொடருக்காக யாழ். மாவட்டத்தில் இருந்து வாரியர்ஸ், ஈகிள்ஸ் அணிகளும் கலந்து கொண்டிருந்தன. வாரியர்ஸ் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. (ம-23)

# 41ஆவது தேசியமட்ட பளுதூக்கல் தொடர்
## வடமாகாணத்துக்கு வெள்ளியும் வெண்கலமும்

யாழ்ப்பாணம், டிசெ. 3
தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் வட மாகாணத்துக்கு ஓர் வெள்ளியும் ஓர் வெண்கலப் பதக்கமும் கிடைத்துள்ளன.
41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான பளுதூக்கல் போட்டி கொழும்பு டொறிங்ரன் உள்ளரங்கில்இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் ஆசிகா 58 கிலோ எடைப்பிரிவில் 130 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கத்தையும், டினேஜா 63கிலோ எடைப் பிரிவில் 115 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். ஆண்களுக்கான போட்டி இன்று இடம்பெறவுள்ளது. (ம-23)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்கு எதிரான நியூசி. அணியே இலங்கைத் தொடரிலும் தொடர்கிறது

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான நியூசிலாந்து அணியில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இடம்பிடித்த அதே வீரர்களே தொடருவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸிக்கு எதிரான தொடரில் மூத்த வீரர்களாக கிறைக், குப்தில் இருவரும் படுமோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். குப்தில் ஆறு இன்னிங்ஸ்களில் ஒன்றில் கூட 25 ஓட்டங்களை முழுமையாக எட்டவில்லை. இரண்டுதடவைகள் ஓர் ஓட்டத்துடனும் ஒரு தடவை ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்திருந்தார். அதே போல் கிறைக் பெரிதளவில் பிரகாசிக்கவில்லை. அவர் வீழ்த்திய இலக்குகளில் பெரும்பாலானவை பந்துவீச்சாளர்களின் சவாலற்ற இலக்குகளே இதனால் இவர்கள் இருவரும் இலங்கைத் தொடரில் நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதே அணியே தொடரும் என்பது போன்ற செய்திகள் வெளிவந்துள்ளன. (ம)




# இறுதி டெஸ்ட் இன்று

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் இன்று டெல்லியின் கோட்லா மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் கிண்ணம் இந்தியாவிடமே செல்லும். ஆனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றால் தரப் படுத்தலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறலாம்என்பதால் வெற்றிபெறும் முனைப்பில் இந்தியா தீவிரம் காட்டும். தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெயின் முதுகுவலி காரணமாக இன்றைய ஆட்டத்தில் இருந்து விலகியுள்ளார். (ம)

NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna.
G.C.E. (A/L) 2016 & 2016 Day
CHEMISTRY
Sectional Classes

| | |
|---|---|
| இரசாயன இயக்கவியல் (சனி. ஞாயிறு 6.00 - 7.30 pm) | ஆரம்பம்:- 05.12.2015 சனி |
| அசேதன இரசாயனம் (புதன். வியாழன் 6.00 - 7.30 pm) | ஆரம்பம்:- 09.12.2015 புதன் |

By: MR.T. SIVAKUMAR B.Sc,PGDE



# சானியா-கிங்கிஸ் இணை தொடர்ந்தும் முதலிடத்தில்

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் பெண்களுக்கான இரட்டையர் பிரிவு தரப்படுத்தலை வெளியிட்டுள்ளது. இதில் சானியா மிர்சா - கிங்கிஸ் இணை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சானியா - கிங்கிஸ் இணைக்கும் இரண்டாவது இடத்தில் உள்ள சபரோவா - பெத்தானி இணைக்கும் இடையே கிட்டத்தட்ட 4ஆயிரம் புள்ளிகள் வேறுபாடு காணப்படுகிறது. இதன்படி சானியா- கிங்கிஸ் இணை 11ஆயிரத்து 355 புள்ளிகளையும் சபரோவா - பெத்தானி இணை 7ஆயிரத்து 450 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். நடப்பு வருடத்தில் மட்டும் சானியா -கிங்கிஸ் இருவரும் இணைந்து ஏழு இரட்டையர் கிண்ணங்களை வென்றிருந்தனர். இவற்றுள் இங்கிலாந்தின் விம்பிள்டனும் அடங்கும். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.